03 தலைவரின் மர்ம மரணம் தொடர்பான சந்தேகங்களும் சவால்களும்!

04 சுயநிர்ணய உரிமையும் முஸ்லிம் தேசியமும்

05 தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர்! காதர் சேருக்கு ஒரு திறந்த மடல்!

07 யார் பயங்கரவாதி?
குற்றுயிரும் கொலையுயிருமாயிருக்கும் ஈராக்கா? ஆயுதமே சொத்தாக - கொலை செய்வதே தொழிலாக வாழும் அமெரிக்காவா?

بسم الله الرحمن الرحيم

# முஸ்லிம் குரல்

வாரமத்தி இதழ்
Mid Week Journal
Muslim Kural
මුස්ලිම් කුරල්

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வாரயிதழாக மக்கள் கருத்துக்களுடன்!

☆ 28 பெப்ரவரி 2003 - வெள்ளிக்கிழமை ☆ 26 - துல்ஹஜ் - 1423 ☆ சுவடு - 02. ☆ Registered as a Newspaper in Srilanka ☆ தருகை - 10 ரூபா

# புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற பெயரில் முஸ்லிம்களை ஏமாற்றி ஒரு வருடப்பூர்த்தி!

## நமது அரசியல் தலைமைகளின் கையாலாகத்தனம்!!

(நமது அரசியல் செய்தியாளர்)

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானத்தின் பெயரால் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கை தனது ஒரு வருட ஆயுள் காலத்தை எட்டியுள்ளது. இப்புரிந்துணர்வு உடன்படிக்கை முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளையும், அபிலாசைகளையும், பாதுகாப்பு, இருப்பினையும் முற்றாகப் புறம்தள்ளி தேசிய இனப்பிரச்சினையில் நேரடியாக சம்பந்தப்படாத தரப்பாக முஸ்லிம்களை அரசியல் அர்த்தத்தில் குறித்து நிற்கிறது. இப்புரிந்துணர்வு உடன்பாட்டின் ஊடாக நமது மக்களின் அரசியல் உரிமைகளை, நலன்களை முற்றாக அரசாங்கம் உதாசீனப்படுத்தி கபடத்தனமாக மூடி மறைத்துள்ளதை நாமனைவரும் அறிவோம்!

இப்புரிந்துணர்வு உடன்பாடு அமுலில் இருந்த காலப்பகுதியில்தான் முஸ்லிம்களின் பாதுகாப்பினையும் இருப்பினையும் பெருமளவு கேள்விக்குட்படுத்திய வாழைச்சேனை இன அழிப்பும் வடக்கு கிழக்கில் முஸ்லிம்களின் மீதான பொருளாதார அழிவுகளும் அரங்கேற்றப்பட்டன. இப்புரிந்துணர்வு உடன்படிக்கையை காரணம் காட்டியே பாதுகாப்பு படையினர் முஸ்லிம்களை பாதுகாப்பதில் இருந்து தவறினர். இப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் முஸ்லிம்களை பாதுகாப்பதற்கான எவ்விதமான உத்தரவாதமும் இல்லை என்பது செயலளவில் நிருபணமாகியுள்ளது. முஸ்லிம் அரசியல் தலைமைகளை கலந்தாலோசியாது அவர்களின் சம்மதம் பெறப்படாது; அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நோர்வேயும் தங்களது நலன்களை கறாராக உறுதிப்படுத்திக் கொண்ட ஆவணமாகவே இப்புரிந்துணர்வு உடன்படிக்கை அமைந்துள்ளது.

இப்புரிந்துணர்வு ஆவணம் முஸ்லிம் மக்களை முற்றுமுழுதாக புறக்கணித்துவிட்டது என்பதை நமது அரசியல் அரங்கில் நமது மக்கள் ஏலவே பல்வேறு தடவைகள் வெளிப்படுத்தப்பட்டு விட்டனர். சர்வதேச சமூகத்திற்கும் இலங்கையின் அரசியல் சக்திகளுக்கும் நாம் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முற்று முழுதாக நிராகரிக்கிறோம் என்பதையும் நமது மக்கள் தெளிவாகச் சொல்லியும் விட்டனர். இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அரசியல் சூழலும் - அதன் முக்கியத்துவமும் இலங்கை அரசியலில் பல்வேறு திருப்பங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் காரணமாக அமைந்தன. அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான தொடரும் சமாதானப் பேச்சுவார்த்தையின் அடிப்படையே, இப்புரிந்துணர்வு உடன்படிக்கைதான் என்பதை நாமறிவோம்!

இப்புரிந்துணர்வு உடன்படிக்கை நமது மக்களின் அரசியல் அபிலாசைகளை கொச்சைப்படுத்தி, திட்டமிட்டு கபடத்தனமாக புறக்கணித்துள்ளது என்பதை நமது அரசியல் தலைமைகள் நன்கு அறிந்தும் புரிந்தும், இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீள் திருத்தத்திற்கு உட்படுத்துவதற்கு ஆணித்தரமான எந்தவிதமான அரசியல் அழுத்தங்களையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. நமது அரசியல் தலைமைகளின் தொடரும் அசட்டுத்தனமான மௌனங்களும் ஒரு தலைப்பட்சமாக இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கடந்த ஒருவருட காலமாக ஏற்றுக்கொண்டதன் மூலமும் இவர்களின் கையாலாகத்தனம் நமது மக்களின் மத்தியில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

இப்புரிந்துணர்வு உடன்படிக்கை மீதான நமது மக்களின் அரசியல் உணர்வுகளையும் பிரதிபலிப்புக்களையும் ஒன்று திரட்டி வெகுஜனப் போராட்டமாக நமது அரசியல் தலைமைகள் இதுவரை முன்னெடுக்கவில்லை. "முஸ்லிம்களுக்கு பாதகமாக எதுவுமே நடைபெறவில்லை" என்ற புத்திபேதலிப்பில் தங்களுக்கிடையேயான அதிகாரப் போட்டியில் சிக்கித் தவித்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களின் நலன்களை இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் உறுதிப்படுத்தவில்லை என வடக்கு கிழக்குத் தழுவிய வெகுஜன போராட்டத்தை தமிழ் அரசியல் சூழல் மக்கள் போராட்டமாக கடந்த பெப்ரவரி 22ல் வெளிப்படுத்தியுள்ளது. இத்தினத்தில் தமிழ் பிரதேசம் எங்கும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான அதிருப்தியை வெளிப்படுத்தும் முகமாக பூரண எதிர்ப்பு நடவடிக்கைகள் முடக்கி விடப்பட்டன. அதேநேரம் படைகளும், அரசும் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான கொண்டாட்டங்களை நாடு முழுவதும் சமாதான தீபம் ஏற்றுவது, சமாதானக் கொண்டாட்டம் என நடாத்தியது.

உண்மையில் இப்புரிந்துணர்வு உடன்படிக்கையினால் மோசமாக பாதிக்கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் சார்பில் அதன் அரசியல் தலைமைகள் நமது மக்களின் அரசியல் உணர்வுகளை ஒன்றுதிரட்டி வெளிப்படுத்தாது மௌனம் காத்தது கண்டிக்கப்பட வேண்டியது என்பது நமது மக்களின் நலனில் அக்கறை கொண்டோரின் ஆணித்தரமான அரசியல் நிலைப்பாடாக உள்ளது.

# தலைவரின் மரணத்தின் பின்னால் பெரும் சதியே உள்ளது!

## முஸ்லிம் குரலுக்கு ஹரீஸ் எம்பியின் விசேட பேட்டி

மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் மரணம் தொடர்பாக ஏற்பட்டுள்ள சந்தேகங்கள் துப்புத் துலக்கப்படாமல் தொடர்ந்தும் மூடி மறைக்கப்பட்டு வருகின்ற நிலைமைகள் எமது மக்கள் மத்தியில் மேலும் சந்தேகங்களையே அதிகரித்து வருகின்றன. இச்சந்தேகங்களைப் போக்க வேண்டிய பொறுப்பு குறிப்பாக இன்றைய ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திற்கு உள்ளது.

மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் மரணமும் அதன் பின்பு ஏற்பட்ட சந்தேகங்களும் இம்மரணம் தொடர்பாக அன்றைய அரசாங்கத்தின் மௌனமான போக்குமே 2001 இல் சந்திரிகாவின் அரசாங்கம் பதவி கவிழ்வதற்கான முக்கிய காரணமாக இருந்தது. எமது மக்கள் சந்திரிகா அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழப்பதற்கு தலைவரின் மரணம் மீதான மௌனமே காரணமாகவிருந்தது.

அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தலைவர் அஷ்ரஃப்பின் மரணம் தொடர்பாக உரிய விசாரணை நடாத்தி உண்மைகளை பகிரங்கப்படுத்துவோம்" என ஆட்சிக்கு வருவதற்கு முன் பல முறை உறுதி அளித்திருந்தார். கல்முனை, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில், நமது மக்கள் முன் இவ்வாக்குறுதியை அளித்திருந்தார்.

ஆனால், ஐக்கிய தேசிய முன்னணியும் ரணில் விக்கிரமசிங்காவும் ஆட்சிக்கு வந்ததன் பின் தலைவரின் மரணம் தொடர்பாக மக்கள் மத்தியில் உள்ள சந்தேகங்களைப் போக்குவதற்கான எந்தவிதமான ஒரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இது தொடர்பாக பல தடவைகள் நாங்கள் அவரைச் சந்தித்து வலியுறுத்தியும் இதற்கு எந்தவிதமான உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

அதே நேரத்தில் சமாதான பேச்சுவார்த்தை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடங்கியதன் பின்னர், விடுதலைப் புலிகளின் பகிரங்கமான செயற்பாடுகள் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இடம்பெறத் தொடங்கியது. தலைவர் அவர்களுடன் விமானத்தில் பயணம் செய்து மரணித்த கதிர்காமத் தம்பி தொடர்பான விடுதலைப் புலிகளின் அணுகுமுறைகளும் அவரது குடும்பத்திற்கு விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்டு வரும் கௌரவமும், மதிப்பும் எங்களைப் பொறுத்தவரை தலைவரின் மரணம் தொடர்பான சந்தேகங்களையும், பின்னணிகளையும் பலமாக்குகின்றன.



கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களாகவும், வேட்பாளர்களாகவும் போட்டியிட்ட செழியன் பேரின்பநாயகம், மனோகரன் பிள்ளை போன்றோர்கள் துரோகிகளாகச் சுட்டுக் கொல்லப்பட்ட காலத்திலும் கதிர்காமத் தம்பி அவர்கள் மிகப் பகிரங்கமாக பொதுஜன ஐக்கிய முன்னணி - நூஆவின் பிரதிநிதியாக செயற்பட்டுக் கொண்டிருந்தார். கதிர்காமத் தம்பியின் மரணத்தின் பின் துரோகிகளாக்கப்பட்ட பட்டியலில் செழியன் பேரின்பநாயகம், மனோகரம்பிள்ளையுடன் கதிர்காமத்தம்பியும் சேர்க்கப்பட்டிருப்பார் என்பதே தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், கதிர்காமத் தம்பியோ துரோகியாக இல்லாமல் தேசிய கௌரவமிக்கவராக புலிகளினால் நிலை நிறுத்தப்பட்டு வருகிறார். இந்நிலைமையானது முற்றிலும் மாறுபட்டதாகும்.

கதிர்காமத்தம்பியின் குடும்ப உறுப்பினர்களான மகன்மாரில் ஒருவருக்கு விடுதலைப் புலிகளின் காரைதீவு அலுவலகத்தில் முக்கிய பொறுப்பும், இன்னொரு மகனுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையில் தொழில் வாய்ப்பும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினராக உள்ள என்னாலேயே ஒரு தொழில் வாய்ப்பினை கூட வழங்க முடியாதுள்ள நிலையில் கதிர்காமத் தம்பியின் மகனுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையில் தொழில் வாய்ப்புப் பெற எப்படி முடிந்தது? இந்தத் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டதன் பின்னணியில் முக்கிய அரசியல் சக்திகளின் கைகள் உள்ளன என நிச்சயமாக நம்பலாம்.

ஒரு கேள்விக்காக இத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் மத்தியில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் வேலைவாய்ப்புகள் இல்லாமல் இருக்கும் போது, ஏன் கதிர்காமத்தம்பியின் மகன்மாருக்கு மட்டும் இந்தச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்ற கேள்வி மிக நியாயமாக முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

தலைவரின் மரணம் தொடர்பான பிரதம மந்திரியின் வாக்குறுதி தொடர்ந்தும் நிறைவேற்றப்படாது இழுத்தடிக்கப்படுவது சந்திரிகாவினதும், ரத்வத்தை மீதும் இருந்த சந்தேகங்கள் அகல்வதற்கும், வேறு சக்திகள் இம்மரணத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கலாம் என்கின்ற மனோ நிலையை மக்கள் மத்தியில் வலுப்பெறச் செய்வதற்கும் ஏற்புடைய காரணங்களாக அமைந்து வருகின்றன.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளும் இச்சந்தேகங்களுக்கு வலுவூட்டி வருகின்றது. இதன் காரணமாக குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் மத்தியில் தலைவரின் மரணம் சம்பந்தமான சந்தேகங்களுக்கு நியாயமான விசாரணைகள் நடைபெற வேண்டும் என்ற கருத்து மக்கள் மத்தியில் இருந்து பரவலாக எங்கள் மீது அழுத்தமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூஃப் ஹக்கீம் கல்முனை, சாய்ந்தமருது பிரதேசங்களில் கலந்து கொண்ட கூட்டங்களில் பகிரங்கமாக

➡ 02





# சமாதான பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வதற்கு இதுவரை அரசாங்கம் எந்தவிதமான தீர்மானத்தையும் எடுக்கவில்லை!

*-பிரதமரின் அரசியல் வட்டாரம் தெரிவிப்பு*

எதிர்வரும் மார்ச் 18ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை டோக்கியோவில் ஆறாம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. இப்பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வதற்கான அரசியல் அழுத்தத்தை வழங்குவதை நோக்காகக் கொண்டு வடக்கு, கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பொன்று அண்மையில் உருவாக்கப்பட்டது.

இக்கூட்டமைப்பின் உருவாக்கமானது சமகால நமது அரசியல் அரங்கில் மிக முக்கியத்துவமிக்க விடயமாகவும் அமைந்திருந்தது. கட்சி அரசியலினால் பிளவுண்டு நிற்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை, முஸ்லிம்களுக்கு நியாயமாக உரித்தாக வேண்டிய அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்காக ஓரணியில் ஒன்று சேர்ப்பதற்கான இம்முயற்சி நமது சமூக மட்டத்தில் அதிக எதிர்பார்ப்பினை தந்திருந்தது.

முஸ்லிம் பாராளுமன்ற கூட்டமைப்பை உருவாக்குவதில் அமைச்சர் நூர்தீன் மஸூர், பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் முயற்சி எடுத்தனர். கூட்டமைப்பின் கூட்டமொன்று அண்மையில் பாராளுமன்ற கட்டிடத்தில் நடாத்தப்பெற்று முஸ்லிம் பாராளுமன்ற கூட்டமைப்பும் உருவாக்கப்பட்டது.

இலங்கை முஸ்லிம்களின் இன்றைய பிரதான அரசியல் இலக்கான பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்கள் சமத்துவத்துடன் கூடிய தனித் தரப்பாக பங்குபற்றும் முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாட்டினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து

➡ 07

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபைர்தீன் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் மாற்று அணியின் மீதான தடை காலவரையின்றி நீடிப்பு!

முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஏற்பட்டுள்ள தீவிர தலைமைத்துவ முரண்பாடுகளையும், பிளவினையும் அடுத்து எழுந்த தலைமைத்துவப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக தொடரப்பட்ட பல வழக்குகளில் ஒன்றுக்கான தீர்ப்பு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

ஹக்கீமின் தலைமையை நிராகரித்து, சுபைர்தீன் தலைமையிலான மாற்று அணியினர் அக்கரைப்பற்று கலாசார மண்டபத்தில் நடத்திய பேராளர் மாநாடும், அம்மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட அரசியல் சபையும் செல்லுபடியற்றது என்றும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக ரவூஃப் ஹக்கீம் மட்டுமே செயற்பட வேண்டுமெனவும் கோரி ஹக்கீமினால் தொடரப்பட்ட வழக்கு கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வந்தது. பல்வேறு தவணைகளில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட இவ்வழக்குக்கான தீர்ப்பு ஒத்திப்போடப்பட்டு வந்தது யாவரும் அறிந்தது. வழக்குக்கான தீர்ப்பு ஒத்திப் போடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுபைர்தீன் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் மீது தற்காலிகமான தடை நீடிக்கப்பட்டே வந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டத் தீர்ப்பின்படி சுபைர்தீன் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸுக்கு காலவரையின்றி தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வரும் பல வழக்குகளில் "கட்சிக்கு உரித்துடையவர் யார்?" என்ற பிரதான வழக்கின் தீர்ப்பு வரும் வரை, இத்தடை உத்தரவு நீடிக்குமென சட்டவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வழக்கு தீர்ப்பினை எதிர்த்து சுபைர்தீன் தலைமையிலான மாற்று முஸ்லிம் காங்கிரஸ் அணியினர் மேல் முறையீட்டு நீதிமன்றம் செல்லவுள்ளதாக தெரிய வருகிறது. இனி இவர்கள் எதிர்காலத்தில் தடைமீதான தீர்ப்பு வரும்வரை என்ன செய்யப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இத்தீர்ப்பின் தாக்கத்திலிருந்து இவர்கள் இன்னும் விடுபடாத சூழலில், இத்தீர்ப்புக் குறித்து ஹக்கீம் தலைமை அதிக மகிழ்ச்சி கொண்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.



## மக்களிடமிருந்து மனுக்கள்... நடவடிக்கைக்காக......

### ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையின் அவலநிலை!

இவ்வைத்தியசாலை இவ்வூரையும் இவ்வூரின் அண்டிய ஏனைய கிராமங்களான மீராகேணி, சதாம் ஹுஸைன், தளவாய், ஐயங்கேணி, குடியிருப்பு போன்ற பகுதிகளில் வசிக்கும் பொது மக்களும் சிகிச்சைக்காக வந்துசெல்லுகின்றனர். நாளாந்தம் ஏறாத்தாழ 1300 நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர். இது மாவட்ட வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டிருந்தாலும் கூட இங்கு அதற்கான அடிப்படை வசதிகள் எதுவுமில்லாதிருப்பது பெரும் கவலைக்குரிய விடயமாக உள்ளது.

இவ்வைத்தியசாலையில் ஆண், பெண், சிறுவர், மகப்பேற்று வார்ட்டுக்கள் என்பன பழையகட்டிடங்களிலேயே இயங்கி வருகின்றது. நோயாளிகள் தங்குவதற்கு இடவசதிகளின்றி வெற்றுத் தரையிலிருந்து சிகிச்சை பெறும் அவலநிலையும் உள்ளது. அத்துடன் இப்பகுதி கர்ப்பிணித் தாய்மார்கள் தங்களின் மகப்பேற்றுக்காக இங்கு வரும் சமயம் அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத நிலையில் பெரும் துயருக்குள்ளாகுவதுடன், இவர்களை மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றது.

இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் ஆபத்தான நிலைக்குள்ளாக்கப்படுவதுடன் தாய்மார்களும், சிசுக்களும் மரணமடையும் சூழ்நிலையும் ஏற்படுகின்றன. இவ் அவலநிலையை அரசியல் வாதிகள் யாரிடமும் முறையிட்டும் உரிய பலன் கிடைக்காததையிட்டு இப் பகுதி மக்கள் விசனம் தெரிவிப்பதுடன் இனியாவது இம்மருத்துவமனையில் நிலவும் சீர்கேடுகளை நிவர்த்தி செய்துதர உரிய அரசியல் வாதிகளும் உயர் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோருகின்றனர்.

*தலைவர் யூ.எல்.முகைதீன் பாவா. ஜே.பி., அஷ்ரஃப் நற்பணி மன்றம், ஏறாவூர்.*

### தலைவரின் மரணம்....

கூட்டங்களில் பகிரங்கமாக தலைவரின் மரணம் தொடர்பான விசாரணையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை மௌனமாக தொடர்ந்தும் இருக்க முடியாது என நான் வலியுறுத்தினேன். இன்றும் இதனையே நான் வலியுறுத்தவும் விரும்புகின்றேன்.

தலைவரின் மரணம் தொடர்பான மர்மம், தொடர்ந்தும் நீடித்துச் செல்வதானது அவரது கட்சியின் பாசறையில் வளர்ந்த எங்களைப் போன்றவர்களுக்கு பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே, உடனடியாக இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் உரிய நடவடிக்கையில் இறங்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை இந்த விடயத்தில் தொடர்ந்தும் மௌனமாக இருப்பது, ரவூஃப் ஹக்கீம் அவர்கள் அமைச்சராக இருப்பதனால், அமைச்சரவை கூட்டுப் பொறுப்பினை மீற முடியாது என்ற காரணத்தினால் தான். இந்த விடயத்தில் அரசாங்கத்தைக் காட்டிக் கொடுக்க முடியாத தர்மசங்கடமான நிலையில்தான் ரவூஃப் ஹக்கீம் இருக்கின்றார் என நான் நினைக்கின்றேன்.

தலைவரின் மரணம் தொடர்பாக நான் வலியுறுத்திக் கூறியபோது, அதற்கு பதிலளிக்கும் முகமாக என் மீது அவர் தொலைக்காட்சி பேட்டி ஒன்றின் போது கூறியதானது தனிப்பட்ட முறையில் என்னைப் பாதிக்கவில்லை. அது எமது மக்களையே பெருமளவில் பாதித்துள்ளதை காண முடிகிறது.

தலைவரின் மரணம் தொடர்பான சந்தேகங்கள் எனது தனிப்பட்ட கருத்துக்களல்ல. அது எமது மக்களின் கருத்துக்களே ஆகும். ஆகவே, எனது கருத்து பொறுப்பற்றது, பக்குவமற்றது என்று சொல்வது ஒரு கேலிக்கூத்தான விடயமாகும்.

கதிர்தம்பி யார்? விடுதலைப் புலிகளுக்கும் அவருக்குமான தொடர்பு என்ன? எப்படி கதிர்காமத் தம்பியின் மகன்களில் ஒருவருக்கு வீடமைப்பு அதிகாரசபையில் தொழில் வாய்ப்புக் கிடைத்தது? தலைவருடன் விமானத்தில் பயணம் செய்து மரணித்த கதிர்காமத்தம்பி எப்படி தேசிய வீரராக ஆனார்? என்பது போன்ற எனது கேள்விகளை சும்மா நிராகரிக்க முடியுமா? என அவரது நேர்காணலில் கேட்கிறார்.

அவர்கள்
என் விழிகளின் ஒளியை
அபகரித்த பொழுதிலும்
நரம்பிடைக் குருதியை
உறிஞ்சிய பொழுதிலும் - நான்
மௌனித்திருந்தேன்!

பரம்பரை வீட்டின்
கூரை கழற்றிச் சுவர்கள் சிதைத்து
தோட்டத்தில் படர்ந்த
திராட்சைக் கொடிகளை...
ஜைத்தூன் மரங்களை
அறுத்தனர், தறித்தனர்,
பொறுத்தேயிருந்தேன்!
அமைதியின் பெயரால் - ஈன
அடக்குமுறைகளை - நிதம்
கட்டவிழ்த்த போதிலும்
நான் தலை கவிழ்ந்தே இருந்தேன்!

என்றாலும் இனி...
மௌனத்தை மௌனித்தும்
பொறுமையைப் பொறுத்தும்
இருக்குமாறு நான் பணித்துவிட்டேன்!
கவிழ்ந்த சிரசினை
சிலிர்த்து நிமிர்த்தினேன்!

தாயே! பலஸ்தீனே!
விழியின் ஒளியினும்
நரம்பிடைக் குருதியினும்
ஐசுவரியங்கள் அனைத்திலும் மேலாய்
நீயே எனது
காதலுக்குரியவள்
நீதான் உவப்பானவள்!
உன்னை அரக்கர்கள்
அழிக்கின்ற வேளையில்
வாளாவிருந்திடல் இனிமுடியாது!



## வீசுக புயலே...

என்னுள் உறையும்
சீற்றமே எழுக!
என்மண் மீதான
காதலே பெருகுக!
காதலும் சீற்றமும்
கலந்தே வெறியரை
துவம்சம் செய்திடும்
புயலென மாறுக
இனியென் மண்ணில்
வீசுக புயலே!
விடுதலை பிறந்திட
வீசுக புயலே!

லறீனா. ஏ. ஹக், பேராதனைப் பல்கலைக்கழகம்.

# நமது ஆளுமைகள்

## மர்ஹூம் பதியுத்தீன் மஹ்மூத்

வரலாற்றுக்கும் தனிமனித வாழ்க்கை சரித்திரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. ஏனெனில் சமூக மேம்பாட்டுக்காக உழைத்த சிந்தனையாளர்கள், அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் தலைவர்கள் சிலரது வாழ்வு நமது சமூக வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. நமது சமூக உருவாக்கத்திற்கு அவர்களது பங்களிப்புக்கள் பக்கத் துணையாக நின்று உரமாகியுள்ளது. நமக்கும் இந்த ஆளுமைகளின் இலட்சியங்களும் இலக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும்.

அம்மாபெரும் ஆளுமைகளின் பதிவுகளை நமது நிகழ்கால சந்ததியினருக்கும், எதிர்காலத்திற்கும் கையளிப்பதே இத்தொடரின் நோக்கம். நீங்களும் நமது சமூக ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளை எமக்கு எழுதலாம்.

(பிரதம ஆசிரியர்)

சமூக நலன் நின்று உழைத்த முஸ்லிம் பெரும் மக்களுக்குள் மறைந்த அல்-ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களுக்கு நமது வரலாறு எப்போதுமே முதலிடத்தை வழங்கி நிற்கிறது. அன்னாரின் முற்போக்குச் சிந்தனைகள் அவர் ஆற்றியப் பணிகள் இந்த நாட்டின் தேசிய அரசியலில் அவரது பாத்திரத்தை மட்டுமல்லாது இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பையும் பறைசாட்டுகின்றன.

முஸ்லிம்களின் தனித்துவமான அரசியலின் தந்தையாக நின்றதுடன், முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்டவரும் அவரேயாவார். ஒரு சமூகத்தின் உயரிய வளர்ச்சிக்கு அச்சமூகத்தின் அரசியல் அதிகாரமும் கல்வி மறுமலர்ச்சியும் பொருளாதார அடித்தளமும் இன்றியமையாதது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இவ்விரு முக்கியமான தளங்களில் நின்று அவர் கணிசமாக நமது சமூகத்திற்கு உயரிய பங்களிப்பை வழங்கினார். அவரின் பங்களிப்பில் தான் நமது முஸ்லிம் சமூகம் இன்று, தன்னை நிலை நிறுத்தியுள்ளது. அந்த மாபெரும் மகானை நமது அரசியல், கல்விச் சமூகம் எப்போதும் மறந்து விடக்கூடாது.

கொழும்பு ஸாஹிரா கல்லூரி பெற்றுத் தந்த பெரும் மகன் பதியுத்தீன் மஹ்மூத். சமூகத்திற்கு உழைக்க வேண்டிய உன்னத பாதையை அவர் கொழும்பு ஸாஹிரா கல்லூரி வாழ்க்கையிலேயே மனதில் இருத்திக் கொண்டார். இலங்கை முஸ்லிம்களுக்கு என்று அப்போது எந்தத் தனித்துவமான நிறுவனங்களும் இருக்கவில்லை. முஸ்லிம் படித்த வாலிபர்கள் பலர் அன்று பிரக்டர், அட்வக்கேட், டாக்டர்களாக இருந்தனர். அவர்கள் இலண்டன் பாணியிலான உடைகளை உடுத்திக் கொண்டு, ஆங்கிலம் பேசிக் கொண்டு சாதாரண முஸ்லிம் சமூகத்திற்கும் தங்களுக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்பது போல் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில்தான் 1924ம் ஆண்டு "வாலிப முஸ்லிம் லீக்" என்ற பெயரில் ஒரு அமைப்பு முஸ்லிம்களுக்குச் சேவையாற்று வதற்கு என்று உருவாக்கப்பட்டது. ஜனாப் எம்.ஏ.சி.எம். சாலி அவர்கள் தான் இந்த அமைப்பின் பிரதான பலமாக இருந்து செயல்பட்டார். 1927 வரை இம்மூன்று வருடக் காலத்தில் அந்நிறுவனம் தனது இலக்கை நோக்கிப் பயணிப்பதில் பெரும் பின்னடைவைக் கண்டது. இதனை உணர்ந்து கொண்ட அந்நிறுவனத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான எம்.ஏ.சி.எம் சாலி அவர்கள் இருபத்தி மூன்று வயது இளைஞனான பதியுத்தீன் மஹ்மூத் அவர்களை "வாலிப முஸ்லிம் லீக்கின்" செயலாளராக்குவதன் மூலம் அந்நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்கான உந்துதலைப் பெறலாமென எண்ணி அதன் செயலாளர் (காரியதரிசி) ஆக்கினார்.



பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் செயலாளரானதும் முஸ்லிம்களுக்கான அமைப்பாக அதனை விஸ்தரித்து பலமாக கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தார். பதியுத்தீன் மஹ்முத் அவர்களின் சமூக உழைப்பிற்கான தளத்தை "வாலிப முஸ்லிம் லீக்" அவருக்கு ஏற்படுத்தியது.

அன்றைய முஸ்லிம் சமூகத்திற்கு உடனடியாகச் செய்யப்படவேண்டிய பணிகளை அவர் அடையாளம் கண்டார். பொருளாதாரத்திலும், கல்வியிலும் பெரும் பலவீனமாக முஸ்லிம் சமுகம் இருந்த நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. பொருளாதாரத்துறையில் தொழில் பேட்டைகளை நிறுவுதல் முஸ்லிம்கள் இணைந்த பொருளாதார முயற்சிகளை ஆரம்பித்தல் ஸக்காத் நிதியத்தை ஏற்படுத்துதல் ஊடாக முஸ்லிம்களின் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிப்பதுடன், கல்வித் துறையில் முஸ்லிம் கல்வி நிறுவனங்களை உருவாக்குதல், இரவு நேரக் கல்வி பாடசாலைகளை ஆரம்பித்தல், முஸ்லிம் பெண்கள் கல்லூரிகளை நிறுவுதல், பாடசாலைகளில் அரபு இலக்கணப் போதனைகளை அடிப்படையாகக் கொள்ளல் என்பன அவரது முக்கியத் திட்டங்களாக இருந்தன.

அத்துடன் சமூகத்தில் நிலவிய சேரிப் பிரச்சினைகள், வீடு இல்லாத் திண்டாட்டம், பிச்சையெடுத்தல், முஸ்லிம் பெண்களின் விவாகரத்துப் பிரச்சினை என்பனவும் தீர்க்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினைகள் என இனம் கண்டார். இக்குறைபாடுகளைக் களைந்து எறிவதற்காக அனைத்து முஸ்லிம் தனவந்தர்களும், கல்வி கற்றோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டு ஒரு இலட்சம் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு நாடு முழுவதுமுள்ள ஊர்கள், பள்ளிவாயல்களில் விநியோகித்தார். மூன்று மாதம் நாடு முழுவதும் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டார். துரதிஷ்டவசமாக போதிய ஆதரவு அன்று அவருக்குக் கிடைக்கவில்லை. ஒரு சிலரே முன் வந்தனர்.

அன்று பணம் படைத்தவர்கள், கல்வி கற்றவர்களின் கண்கள் மூடப்பட்டிருந்த நிலைமையிலேயே பதியுத்தீனின் கண்கள் திறக்கப்பட்டுவிட்டன. அன்றைய அவரின் செயற்திட்டம் காது கொடுக்கப்பட்டு சமூகத்திற்கு செய்யப்பட வேண்டியதென செயற்படுத்தப்பட்டிருந்தால் நமது மக்கள் இன்று இந்நிலையில் இருந்திருக்க மாட்டார்கள். அன்று அவர் சுட்டிக்காட்டிய தேவைகள் இன்னும் நமது சமூகத்தின் தேவையாக மலையளவு பெருத்து நிற்பதை நாம் காண்கிறோம்.

இளைஞராக இருந்த பதியுத்தீன் மஹ்மூத் இதனால் சோர்ந்து போகவில்லை. ஆதரவுக் கரம் நீட்டிய ஓரிருவரையும் அரவணைத்துக் கொண்டு அவரது பயணம் தொடர்ந்தது. பலவிதமான எதிர்ப்புக்களும் அவருக்கு எதிராக எழுந்தன.

அன்றைய முஸ்லிம் தலைவர்களாக இருந்தவர்கள் ஒவ்வொருவரையும் எதிரிகளாகவே திட்டிக் கொண்டிருந்தனர். இவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரே மேடையில் அமரச் செய்து சமூக நலனுக்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டிய அவசியத்தை இளைஞராக இருந்தே மேற்கொண்டார். அனைவரும் ஒன்றுபடுவதன் மூலமே முஸ்லிம்களின் சமூக நலனை பாதுகாக்க முடியுமென வலியுறுத்தினார். அனைவரையும் ஒரே இடத்தில் சேர்ப்பதற்கு அயராது உழைத்தார்.

அன்றைய தலைவர்களாகவிருந்த சேர் மாக்கான் மாக்கார், டி.பி.ஜாயா, டபிள்யூ.எம்.அப்துர் ரஹ்மான், என்.பி.எச்.அப்துல் கபூர் ஆகிய அனைவரையும் ஒன்று சேர்த்து வாலிப முஸ்லிம் லீக்கின் கீழ் கொண்டு வந்தார். இதன் மூலம் வாலிப முஸ்லிம் லீக்கை 1930ம் ஆண்டில் அகில இலங்கை முஸ்லிம் லீக்காக ஒரு பலமான அமைப்பாக மாற்றினார். நாடு முழுவதிலும் கிளைகளை ஸ்தாபித்து உறுப்பினர்களை சேர்த்தார்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் அகில இலங்கையிலுள்ள முஸ்லிம்களை இணைத்தும் பன்முகத் தன்மை கொண்டதுமான ஒரு முஸ்லிம் நிறுவனம் பதியுத்தீன் மஹ்மூத்தின் உழைப்பின் மூலமே உருவானது. இதனை வரலாறு நன்கு குறித்துக் கொள்ள வேண்டும். பிற்காலத்தில் அவர் அலிகார் பல்கலைக்கழகத்துக்கு கல்வி கற்கச் சென்று திரும்பிய பின் முஸ்லிம் லீக்கிலிருந்து விலகினார். இந்த முடிவு நமக்கு ஆச்சரியத்தைத்தரும். ஆனால் அம்முடிவை பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் மிக வேதனையுடன்தான் எடுத்தார் என்பதை அவர் பல இடங்களில் தொளிவுபட உரைத்து வந்துள்ளார்.

முஸ்லிம் லீக் இந்நாட்டு முஸ்லிம்களுக்கு உகந்த பல சேவைகளை செய்ய வேண்டும் என்பதுதான் அவரின் எதிர்பார்ப்பாக இருந்தது. அவரது ஓயாத உழைப்பால் ஆள் போல் உறுதியாகி வந்த அதே முஸ்லிம் லீக்கிலிருந்து பிற்காலத்தில் அவர் விலகியது அதன் நோக்கத்திலிருந்து அது திசை திரும்பியிருந்ததைக் கண்டதனாலேயாகும். எந்த நோக்கத்திற்காக முஸ்லிம் லீக் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்குகள் சிதைக்கப்பட்டு நிறைவேறாமல் இருந்தது. பரந்த அடிப்படையில் மக்கள் இயக்கமாக முஸ்லிம் லீக்கை மாற்றுவதன் மூலமே சமுதாய முன்னேற்றத்தை சாதிக்க முடியுமென அவர் நம்பினார். அவர் அலிகாரிலிருந்து திரும்பி வந்ததும் அந்நிறுவனம் ஒரு சில பணம் படைத்தவர்களின் கையில் இருந்ததையும் அவர்களின் சுய இலாப இயக்கமாக மாறியும் விட்டிருந்தது.

உண்மையான கொள்கைவாதி எப்போதும் கொள்கைகளுக்காக வாழும் ஒருவன்தான் என்பதை பதியுத்தீன் மஹ்மூத் இந்த முடிவினை எடுத்ததன் மூலம் நிரூபித்துக் காட்டினார்.

(தொடரும்....)

# விடுதலையின் குரலாக 'முஸ்லிம் குரல்' வெளிப்பட வேண்டும்!

மிக இறுகிப் போன ஒரு வரலாற்று காலகட்டத்தில் நாம் தனித்துவிடப்பட்டுள்ளோம், பல்வேறு வகையான நெருக்குவாரங்களும் எம்மைப் பற்றிக் கொண்டிருக்கின்றன.

மிகவும் பின்தங்கிய சமூகமாகவே எம்மைத் தொடர்ந்தும் நிலை நிறுத்தும் செயற்பாட்டில்தான் பேரினவாதங்கள் கவனஞ் செலுத்திக் கொண்டிருப்பது வெளிப்படையாகத் தெரிகின்ற ஒன்றாகவே உள்ளது.

இந்நிலையில் நம் மீது தொடுக்கப்படும் அத்தனை அழுத்தங்களையும் உடைத்தெறிந்து, தலைநிமிர்ந்த சமூகமாக நாம் இருப்பு கொள்வதற்கான கட்டமைப்பை "முஸ்லிம் குரல்" மூலம் உருவாக்கப்படல் வேண்டும்.

நமது விடுதலைப் பாதைகளை பல்வேறு தடைச்சுவர்களை எழுப்பித் தடுத்து விடும் உபயோகங்களும் மேலெழுந்து வரக்கூடிய சாத்தியக் கூறுகளும் காணப்படவே செய்கின்றது.

இவற்றினை எதிர்கொண்டு சுதாகரித்து, எழுச்சிப் பாதைகளில் நமது சமூகத்தை வழி நடாத்தும் துணிவை தமது உயிராகக் கொண்டு "முஸ்லிம் குரல்" செயற்படல் வேண்டும்.

இலங்கையின் வரலாற்றை ஒருமுறை பின்னோக்கிப் பார்ப்போமானால் "முஸ்லிம்கள்" என்பதற்காகவே எம்மீதான பல்வேறு அடக்கு முறைமைகள் பிரயோகிக்கப்பட்டன என்பதை கண்டுள்ளோம்.

இந்நிலையானது இங்கு மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும், முஸ்லிம்கள் மீது பின்னப்படும் வலையாகவே உள்ளது. இங்கு பிரதான அழிப்பு நடவடிக்கையாக இருப்பது "முஸ்லிம்களுக்குள் இருக்க வேண்டிய ஒற்றுமை பலத்தை சிதைப்பது" என்பதும் மறைவன்று.

ஆகவே, முஸ்லிம்கள் மீது தொடுக்கப்படும் அத்தனை சதிவலைகளையும் குறிப்பான குழிபறிப்புக்களையும் இனங்காட்டி, அவற்றிலிருந்து மீளுவதற்கான வழிமுறைகளையும் முன்வைக்கும் ஒன்றாகவும் "முஸ்லிம் குரல்" பயணிக்கப்படல் வேண்டும்.

நீண்ட விடுதலைப் பயணத்தினை குறுகிய காலத்திற்குள் பெறுவதற்கான முன்மொழிவுகளையும், நமது பத்திரிகை வரலாற்றில் முறையாக வெளிப்படத்தவறிய சமூக மறுமலர்ச்சிகளையும் கோடிட்டுக் காட்டும் நமக்கான தனித்துவக் குரலாக "முஸ்லிம் குரல்" வெளிவர வேண்டும். இப்பத்திரிகை நீண்டகாலமாக நின்று நிலைக்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.

அட்டாளைச்சேனை.

## முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

### சந்தா விபரம்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) - 120/-

6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 240/-

1 வருடம் - (48 இதழ்கள்) - 480/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் L.Rajeeb, Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

## ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

*பிரதம ஆசிரியர்*

## முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு அனுசரணையாளர்களாக விளம்பரம் செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் மர்ம மரணம் தொடர்பான சந்தேகங்களும் சவால்களும்!

பையூஸ் அஹமட்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மரணித்து இரண்டு வருடங்களும் நான்கு மாதங்களும் கடந்துவிட்டன. இந்த மரணம் விபத்தா திட்டமிட்ட சதியா என்பது இன்றுவரை திரைவிலகாத மர்மமாகவே இருக்கிறது. அஷ்ரஃப் அவர்களின் மறைவின் மர்மம் குறித்த மௌனம், பேரியல், ஹக் கீமை பாதிப்பதைவிட அவரை நேசித்த சாதாரண மக்களை, அவரில் உயிரையே வைத்திருந்த மக்கள் கூட்டத்தை மிகவும் பாதித்தே வருகிறது. பேரியலோ, ஹக்கீமோ தலைவரின் மரணம் தொடர்பான மர்ம தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான குரலினை வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டியே வருகின்றனர் - இருவரும் அமைச்சர்களாக அரசாங்கத்தில் இருந்தவர்கள்; பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள். தலைவரின் மரணம் தொடர்பான விசாரணையை மேற்கொள்ள அரசுக்கு அழுத்தம் கொடுப்பதில் இருவருமே தொடர்ச்சியான அலட்சியத்தையும் மௌனத்தையும் கடைப்பிடித்து வருகின்றனர். இது ஏன் என்று புரியவில்லை, ஆனால் அவரின் மறைவின் காரணமாக அவரின் வழிவந்த பதவியை இருவரும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மக்களோ, அவரை நேசித்த அவரின் உடன் பிறப்புக்களோ தலைவரின் மரணம் குறித்த மர்மம் முடிச்சு அவிழ்க்கப்பட வேண்டுமென இன்னும் எதிர்பார்க்கின்றனர்.

அந்த மரணம் லேசுப்பட்ட மரணமல்ல. இலங்கை அரசியலின் ஆணிவேரையே அசைத்தது. இலங்கை அரசாங்கத்தையே ஆட்டம் காண வைத்தது. சந்திரிகாவின் அரசாங்கத்தையே வீட்டுக்கு அனுப்பியது. ஒரு பொதுத்தேர்தலை அல்ல; இருபொதுத் தேர்தல்களை ஒரு வருடத்திற்குள் சந்திக்க வைத்தது. - எந்தவொரு அரசியல் தலைவரின் மரணமும் இலங்கை அரசியலை இப்படி ஆட்டம் காணவைக்கவில்லை! பண்டாரநாயக்கா பௌத்த துறவியினால் சுட்டுக்கொல்லப்பட்டபோது, தஹநாயக்க தலைமையில் அரசாங்கம் தொடர்ந்தது. பிரேமதாச மனித வெடிகுண்டினால் கொல்லப்பட்டபோது, விஜயதுங்காவின் தலைமையில் அரசாங்கம் தொடர்ந்தது. இவர்கள் இருவரும் அரசாங்கத்தின் தலைவர்களாக இருந்தவர்கள். அஷ்ரஃப் அவர்கள் அரசாங்கத்தின் தலைவராக இருக்கவில்லை - ஒரு அமைச்சராக இருந்தவர். ஆனாலும், அரசாங்கத்தை முஸ்லிம்களின் வாக்குப் பலத்தினால் ஆட்டிப் படைக்கும் வல்லமை கொண்டிருந்தவர். அவர் ஒரு King அல்ல, ஒரு King maker. அந்த King makerஉம் அவர் தலைமை தாங்கிய முஸ்லிம் காங்கிரஸும் இலங்கை அரசியலில் பெரும் நிர்ணய சக்தியாக இருந்தது.

1994இல் ஐக்கிய தேசிய கட்சியை "அதன் 17வருட அரசாங்க அதிகாரத்துவ மெத்தையில் இருந்து" தரையில் தள்ளியது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சந்திரிகாவுடனான கூட்டுத்தான் என்பதை உலகம் அறியும் - நாமும் அறிவோம்! சந்திரிகாவுடன் அப்படியொரு கூட்டு வரவில்லை என்றால், என்னதான் இடதுசாரிகள் பொது முன்னணியுடன் இணைந்தாலும் 17 வருட ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை, சிங்கள மக்கள் வெறுத்தார்கள் என்று சொல்லப்பட்டாலும் - அன்று கணிசமான சிங்கள மக்கள் மத்தியில் அதன் கணிசமான வாக்குப் பலம் நிலையாகவே இருந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே 1994இல் அரசாங்கம் மாறுவதற்கும் புதிய அரசாங்கம் உதயமாவதற்கும் பக்கத் துணையாக நின்றது.

1994இல் சந்திரிகாவின் புதிய அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசி சமாதானத்தை ஏற்படுத்துவதே தனது நோக்கம் என்றது இன்றைய ஐக்கிய தேசிய முன்னணி அரசைப் போலவே, விடுதலைப் புலிகளுடன் சந்திரிகாவின் அரசு பேச்சுவார்த்தையை தொடங்கியது. 6 மாதங்கள் அளவில் அப்பேச்சுவார்த்தை தொடர்ந்தது - அப்போது யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் வசமே இருந்தது. பல கட்டங்களாக யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை நடைபெற்றது. பின்பு பெரும் அரசியல் முரண்பாட்டில் பேச்சுவார்த்தை முறிந்தது - பேச்சுக்கள் முறிந்த கையுடன் தீவிர யுத்தம் மீண்டும் கொடூரமாக வெடித்தது. அரசாங்கம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதுடன் பல்லாயிரம் பேர் இப்போரில் மடிந்தனர்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கிடையேயான அப்பேச்சுவார்த்தையின் போதும் நோர்வேயே மத்தியஸ்த்தம் வகித்தது. மேற்குலகு இன்று போலவே சந்திரிகாவின் அரசாங்கத்தை பேச்சுவார்த்தை மேசையை நோக்கி தள்ளியது. பேச்சுவார்த்தை முறிந்த கையுடன் நோர்வேக்கும் சந்திரிகாவின் அரசாங்கத்திற்குமிடையிலான முரண்பாடுகள் மிகப் பகிரங்கமாக வெடித்தன. 1999 ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது சந்திரிகாவை கொல்லும் இறுதி இலக்குவரை விடுதலைப் புலிகள் - சந்திரிகா முரண்பாடு தீவிரம் பெற்றிருந்தது. சந்திரிகா ஒரு கண் இழப்புடன் உயிரை தக்கவைத்துக் கொண்டார்.



சந்திரிகாவை விடுதலைப் புலிகள் கொல்வதற்கான முரண்பாடான உச்சம்; சந்திரிகாவை இலங்கை அரசியலில் இருந்து அகற்றிவிட வேண்டுமென்ற அரசியல் இலக்குத்தான் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது! சந்திரிகா பதவியில் இருக்கும்வரை அவருடன் பேச முடியாது என்பது புலிகளின் உறுதியான நிலைப்பாடாகவும் இருந்தது. நோர்வேயும் மேற்குலகும் இந்த நிலைப்பாட்டிலேயே இருந்தன. எப்படியாவது சந்திரிகாவின் ஆட்சியை மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதாயிற்று.

சந்திரிகாவை அழிக்கும் திட்டம் கைகூடாமல் போனவுடன், இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதே அடுத்த இலக்காக விரிந்தது. இந்த ஆட்சி மாற்றத்திற்கு பல்வேறு வெளிநாட்டு சக்திகள் - துணையாக இருந்தன. இந்த ஆட்சி மாற்ற முயற்சிக்கு பெரும் தடையாக இருந்தார், எம்.எச்.எம். அஷ்ரஃப். 1994 தொடக்கம் அஷ்ரஃப் அவர்கள் மரணிக்கும்வரை சந்திரிகாவுக்கும் அஷ்ரஃப் அவர்களுக்குமிடையேயான அரசியல் உறவுகள் சுமூகமாக இருந்தது என்று சொல்லிவிட முடியாது! அடிக்கடி பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கிறது. அம் முரண்பாடுகளினால் அமைச்சரவையிலிருந்தே வெளியேறிவிட வேண்டுமென அவர் முடிவு எடுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

ஆனாலும், அவர் மரணிக்கும் வரை பொது முன்னணியின் கூட்டிலிருந்து வெளியேறவில்லை. இதற்கான பிரதான காரணம், இலங்கை அரசியலில் பொது முன்னணி, யூஎன்.பி என்கின்ற இரு பெரும் அரசியல் சக்திகளே ஆட்சிபீடமேறும் நிலை உள்ளது. பொது முன்னணியுடன் அரசியல் ரீதியான உடன்பாட்டை தூக்கியெறிந்துவிட்டு வெளியே வந்தால், ஐக்கிய தேசிய கட்சியை அல்லது அதன் தேர்தல் கால கூட்டு முன்னணியைத்தான் ஆதரிக்க வேண்டிய இக்கட்டான நிலைமை இருந்தது. இதனை அஷ்ரஃப் அவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை.

ஐக்கிய தேசிய கட்சியை அஷ்ரஃப் அவர்கள் தொடர்ந்தும் நிராகரித்ததற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன. இவற்றை நாம் அறிவோம்! இன்று முஸ்லிம்களை நட்டாற்றில் தவிக்கவிட்டு அது செய்யும் மோசடித்தனமான அரசியல் குறித்த உறுதியான தெளிவு அஷ்ரஃப் அவர்களுக்கு எப்போதும் இருந்தது - குறிப்பாக ரணிலின் தலைமையை ஏற்றுக்கொள்ள முடியாது. நம்ப முடியாது என்பது அவரது பகிரங்கமான நிலைப்பாடாக இருந்தது. "ரணில் என்ற சாரதி ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கும்வரை முஸ்லிம் காங்கிரஸ் அந்த பஸ்ஸில் ஒரு நாளும் ஏறப்போவதில்லை" என அஷ்ரஃப் அவர்கள் மிகப் பகிரங்கமாக அறிவித்திருந்தார். இது குறித்து ரணிலுக்கும் ஒரு பகிரங்கக் கடிதத்தை அவர் எழுதியிருந்தார்.

சந்திரிகாவுடன் அஷ்ரஃப் அவர்கள் முரண்படும் ஒவ்வொரு கட்டங்களிலும், அதற்கு அடுத்த நிமிடமே யூஎன்.பி.யும் வெளிநாட்டு சக்திகளும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு அவருடன் பேச முற்பட்டன. இப்படியான பேச்சுக்கள் பல தடவைகள் நடந்தும் உள்ளன குறிப்பாக மிக முக்கியமான வெளிநாட்டு சக்திகளுடன், இவை அனைத்தையும் அஷ்ரஃப் அவர்கள் நிராகரித்தார். ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிக்கு கொண்டுவர முடியாது என்பதில் அவர் உறுதியாகவே இருந்தார்.

ஆகவே, ஆட்சிமாற்றம் நடைபெற வேண்டும் - ஆட்சியை ஆட்டம் காண வைக்கக் கூடிய வல்லமை - அஷ்ரஃப் அவர்களுக்கும் நமது கட்சியான முஸ்லிம் காங்கிரஸுக்குமே உள்ளது. ஆனால், அஷ்ரஃப் அவர்களும் முஸ்லிம் காங்கிரஸும் சந்திரிகாவுடனான உறவினை முறிக்கும் நிலையில் இல்லாதது பெரும் தடைக்கல்லாகவே இருந்தது. 6க்கும் மேற்பட்ட தேர்தல்களை ரணிலின் தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி எதிர்கொண்டு தோல்வியின் சாதனைகளை தொடர்ச்சியாக எதிர்கொண்டு வந்ததையும் நாம் அறிவோம். ஆகவே இச்சக்திகளுக்கு ஒரே வழி அஷ்ரஃப் அவர்களை மரணிக்கச் செய்வதும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலவீனப்படுத்துவதுமே. அஷ்ரஃப் இல்லாத முஸ்லிம் காங்கிரஸை பெரும் அரசியல் சக்தியாக அரசியல் அரங்கில் தொடர்ந்தும் கட்டிக்காக்க முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையாக இருந்தது.

2000ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான திகதியும் குறித்தாயிற்று. ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கான இறுதி முயற்சிக்கான கடைசித் தருணமும் அதுவாகவே இருந்தது. அஷ்ரஃப் அவர்களும் முஸ்லிம் காங்கிரஸும் சந்திரிகாவுடன் தேர்தல் முன்னணி வியூகம் அமைத்தாகிவிட்டது. இனியும் காத்திருக்க முடியாது என்ற நிலை வந்தபோது, அரசியல் சூழலும் அச்சக்திகளுக்கு சாதகமாக மாறியது - அதாவது பொது முன்னணிக்கும் அஷ்ரஃப் அவர்களுக்குமான முரண்பாடு பகிரங்கமாக வெடித்தது. இது சந்திரிகாவுக்கும் அஷ்ரஃப் அவர்களுக்குமிடையிலான முரண்பாடு அல்ல. பௌசி, அஷ்ரஃப் அவர்களுக்கு இடையிலான முரண்பாடாகவே வெடித்தது. இதற்கு சந்திரிக்கா நியாயம் வழங்க வேண்டும் என்பதற்காகவும் பௌசியை தண்டிக்க வேண்டும் என்ற அரசியல் நெருக்குவாரத்தை உருவாக்குவதற்கும் பொது முன்னணியுடன் 1994இல் இருந்ததைவிட மிகக் கூடுதலான அரசியல் அதிகாரத்தை பெறவேண்டும் என்ற அரசியல் ஆயுதத்தையும் அஷ்ரஃப் அவர்கள் அப்போது கையில் எடுத்தார். இந்நிலைமையானது பேரம் பேசும் முரண்பாடுகளாக சந்திரிகா, ரத்வத்த, ரட்ணசிரி விக்ரமநாயக்க, ரிச்சட் பத்திரன என நீடித்தது.

16.09.2000இல் அவர் அம்பாறை மாவட்டத்திற்கு அரசியல் பிரச்சார சுற்றுப் பிரயாணத்திற்கு தயாராக இருந்தார். வி.ஐ.பிக்கள் பயணம் செய்யும், M17 ஹெலிகெப்டரில் அவர் அம்பாறையை நோக்கி கண்டி ஊடாக பயணம் செய்தார். அவருடன் விமானப்படை, மற்றும் அவருடைய மெய்ப் பாதுகாவலர்கள் என்போரும் சிவிலியன்கள் பலரும் பயணம் செய்தனர். அப்பயணத்தில் அவருடன் இருந்த அனைவரும் மரணமானவர்கள். அம்மரணம் எப்படி சம்பவித்தது என்பதை இன்றும் அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. அவ்விமானத்தின் கறுப்புப் பெட்டி விவகாரம் இன்றும் வெளிக்கு வரவில்லை. பாணந்துறையில் நடைபெற்ற பகிரங்கமான கூட்டமொன்றில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ஹக்கீம் அவர்கள் கூறிய கருத்து ஒன்று ஞாபகம் வருகிறது - அக்கருத்து பத்திரிகைகளிலும் வெளிவந்தது. நாம் அனைவரும் பார்த்திருப்போம்! அந்தக் கருப்புப் பெட்டி கண்டெடுக்கப்பட்டு அது ஆட்டோ ஒன்றில் கொண்டு செல்லப்பட்டதாகவும் அதனை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் உள்ளதென்றும் அவர் கூறி இருந்தார் - பின் அந்த விடயம் வெளிப்படையாக அரங்குக்கு வரவில்லை.

அஷ்ரஃப் அவர்களுடன் விமானத்தில் பயணம் செய்த சிவிலியன்களான - கதிர்காமத்தம்பி, துறைமுக அதிகாரசபையின் ஊழியர் பெரியதம்பி, தங்காலையைச் சேர்ந்த மௌலானா, மருதமுனையைச் சேர்ந்த ரஹ்மத்துல்லாஹ். அசீஸ் ஆகியோரும் பயணம் செய்துள்ளனர். கதிர்காமத் தம்பியுடன் பயணம் செய்த மற்றொரு நபர் தொடர்பான விபரம் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால், கதிர்காமத்தம்பியுடன் இரண்டு தினங்களுக்கு முன்பிருந்தே ஒரு நபர் அஷ்ரஃப் அவர்கள் வீட்டில் தங்கி இருந்ததாகவும், அவரும் கதிர்காமத்தம்பியுடன் பயணம் செய்ததாகவும் அஷ்ரஃப் அவர்களின் வாசஸ்தலத்தில் இருந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

அஷ்ரஃப் அவர்களின் மரணத்தின்பின் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் வெளிநாட்டு சக்திகளின், முஸ்லிம் எதிர்ப்புச் சக்திகளின் அரசியல் தலையீடும் செல்வாக்கும் இலங்கை அரசியலில் அதிகரித்துள்ளதையும் முஸ்லிம் காங்கிரஸ் பலவீனப்பட்டுள்ளதையும் முஸ்லிம்கள் கைவிடப்பட்டுள்ளதையும் நாம் இன்று காண்கின்றோம்.

ஆகவே, அரசியல் நிலைமைகளின் அடிப்படையில் நமது மக்கள் சார்பாக ஹரீஸ் எம்.பி. அவர்கள் இப்போது வலியுறுத்தும் விடயங்களை நாம் ஏன் கூர்ந்து பார்க்கக்கூடாது? இப்படியான அரசியல் வாய்ப்புக்கள் இல்லை என்பதை நாம் நிராகரிக்க முடியுமா?




*முஸ்லிம் சமூகத்தின் அரசியல் - சமூக - சமய - கலை கலாசாரம் முதலான அனைத்து கோணங்களுக்கும் நமது "முல்லா" விஜயம் செய்து, கோணங்களில் கோலாட்சி புரியும் கோலங்களை இங்கே துப்பாய்வு செய்து விமர்சிப்பார். சமூக நலனை மட்டுமே அடிநாதமாகக் கொண்டிருக்கும் "முல்லா"வின் விமர்சனப் பார்வை, விருப்பு - வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டது "முல்லா"வின் பார்வை சிலரை தொடலாம் சிலரை சுடலாம் சிலருக்கு அடியாகக்கூட படலாம். எனினும் தனிப்பட்ட முறையில் எந்த தனிமனிதரையும் தாக்கவோ காரணமின்றி தூக்கவோ "முல்லா" முன்வரமாட்டார். இதோ... முல்லாவை சந்தியுங்கள் அவரது வரிகள் குறித்து சிந்தியுங்கள். "முல்லா"வின் பார்வை தொடர்பான ஒட்டிய கருத்துக்கள் - வெட்டிய சிந்தனைகள் - விமாசனங்கள் யாவும் வரவேற்கப்படும்.*

# முஸ்லிம்களிடையே சிங்கள மொழிமூலக்கல்வி அதிகரிப்பதன் விளைவு எத்தகையது?

சன்மார்க்க நெஞ்சங்களே! நம் தாயகமாகிய இலங்கையிலோ, முஸ்லிம்கள் மொழிவாரியாக - இருவேறு பிரிவினராகப் பிரியக்கூடிய ஓர் அபாயம், "முல்லா"வின் பார்வைக்கு தூரத்தே தெரிவதை சொல்லாமல் இருக்க முடியாது. அது என்ன அபாயம் என்கிறீர்களா? முல்லாவின் எழுத்து ஊர்வலத்துடன் இன்னும் கொஞ்சம் தூரம் வாருங்கள்....

இலங்கைவாழ் முஸ்லிம்கள் நீண்ட நெடுங்காலமாகத் தமிழ்மொழியே அவர்களின் தாய்மொழியாகப் பேசப்பட்டு வருகிறது. முஸ்லிம்கள் தம் இல்லங்களில் வீட்டு மொழியாகவும், பள்ளிவாசல்களில் சமய மொழியாகவும், பாடசாலைகளில் போதனா மொழியாகவும் தமிழே தன்னாட்சி புரிந்து வருவதை கண்கூடாகக் கண்டு வருகிறோம். அரசியல் அந்தா 'பல்டி'க்காக இது குறித்து சிலர் கீழே - மேலே பேசினாலும், உண்மையை மறுப்பதற்கில்லை.

ஆனால், அண்மைக்காலமாக முஸ்லிம்களில் ஒருசாரார், தம் பிள்ளைகளை சிங்கள மொழி மூலக் கல்வி கற்பதற்கு பாடசாலைகளில் அனுமதி கோரி வருகின்றனர். பாடசாலைகளில் சேர்த்தும் வருகின்றனர். மேலோட்டமாகப் பார்த்தால், இது வரவேற்கத்தக்க ஒரு செயலாக வேபடும். ஆனால், நடைமுறை யதார்த்தங்களை சற்றே ஆழ்ந்து சிந்தித்தால், சமுதாய பண்பியல் சீரழிவு - சமுதாய பிளவு - மார்க்க அறிவில் வரட்சி நிலை முதலாய அபாயங்கள் உட்பொருந்திருப்பதை புரிந்து கொள்ளலாம்.

சமுதாய உடன் பிறப்புக்களே! சிங்கள மொழி மூலம் கற்பதால், பேரினவாத அரசியல், வேலை வாய்ப்புக்கள் நம் வீட்டு வாசற்கதவை வழிய வந்து தட்டும்; சிங்கள மொழி வழி கற்ற முஸ்லிம்கள் படுத்துறங்கினாலும், தட்டி எழுப்பி வேலை யிலமர்த்தும் என்ற சிந்தனை மயக்கத்தில் நம் பெற்றோர் பலர் திளைத்துள்ளனர். ஆனால், நடைமுறை வாழ்வில் அப்படி எதுவும் நடந்ததாக எந்தத் தடயமும் இல்லவேயில்லை.

"சிங்களத்தை பரப்ப வேண்டும்; பரம்பரை சிங்களவர் அல்லாத பிற இனத்தார் சிங்களத்தைப் பயில முன் வந்தால், அன்னவர்களை வாழ்த்தி வரவேற்க வேண்டும்" என்பன போன்ற எவ்வித திட்டமும் அரசுக்கோ - சிங்கள சமுதாயத்திற்கோ இருந்ததில்லை.

மாறாக - சிங்கள மொழி மூலம் போதனை நடத்தும் முஸ்லிம் பாடசாலைகள் யாவும் "மாற்றாந் தாய்" மனப்பான்மையுடன் கல்விக்கந்தோரினால் நடத்தப்படுகின்றன என்பதை, சம்பந்தப்பட்ட அதிபர்களிடம் கேட்டால், கதை கதையாக சொல்வர். சமீபத்தில் தலைநகரிலுள்ள - சிங்கள மொழி மூல போதனையும் நடத்தப்படும் ஒரு பள்ளிக் கூட அதிபருடன் "முல்லா" அளவளாவும் வாய்ப்பு கிட்டியது. அதிபர், "தங்களுக்குப் படிப்பிக்க சிங்கள ஆசிரியர்கள் இல்லை. பற்றாக்குறை" என வருத்தப்பட்டார் "கல்விக் கந்தோரில் கேட்டுப் பாருங்களேன் என "முல்லா" சொன்ன போது, "கேட்காமல் இருப்போமா? கேட்டோம்.... "எங்களுக்கே (சிங்களப் பாடசாலைகளுக்கு) இல்லை. உங்களுக்கு எப்படித் தருவது? என்று கையைவிரிக்கின்றனர்..." என அந்த அதிபர் கவலையுடன் கூறினார்.

சிலவேளை அப்படியே சிங்கள மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்களை திணைக்களம் தந்தாலும், பொருத்தமான - துடிப்பான - சேவை நலன் விழையும் ஆசிரியர்களைத் தருவதில்லை. நல்ல தரமான ஆசிரியர்களை தலைநகரின் பிரபலமான சிங்களப் பாடசாலைக்குக் கொடுத்துவிட்டு "ஏனோ தானோ" ஆசிரியர்களையே முஸ்லிம் பாடசாலைகளுக்குத் தள்ளிவிடுகின்றனர் என்ற விஷயத்தையும் "முல்லா"விடம் அந்த அதிபர் பிரஸ்தாபித்தார். இந்நிலையில் கல்வித்தரம் கூடுவது எங்ஙனம் சாலும்?

மற்றது - இஸ்லாமிய நூல்கள் தமிழில் தேவைக்கேற்ப எண்ணிறந்தவை இது காலம் வரை வெளிவந்துள்ளன. புனித அல்குர்ஆன் முதல் ஹதீஸ் கிரந்தங்கள் உள்ளிட்டு, இஸ்லாமிய சட்டம் (பிக்ஹ்) ஸஹாபாக்கள் சரிதைகள் இஸ்லாமிய வரலாற்று விழுமியங்கள் என்று சகல துறை இஸ்லாமிய அறிவுச் செல்வங்களும் தமிழில் இருக்கின்றன. தமிழ்வழி கற்கும் முஸ்லிம் மாணவர்களுக்கு, கணிசமான சமய அறிவை பெறும் வாய்ப்புக்கள் நிரம்பவேயுண்டு. சிங்கள மொழி வழி கற்கும் முஸ்லிம் மாணவர்களுக்கு இத்தகைய வாய்ப்புக்கள் ஒரு சதவீதமேனும் இல்லவேயில்லை என்பதை மறுக்கவும் முடியாது; மறைக்கவும் முடியாது.

இந்நிலையில் என்ன செய்யலாம்? செய்ய முடியும்? "அத்தகைய முஸ்லிம் மாணவர்கள்" பௌத்த சமயத்தை ஒரு பாடமாகப் பயிலுவது தவிர வேறு வழியில்லை. இப்படி பௌத்தத்தை ஒரு பாடமாகக் கற்று, அதிலே விஷேட - அதி விஷேட சித்தி பெற்ற முஸ்லிம் மாணவர்கள் இன்று நம் சமூகத்தில் பலருண்டு. இந்த "விதைப்பின்" நாளைய "அறுவடை" எத்தகையதாய் இருக்கும் என சன்மார்க்க நெஞ்சங்களே சற்று சிந் தித்துப் பாருங்கள். தண்ணீரில் விழுந்த உப்பு, படிப்படியாகக் கரைந்து தண்ணீர மயமாகவே மாறிவிடுவது போல நம் செல் வங்களை நாளடைவில் நாம் இழக்க வேண்டிய துர்ப்பாக்கியம், தவிர்க்க முடியாத - தட்டிக் கழிக்க முடியாத ஒன்றாகிவிடும்.

"பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்" என்ற பழமொழியை, அதன் உள்ளார்த்தத்தை நாம் புரிந்தே வைத்துள்ளோம். பசி என்பது, வயிற்றுப் பசியை மட்டும் இங்கு சுட்டவில்லை. அறிவுப் பசியும் அதில் அடங்கும். பள்ளத்தைக் கண்டால், தண்ணீர் பாய்ந்தோடும் என்பது இயல்பான விடயம். சிங்கள மொழிமூலம் நாம் - நம் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய செல்வத்தைப் பரிமாற வழிகாணாத நிலையில், நம் வாரிசுகள் வழிமாறி போவது நாளடைவில் வழமையான விஷயமாகி விடும். ஒரு கல்விச் சுற்றுலா வந்த "ஒரே" கல்லூரி மாணவர்களில், தமிழ் வழி கற்றோரும் - சிங்கள மொழிவழி கற்றோரும் வெவ்வேறு விதமான பண்புகளுடன் நடந்து, தத்தம் இஸ்லாமிய செயல்முறைகளை வெளிப்படுத்திய உதாரண நிகழ்வுகளை "முல்லா"வினால் தொட்டுக்காட்ட முடியும்....

விருந்துக்கான "படையல்"களை பரப்பி வைத்துவிட்டே, விருந்தாளியை அமரச் செய்யும் அடிப்படை நடைமுறையைக் கூட இவ்விடயத்தில் இன்னுமே நம் சமூகம் செய்யத் துணியாத நிலையில் இந்நிலை தொடருமேயானால், இன்ஷா அல்லாஹ் வருங்காலத்தில் (அது இன்னும் சில ஆண்டுகளில்) நம்மிடையே "தமிழ் முஸ்லிம் - சிங்கள முஸ்லிம்" என இரு கூட்டத்தார் தோன்றுவது, தடுத்து நிறுத்த முடியாத ஒன்றாகி விடும். இதுவிடயத்தில் தனித்தனிக் குடும்பங்கள் தத்தம் பொருளாதார வரவுக்காக பேசினாலும், சமுதாய நலனை நம் கவனத்தில் கொள்வதே சிறப்பு.

சகோதர கிறிஸ்தவ சமூகம் இது விடயத்தில் எதிர்நோக்கிய விளைவுகளை 1983 ஆடிக் கலவரத்தில் நேரிடையாகக் கண்டோம். தமிழ் கிறிஸ்தவ சகோதரனை சிங்கள கிறிஸ்தவன் தாக்கிய சம்பவம், நம் சமூகம் சிந்தித்துணர தெளிவான பாடமாகும். சகோதரத்துவத்திற்கு விளக்கம் சொன்ன சாந்தி மார்க்கத்தின் சந்ததிகளிடையே "இப்படியொரு" விபரீதம் வராமல் இருக்க, நாம் இப்போதே வழிகாண வேண்டும். ஏனெனில் "நம்மை" பிளவுபடுத்தி பெருமிதம் கொள்ள, சில தீயசக்திகள் நம்நாட்டில் எப்போதும் "ஒன் யுவ மார்க்" கில் தயாராகவிருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கார்ள் மார்க்ஸ் "மதத்தைத்தான் அபின்" என்றார். மொழியும் இன்னொரு வகை போதை தரும் பொருள் என்பதை 'இஜ்மாஃ' செய்து ஒப்பிட்டறிய நம் மவர்களுக்குத் தெரியாதா என்ன? நம் நாட்டில் இனப்பிரச்சினை வேர் பிடிக்கத் துவங்கிய ஆரம்பகாலத்தில், தனிச் சிங்களச் சட்டம் (1956 இல்) அரங்கேற முனைப்பு கொண்ட காலப்பிரிவில், நம் நாட்டு அப்போதைய உண்மையான இடதுசாரித் தலைவர்கள், "மொழி இரண்டானால் நாடு ஒன்றாக இருக்கும்; மொழி ஒன்றானால் நாடு இரண்டாகும்" என சூசகமாகக் கூறிய வரிகளின் நிதர்சனத்தை இன்று அனுபவிக்கிறோம். இந்திய முன்னாள் ஜனாதிபதி 'சர்வபள்ளி' ராதா கிருஷ்ணன் பாக்கிஸ்தானை பற்றி ஒரு முறை கூறும் போது, "இருமொழி பேசும் ஓரினம், சமயத்தினால் தாக்குப் பிடிக்காது" எனக் கூறியதன் நடைமுறையை பங்களாதேஷ் பிரிந்தபோது கண்டோம்.

நம் நாட்டு இடதுசாரிகளின் கூற்றும், தத்துவமேதை ராதா கிருஷ்ணனின் கருத்தும் நம் சிந்தனைக்கு விருந்தாகட்டும். மொழி என்பது சாதாரண ஒரு விடயம் தானே என்று சும்மா இருந்துவிட முடியாது என்பதை "முல்லா" சீரியஸாகவே சொல்லி வைக்க விரும்புகிறேன்.

எண்ணித் துணிவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கில் பலாத்காரமாய் வெளியேற்றப்பட்டு உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம்

எம்.ஐ.எம். முகைதீன்
தமிழில் எம்.எஸ்.ஜாபீர்

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அன்றாட வாழ்வில் மேம்பாட்டினை ஏற்படுத்தும் முகமாய் அவசர மனிதாபிமான தேவைகள் மீதே அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே 6-9 ஜனவரி 2003 இல் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டது. இதன் நிமித்தம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் துரித மீள்குடியேற்ற திட்டமொன்றுக்கு இருசாராரும் இணக்கம் கண்டனர்.

வடக்கு, கிழக்கிலிருந்து வலுக்கட்டாயமாக உள்நாட்டுள் இடம்பெயர்ந்து பின்வரும் மாகாணங்களில் நலிவுறும் முஸ்லிம்களின் விபரம்.

*வருடம் 2002*

| மாகாணம் | குடும்பங்கள் | மக்கள |
|---|---|---|
| புத்தளம் | 15000 | 74140 |
| அனுராதபுரம் | 865 | 4070 |
| குருணாகல் | 487 | 2311 |
| கம்பஹா | 1050 | 4725 |
| கொழும்பு | 425 | 1912 |
| களுத்துறை | 395 | 1856 |
| மாத்தளை | 85 | 517 |
| கண்டி | 110 | 517 |
| காலி | 05 | 23 |
| கேகாலை | 32 | 150 |
| அம்பாறை | 110 | 523 |
| திருகோணமலை | 2207 | 10492 |
| மட்டக்களப்பு | 343 | 1631 |
| மொத்தம் | 21614 | 102867 |

1990இன் இனச் சுத்திகரிப்பின் போது LTTE இனால் கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமானம் 10256 மில்லியன் ரூபா அல்லது 110 மி. அமெரிக்க டொலர்.

| விபரம் | தொகை | பெறுமானம் (மில்லியனில்) |
|---|---|---|
| வதிவிட சொத்துக்கள் | 22000 | 5500 |
| வர்த்தக தொழில் ஸ்தாபனங்கள் | 24002 | 2100 |
| மத கலாசார நிறுவனங்கள் | 340 | 1700 |
| விவசாய காணிகள் | 39400 ஏக்கர் | 200 |
| தங்க நகைகள் | 475000 கிராம் | 300 |
| மந்தை | 211000 | 150 |
| மோட்டார் வாகனங்கள் | 320 | 160 |
| மோட்டார் சைக்கிள்கள் | 800 | 20 |
| மாட்டு வண்டிகள் | 750 | 04 |
| துவிச்சக்கர வண்டிகள் | 4000 | 25 |
| மீன்பிடிப்படகு | 850 | 40 |
| படகு இயந்திரம் | 400 | 16 |
| மீன்பிடி வலை | 1200 | 08 |
| குளிர்சாதன பெட்டிகள் | 200 | 02 |
| தொலைக்காட்சிப் பெட்டிகள் | 2000 | 40 |
| வானொலிப் பெட்டிகள் | 600 | 01 |
| மொத்தம் | | 10256 மி. ரூபா |

நன்கொடை வழங்கும் நாடுகள் இத்தொகையினை LTTE இனர் முஸ்லிம்களுக்கு வழங்கவேண்டும் என்று நிபந்தனை இடவேண்டும்.

1990ம் ஆண்டு முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றபட்டமைக்கு விடுதலைப் புலிகளின் சார்பாக தனது வருத்தத்தை 10.02.2002 இல் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் தலைவர்களின் சர்வதேச பத்திரிகை மாநாட்டில் மீளவும் கூறிக் கொண்ட திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் "அது நியாயப்படுத்த முடியாத பெருந்தவறு" என்றதோடு கடந்த காலத்தில் நிகழ்வுற்ற இத்தவறை மறந்து விடுமாறு முஸ்லிம்களை வேண்டிக் கொண்டார். ஆனால், திரு. பாலசிங்கம் அவர்கள் பகிரங்க மன்னிப்புகோரி, மூன்று மாதங்களுக்குள், வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமுகமாய் அமைச்சர் ரவூஃப் ஹக்கீம் - விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்த 6 வாரங்களுக்குள் LTTE இனர் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடாத்தினர். முஸ்லிம் மக்களின் படுகொலையும், பொருளாதார அழிவும் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்நிலையில் மறக்கவும், மன்னிக்கவும் எங்ஙனம் முஸ்லிம்களால் முடியும்?

முஸ்லிம்கள் மீது குறிப்பாக வடக்கு கிழக்கில் இலங்கையின் இன முரண்பாடு அச்சந்தருகிற தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஓர் இலட்சத்திற்கும் அதிகமான முஸ்லிம்களின் பலாத்கார வெளியேற்றம், பள்ளிகளின் மீதான தாக்குதல், தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம்களின் படுகொலைகள், காணிப் பறிப்பு, சாதாரண முஸ்லிம் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல் முஸ்லிம்களிடையே பெரும் அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. கடந்த இரு தசாப்தகாலமாக வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்கள் மீது தமிழ் ஆயுதபா ணிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட குரூரம் எதிர்காலத்தில் முஸ்லிம்கள் விழிப்புடையோராய் இருக்க வேண்டுமென எச்சரித்திருக்கிறது. வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் முதல்நிலை அபிலாசையாவது அன்னவர்களின் இருப்பும், பாதுகாப்பும், தாயகத்திற்கான கோரிக்கையும் சுயாட்சிக்கான பராதீனப்படுத்த முடியாத உரிமையுமே ஆகும்.

1990ம் ஆண்டு ஒக்டோபர் 3ம் வாரம் வடமாகாண முஸ்லிம்கள் தங்களின் இல்லிடங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர். நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் அவரவர் வாழ்விடங்களை விட்டகல வேண்டுமென கடைசி அறிவிப்பு செய்யப்பட்டிருந்தனர். LTTE யினரால் வெளியேற்றப்பட்ட 75000 முஸ்லிம்கள் வடக்குக்கு வெளியே இழிநிலையில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களால் இழக்கப்பட்ட முஸ்லிம்களுடைய சொத்துக்களின் தொகை US $ 110 மில்லியன் என கணிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு உரித்தான 45000 விவசாய நிலங்கள் புலிகளினால் பறிக்கப்பட்டதோடு விவசாய உற்பத்திகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

விடுதலைப் புலிகளின் அரசியல் ராணுவ தந்திரோபாயமாவது, முஸ்லிம் சமூகத்தின் பொருளாதார பலத்தை குன்றச் செய்வதே. இந்நோக்கத்தை அடையுமுகமாக LTTE ஏனைய தமிழ்க் குழுக்களைப் போலவே முஸ்லிம்களின் வியாபார ஸ்தலங்களையும், பொருளாதார முயற்சிகளையும் இலக்காக்கினர். வியாபாரப் பொருட்களை கொள்ளையிடல், வியாபாரிகளை கப்பம் பணத்திற்காக கடத்தல் ஆகியன வடக்கு கிழக்கில் காணக்கூடிய நிகழ்வுகளாகவே இருக்கின்றன.

கடற் புலிகளால் பல முஸ்லிம் மீனவர்கள் கடலில் வைத்துக் கொல்லப்பட்டனர். தமிழ்க் கிராமங்களை அண்மித்துள்ள நீர் நிலைகளில் முஸ்லிம்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதற்கோ தாங்கள் பிடித்த மீனை தமிழ்ப் பிராந்தியங்களில் விற்பதற்கோ அவர்கள் விடுதலைப் புலிகளால் அனுமதிக்கப்படுவதில்லை.

விடுதலைப் புலிகளாலும் ஏனைய தமிழ் குழுக்களினாலும் முஸ்லிம்களுடைய கலாசார சமய சின்னங்கள் தாக்குதலுள்ளாக்கப்பட்ட நிகழ்வுகள் அநேகம் உள்ளன. அக்கரைப்பற்றில் பள்ளிவாசல் ஒன்றின் மீதான கிரனைட் தாக்குதல், ஏறாவூரிலும் காத்தான்குடியிலும் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம்களின் படுகொலை, களுவாஞ்சிகுடியில் வைத்து ஹஜ் யாத்திரிகள் கொலையுண்ட சம்பவம் ஆகியன முஸ்லிம்களின் சமய கலாசாரங்கள் மீது தமிழ்ப் போராளிகள் கொண்டுள்ள சகிப்புத்தனமற்ற தன்மையையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

போர் நிறுத்த ஒப்பந்தம் கையொப்பமானதன் பின்னர் கூட LTTE யினரால் ஊக்குமளிக்கப்பட்ட கிளர்ச்சிகளின் போது முஸ்லிம்கள் தொழுகைக்காக பள்ளிக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டனர். 2002 ஜூன் மாதம் வாழைச்சேனையில் கடத்தப்பட்ட 13 முஸ்லிம்களுள் இரு இளைஞர்கள் LTTE ஆல் கொல்லப்பட்டு அவர்களுடைய உடல்கள் அரச பாதுகாப்பு படையினரினதும், பெற்றோரினதும் கண்களுக்கு முன்னாலேயே எரிக்கப்பட்டதும், அந்த உடல்களை இஸ்லாமிய சமய முறைப்படி அடக்கம் செய்ய மறுக்கப்பட்டதும் முஸ்லிம்களின் சமய கலாசாரங்கள் மீது LTTE யினர் வைத்துள்ள மதிப்பீனத்தையே மெய்ப்பித்து காட்டுகின்றன.

2002 பெப்ரவரி மாதம் 22ம் தேதி கைச்சாத்தான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பங்குதாரர்களான இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இன முரண்பாட்டில் நேரடியாக பங்குதாரர் அல்லாதவர்களும் போரின் விளைவுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இதுதான் வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்கள் பற்றிய அவர்களின் நிலைப்பாடு.

LTTE யின் கிழக்கு மாகாண இராணுவத் தளபதி கருணா சுவிற்சலாந்து நாட்டில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தின் போது, இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலனை மட்டுமே கருத்திற் கொண்டு LTTE யினரால் தயாரிக்கப்பட்டது என்றார். மேலும் அவர் கூறுகையில் கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரம் முஸ்லிம் மக்களின் கைகளிலேயே உள்ளதென்றும், இது மாற்றப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார். தற்போது முஸ்லிம்கள் தங்கள் வருமானத்தில் 5 வீதம் வரி விதிக்கப்படுவது அவர்களுக்கு குறுகிய கால மகிழ்வளிப்பதற்காகவே விரைவில் நாம் அவர்களிடமிருந்து 20 வீதம் வரி அறவிடப்பட வேண்டும். LTTE யின் அனுசரணையுடன் பராமரிக்கப்பட்டு வரும் IBC எனும் வானொலி நிலையம் கருணாவின் இப்பேச்சை ஒலிபரப்பு செய்தது.

விடுதலைப் புலிகளின் நடத்தையிலிருந்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஏலவே தமிழீழ சமஷ்டி அரசு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் முஸ்லிம் மக்களிடையே எழ ஆரம்பித்துள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் LTTE யின் அரசியல் பணிமனைகளைத் திறந்து வைத்தல், வரி அறிவிடு முறைமை, அச்சுறுத்திப் பணம் பறித்தல், தமிழீழ நகர் பாதுகாவலர் அணியின் இயக்கம், அவர்களது சொந்த நீதி பரிபாலனம் ஆகியன பல வினாக்களை எழச்செய்கின்றன. உதாரணமாக LTTE யினரால் மேலாதிக்கம் செலுத்தப்பட்டு வரும் பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கும், இருப்புக்கும் யார் பொறுப்பாளியாவது? கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் மக்கள் தீர்ப்பு (Referendum) முடிவாகும் வரை வடக்கும் கிழக்கும் தற்காலிகமாய் இணைந்திருக்குமென அவசரகால நிலைமை அமுலிலுள்ள காலத்தில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன பிரகடனம் செய்தார். கடந்த பதினைந்து வருடங்களாக இந்த மக்கள் வாக்கெடுப்பு நடைபெறவேயில்லை. அவசரகால நிலைமை அமுலில் இல்லாத இக்காலக்கட்டத்தில் கூட இத்தற்காலிக இணைப்பு மேலும் செல்லுபடியாகுமா? தமிழீழ சமஷ்டி அரசை ஸ்தாபிதம் செய்வதற்காக கிழக்கில் மக்கள் வாக்கெடுப்பின்றி வடக்கு கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமா?

முதலில் வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றும், பின்னர் விசேஷ பணிக்குழாம் ஒன்றும் இடையில் போர் நிறுத்த இயல்பு நிலை உபகுழு ஒன்றும், கடைசியில் முக்கிய மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைக்கான உபகுழுவொன்றும் என்று வெவ்வேறான முறைகளை LTTE யினர் முயற்சித்து வருகின்றனர். இவ்வேற்பாடுகளின் முதன் நிலை நோக்கம் மத்திய அரசாங்கத்திடமுள்ள அதிகாரத்தை வடக்கு, கிழக்குக்கு - சர்வதேச அங்கீகாரத்துடன் விடுதலைப் புலிகளுக்கு மாற்றிக் கையளிப்பதேயாகும்.

தமிழ் மொழி பேசுகின்ற தமிழ் முஸ்லிம் மக்களின் வரலாற்று வாழ்விடப் பிரதேசங்களான வடக்கு கிழக்கின் ஏகப்பிரதிநிதி என்ற அந்தஸ்திற்கு சர்வதேச ஆதரவையும், சட்டவலுவையும் பெறுமுகமாய் இச்செயற்பாடுகள் மூலம் அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

ஒஸ்லோவில் கூடிய சர்வதேச சமூகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொருளாதார ஆதரவைத் தொடர்ந்து மனிதாபிமான. புனருத்தாரண செயற்பாடுகள் திட்ட நிலையிலிருந்து செயற்பாட்டு நிலைக்கு செல்ல வேண்டுமென இருசாராரும் தீர்மானித்துக் கொண்டனர். உடனடி மனிதாபிமான புனருத்தாரன சேவைகளுக்கான உபகுழு (சிரான்) செயலான்மை அணியாக அங்கீகரிக்கப்பட்டதோடு உலக வங்கி வடக்கு கிழக்கு புனருத்தாரன நிதியின் பாதுகாவலாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்து கட்டாய வெளியேற்றத்திற்குள்ளான முஸ்லிம்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு முன்னர் முஸ்லிம் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகளாவன:

1. கண்ணி வெடி அகழ்வு மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவு சிலாபத்துறை, கொண்டாச்சி மன்னார் பிரதேச செயலாளர் பிரிவு தலைமன்னார் இறங்குதுறை (Pier) மாந்தை பிரதேச செயலாளர் பிரிவு விடத்தல் தீவு, பெரியமடு, மினுகா முல்லைத்தீவு பிரதேச செயலாளர் பிரிவு முல்லைத்தீவு நகர், ஹிஜ்ராபுரம் யாழ்ப்பாண மாவட்டம் பொம்மாவெளி, மாங்குளம், சாவகச்சேரி
2. முஸ்லிம் மக்களுக்கு உரித்தான வதிவிட, வர்த்தக, தொழில்சார் கட்டிடங்களில் சட்டபூர்வமற்ற முறையில் இருக்கும் குடியிருப்பாளர்களை வெளியேற்றல்.
3. சமய கலாசார கட்டிடங்களிலிருந்து சட்டபூர்வமற்ற குடியிருப்பாளர்களை வெளியேற்றல்.
4. முஸ்லிம்களுக்குரிய விவசாய நிலங்களிலிருந்து சட்டபூர்வமற்ற குடியிருப்பாளர்களை வெளியேற்றலும், நிலங்களை விவசாயத்திற்கென பண்படுத்தலும்.
5. மனையிடத்திலுள்ள புதர், காடுகளை துப்பரவு செய்தல்.
6. நடைபாதைகளிலும், உள்ளொழுங்கையிலுமுள்ள புதர்களை துப்பரவு செய்தல்.
7. குளங்களையும், நீர்ப்பாசன வாய்க்கால்களையும் புனருத்தாரனம் செய்தல்.
8. வதிவிட, வர்த்தக, சமய கலாசார ஸ்தலங்களை மீளமைத்தல்.
9. வீதி, மின்சாரம், நீர் போன்ற பொது ஊழிய நிறுவனங்களை மீளமைத்தல்.
10. பொதுக்கட்டிடத் தொகுதிகள், பொதுக் கட்டிடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், சந்தை, பஸ் நிலையம், தபாற்கந்தோர், பொலிஸ் நிலையம், செயலாளர்மையம், பணியகக் கட்டிடங்கள் ஆகியவற்றை மீளமைத்தல்.
11. புத்தளம் - மன்னார் மேற்குக் கரையோர நெடுஞ்சாலையையும் பாலத்தையும் திருத்தம் செய்து உடனடியாகத் திறத்தல்.
12. மதவாச்சியிலிருந்து தலைமன்னாருக்குமான புகையிரதப் பாதை திருத்தப்பட்டு, புகையிரத சேவையை உடனடியாக ஆரம்பித்துவைத்தல்.
13. மன்னார் தீவினை பிரதான நிலப்பரப்போடு இணைக்கும் பாலம் மீளமைக்கப்படல்.
14. மன்னார் கரைப்பாலம் மீளமைப்ப செய்யப்படல்.
15. மாங்குளத்திலிருந்து முல்லைத் தீவு வரையிலான பாதை மீளமைக்கப்படல்.

(தொடரும்)

# சுயநிர்ணய உரிமையும் முஸ்லிம் தேசியமும்

- பிஸ்மி

'சுயநிர்ணய உரிமை' என்ற அரசியல் கருத்தாக்கமானது, நாம றிந்த வகையில் ஒன்றே ஒன்றுதான். ஒரு அரசியல் சமூகத்திற்கு அல்லது ஒரு தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை என்பது அரசியல் அர்த்தத்தில் ஒன்றே ஒன்றுதான். அதாவது, தனது அரசியல் தலைவிதியைத் தானே தீர்மானித்துக் கொள்வது என்பதே சுயநிர்ணய உரிமை என்பதன் அரசியல் உட்சாரமாகும்.

இன்று உலகிலுள்ள ஒவ்வொரு பெரிய, சிறிய தேசிய இனங்களினதும் சமூகங்களினதும் அரசுகளினதும் சுயநிர்ணய உரிமையானது, உலக ஆதிக்க சக்திகளின் ஆயுத மேலாதிக்கம் மற்றும் மூலதன ஆதிக்கம் போன்றவற்றால் பலவந்தமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றது அல்லது பறிக்கப்படுகின்றது.

உலக ஆதிக்க சக்திகளினால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள அடக்கி ஒடுக்கப்பட்ட, ஏழை மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளனர். அதனையும் மீறி சுயநிர்ணய உரிமையை நெருங்கிச் செல்வதற்கு இன்று பல நெழிவு சுழிவான வழிமுறைகளைக் கையாள வேண்டியிருப்பதன் யதார்த்தத்தை நாம் ஏற்றுக் கொள்வோம். பலஸ்தீன மக்கள், கிழக்குத் திமோரிய மக்களின் உதாரணங்கள் இவற்றில் சிலவாகும்.

அந்தவகையில், இன்று நம்மைச் சுற்றி நடைபெறும் அரசியல் பேச்சு வார்த்தைச் சூழலில், உள்ளக சுயநிர்ணய உரிமை என்று தற்போது அதிகமாகப் பேசப்பட்டு வரும் ஒரு புதிய கருத்தாக்கத்தினை எடுத்துக் கொண்டால், இதுவும் நெளிவுசுழிவான ஒரு வழிமுறையாகும். குறிப்பாக விடுதலைப் புலிகள் தரப்பில் இக்கருத்தாக்கத்திற்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது. விடுதலைப் புலிகள் எதிர்கொண்டுள்ள இன்றைய சர்வதேச நெருக்கடியின் பின்புலத்தில் நாம் இதிலுள்ள சூக்குமத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

இதே உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றி, வடக்கு கிழக்கு முஸ்லிம்களாகிய நாமும், இன்றைய குறிப்பான நிலைமையைக் கருத்தில் கொண்டு நமது அக்கறையை வெளிப்படுத்த வேண்டியுள்ளோம். நமது பாரம்பரிய தாயகத்தில் நமக்கென ஒரு சுயாட்சியை, ஒரு அரசியல் ஏற்பாட்டினை முஸ்லிம்களாகிய நாம் கோருகின்றோம். 29-011-2003 ஒலுவில் முஸ்லிம் தேசிய எழுச்சி மூலம் இது திடப்படுத்தப்பட்டுள்ளது. இச்சுயாட்சி ஏற்பாடானது தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளையும் நலன்களையும் எந்தவிதத்திலும் பாதிக்கமலிருப்பதை உறுதி செய்து கொள்வோம் என்ற அக்கறையையும் நாம் தெளிவாக வெளியிடுத்தியிருக்கின்றோம்.

பிரச்சனை என்னவென்றால், இந்தவகை உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையில், தமிழ்பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் பிரதேசங்களை உள்ளடக்கி, பிராந்திய சுயாட்சி மூலம் ஒன்றுபட்ட இலங்கை என்ற கட்டமைப்பிற்குள் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது என்று நோர்வேயில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இப்பின்புலத்தில் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களாகிய நாம் ஒரு தனியான அரசியல் சமூகம் என்ற வகையில் நமக்குள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இவ்விடயத்தில் கண்டிப்பாக அரசியல் தலையீடு செய்ய வேண்டியுள்ளோம்.

நோர்வே பேச்சுவார்த்தையின் போது எட்டப்பட்ட அரசியல் உடன்பாடானது ஒரு வரலாற்றுத் திருப்பம் என்பதாக பரவலாக இங்கும், சர்வதேச அளவிலும் பாரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இருதரப்பும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையையும் அதிலுள்ள அம்சங்களையும் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் கண்ணோட்டத்தில் நோக்குவோம் எனின், அரசியல் தீர்வு கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னுமொரு பிரதான தரப்பான வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் பற்றி இக்கூட்டறிக்கை எதனையும் குறிப்பிடவில்லை.

இதற்கு முன்னர் தாய்லாந்தில் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் அடையப்பட்ட இணக்கமாக, அரசியல் விவகாரங்கள் மற்றும் அரசியல் தீர்வு பற்றி ஆராய ஒரு உபகுழு நியமிக்கப்பட்டது. அக்குழுவானது ஒரு தடவை கூட முறைப்படி கூடி விடயங்களை ஆராய முன்னமே அவசர அவசரமாக சமஷ்டி ஆட்சி முறைமை பற்றிய மேற்கண்ட இணக்கம் அரசாங்கம்-விடுதலைப் புலிகள் தரப்பில் அடையப்பட்டுள்ளது.

மேற்படி அரசியல் உடன்பாடு எட்டப்படும்போது நமது மக்களின் அங்கீகாரம் பெற்ற உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் அல்லது நமது மக்களுக்குப் உத்தியோகபூர்வமாக பொறுப்புச் சொல்லக்கூடிய எவரும் அங்கு பிரசன்னமாகி இருக்க வில்லை. அமைச்சர் ரவூஃப் ஹக்கீம் அவர்கள் நோர்வேயில நடைபெற்ற நான்காவது சுற்றுப் பேச்சில் கலந்து கொண்டிருந்தால் கூட முஸ்லிம்களை 'தமிழ் பேசும் மக்களாக' வகைப்படுத்தும் தமிழ் ஆதிக்க அரசியல் அம்சத்தைக் கேள்விக்குள்ளாக்கியிருக்க மாட்டார் என்று நாம் உறுதியாக கூறமுடியும். காரணம், இன்று வரையிலும் ஹக்கீம் அவர்கள் முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பாதிக்கும் இவ்விடயம் பற்றி ஆழ்ந்த மௌனம் சாதித்து வருகின்றார். பிளவுபட்டுக் கிடக்கும் முஸ்லிம் காங்கிரசின் ஏனைய தலைமை அங்க உறுப்பினர்களும் அவ்வாறே அரசியல் நெருடல் எதுவுமின்றி உள்ளனர். இடைக்கால நிர்வாகம், செயலணி அமைத்தல் போன்ற விடயங்கள் பேசு பொருளாக இருந்தபோது இவர்களிடம் காணப்பட்ட அரசியல் தீவிரத்தன்மை முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல் பண்பினைக் காயடிக்க முனையும் முஸ்லிம்களை 'தமிழ் பேசும் மக்களாக' வகைப்படுத்தும் தமிழ் ஆதிக்க அரசியல் அம்சத்தில் அரசியல் காட்டத்துடன் வெளிப்படவில்லை.

சமஷ்டி குறித்த கூட்டறிக்கை வெளிவந்த பின்னர் திரு.அன்ரன் பாலசிங்கம் மாத்திரம் உத்தியோகபூர்வற்ற முறையில் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். முஸ்லிம்களை ஆசுவாசப்படுத்தும் ஒரு பண்பு அதில் தொணித்தது. அவரது கூற்றானது, முஸ்லிம் கருத்தும் முழுமை யான உடன்பாட்டுடன்தான் வடக்கு கிழக்கு சமஷ்டிக்கான அரசியல் சாசனம் வரையப்படும் என்று அவரது கூற்று உறுதியுரைக்கின்றது.

மண்ணா? மனிதர்களா? என்றால் எமக்கு மண்ணை விடவும், மனிதர்கள்தான் முக்கியத்துவம் உடையது. நிலப் பிரதேசமா? ஒன்றுபட்ட அரசியல் உணர்வா? என்றால் நாம் அரசியல் உணர்விற்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கின்றோம். பொதுவான பாரம்பரிய பிரதேசத்தில், பாரம்பரிய தாயகத்தில் வாழ்கின்றோம் என்பதற்காக, வெவ்வேறு அரசியல் உணர்வுகளால் பிணைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களையும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களையும் தமிழ் பேசும் மக்கள் என்பதாக வகைப்படுத்தும் அரசியல் தவறு மறுபடியும் விடுதலைப் புலிகளால் திட்டமிட்டு வேண்டுமென்றே விடப்பட்டுள்ளது. இவ்வாறாக வகைப்படுத்துவது, எம்மையும் தமிழ்மக்களது அரசியலுக்குள் கீழ்ப்படுத்துவதாகவே அமைகின்றது என்று நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றோம்.

தென்னிலங்கை முஸ்லிம் தலைமையின் பார்வையில், அங்கு ஒரே அரசியலுக்குள் சிங்களவர்களும் முஸ்லிம்களும் இருப்பதுபோல வடக்கு கிழக்கிலும் ஒரே அரசியலுக்குள் தமிழர்களும் முஸ்லிம்களும் இருக்கலாமே என்ற மயக்கம் உள்ளது. இது சம்பந்தப்பட்டவர்களிடம் உள்ள, வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் குறிப்பான வாழ்நிலை, எதிர்கொண்டு வரும் நெருக்கடிகள் மற்றும் அரசியல் அபிலாசைகள் பற்றிய தவறான புரிதலில் இருந்து எழுகின்றது. இதன் காரணமாகவே கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் உணர்வு, அபிலாசைகள் குறித்து ரவூஃப் ஹக்கீம், எம்.எச்.எம் முகம்மது, பௌசி போன்ற தலைவர்களால் புரிந்து கொள்வது கடினம் என்ற நியாயமான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. இப்போதும் கூட விடுதலைப் புலிகளுடன் கதைத்து மிக இலகுவாக தீர்வுகளைக் காண முடியும் என்று ரவூஃப் ஹக்கீம் போன்றவர்கள் நம்புவதும் அறிக்கைகள் வெளியிடுவதும் இந்த அரசியல் அப்பாவித்தனமான புரிதலில இருந்துதான்.

60 வருடங்களுக்கு முன்பு சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத்தமிழ் சமூகங்களை பொதுவான அரசியலுக்குள் இணைத்து இலங்கைத் தேசியம் என்ற ஒன்றுக்குள் கொண்டு வருவதாகக் காட்டிக் கொண்டு, இலங்கை அரசினையும் ஆட்சிமுறையையும் சிங்கள தேசியத்திற்குரியதாக மட்டும் மாற்றிய நிகழ்வுகளும் அதன் காரணமாக ஏற்பட்டுள்ள இரத்தம் சிந்தும் அரசியலாகிவிட்ட இன்றைய தேசிய முரண்பாடுகளும் நாமறிந்ததே.

இலங்கையை ஒரு ஆள்புல எல்லையாக எடுத்துக் கொண்டு சிங்களத்தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட அதே அரசியல் தவறுதான் இப்போது விடுதலைப் புலிகளினால் வடக்கு கிழக்கு முஸ்லி மக்கள் விடயத்திலும் விடப்படுகின்றது. அதாவது, கிழக்கு வடக்கை ஒரு ஆள்புல எல்லையாக எடுத்துக் கொண்டு, முஸ்லிம்களையும் தமிழர் களையும் எதேச்சாதிகாரமான முறையில் ஒரே அரசியலுக்குள் கொண்டுவரவும் படிப்படியாக ஒரே தமிழ்த் தேசியமாக்கி விடவும் முயற்சி எடுக்கப்படுகின்றது. இதனை விடுதலைப் புலிகளின் அரசியல் நோக்கத்திலும் செயற்பாடுகளிலும் தெளிவாகக் காண முடிகின்றது. அரசியல் உள்நோக்கமும் செயற்பாடுகளும் இவ்வாறாக இருக் கும் போது, வடக்கு கிழக்குப் பிராந்தியத்திற்கான சமஷ்டி அரசியல் சாசனமானது முஸ்லிம்களின் பூரண இணக்கப்பாட்டுடன் தான் வரையப்படும் என்ற உத்தர வாதத்தின் அரசியல் பெறுமதிதான் என்ன? இன்னமும் கூட "வாழு, வாழ விடு" என்ற முஸ் லிம்களின் குரலை தமிழ்த் தேசியம் புரிந்துகொள்ள மறுப்பது ஏன்?

## விசாலமான எல்லைகள்

எமது மௌனம் பற்றி
மேலுமாய் சிநதிக்கிறாய்...

உன்னால் முடியுமெனக்கொண்டு
தொடர்ந்தும் துன்புறுத்துகிறாய்
மௌனித்துக்கொள்கிறேன்.

பாதைகளின் முட்களும் கற்களும்
அழுத்தமாய் என்னைத்தைக்கிறது.
இவற்றையெல்லாம்
உனக்குப்பலமாக்குகிறாய்...

நான் அழுவதும்
உனக்குப் புரிகிறது
இருந்தும்

என் கோழைத்தனம்
உனக்குச் சாதகமாகிறது.

என் பயணங்களின் சாத்தியம் பற்றி
இன்னும் என்னால் காத்திருக்க முடியாமல்
மனம் மௌனங்களை விலக்குகிறது

என் ஏக்கங்களும் தவிப்புகளும்
எல்லைகளற்ற விசாலத்தில்
விதைத்திருப்பதை
அறிவாயோ .. நீ



எம்.ஐ.சித்தி றபீக்கா,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர்! காதர் சேருக்கு ஒரு திறந்த மடல்!



சேர், நலமாக இருப்பீர்கள் என்று நினைக்கிறோம். கடந்த டிசம்பர் மாதம் இறுதியில் உங்களுக்கு சரியான சுகவீனம் என்று கேள்விப்பட்டோம்; சுகவீனம் ஏற்பட்ட நிலையில் உங்களை சுற்றி இருந்த உற்றார், உறவினரிடம் நமது சமூகத்திற்கு இனி ஏதாவது செய்ய வேண்டுமென்ற மன உந்துதல் உங்களிடமிருந்து அதிகம் வெளிப்பட்டதாகவும் இறுதிக் காலத்தில் "சுடலை ஞானம்" உங்களுக்கு பிறந்திருப்பதாகவும் அறிந்து, மட்டிலா மகிழ்ச்சியடைந்தோம்.



திடீரென நீங்களும், நமது புத்திஜீவிகள் பட்டியலில் தாய் பேச்சுவார்த்தைக்கு செல்லவிருப்பதாக அறிந்து; உங்கள் "கல்விசார் அரசியல் புலமைத்துவம்" தாய் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் சமூகத்தின் குரலாக ஒலிக்க இருப்பது குறித்தும் எங்களுக்குள் பெருமை கொண்டோம். இப்போதாவது மனிசன் இறுதிக் காலத்தில் சமூகத்திற்கு ஏதாவது செய்யப் போகிறாரே என்ற நம்பிக்கை மனத்தளவில் துளிர்விட்டது. ஏனெனில் முன்பு ஒருபோதும் உங்களைப் பற்றி நாம், நமது சமூகம் நம்பிக்கை கொள்வதற்கு ஒன்றுமே இருக்கவில்லை. வெறுமனே பல்கலைக்கழக பட்டங்களை தூக்கித் தோளில் மாட்டிக் கொண்டு, சமூகத்துடன் எவ்விதமான ஒட்டும் உறவாடலும் இல்லாமல் சம்மாந்துறை - பேராதெனிய என்று பயணம் செய்து கொண்டிருந்தவர் நீங்கள்.

முஸ்லிம் சமூகம் மிக மோசமாக பாதிக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட காலகட்டங்களில் நமது சமூக நலன் நின்று இந்த சமூகத்திற்கு என்ன பங்களிப்பினை செய்திருப்பீர்கள் என்று உங்கள் மனச்சாட்சியை தொட்டு சொல்லுங்கள். ஏனெனில் உங்கள் பங்களிப்புகள் அப்படி ஏதும் இருப்பதாக நாம் அறியோம். சில வேளைகளில் ஏதாவது இருந்தால் அதனை நாம் தெரிந்து கொள்ளலாம்.

இன்று திடீரென உங்களுக்கு, இப்படியொரு திறந்த மடல் எழுதுவதற்கு நிறையக் காரணம் இருக்கிறது. இப்போதாவது உங்களைப் பற்றி உங்களுடன் பேச வேண்டி உள்ளது. இக்கடிதத்தில் உங்களின் தனிப்பட்ட நடத்தைகள், ஊழல்கள், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் பற்றி பேசுவதற்கு நாங்கள் நாகரீக மற்றவர்களல்ல. அது அனைவருக்கும் தெரிந்த விடயம், நாகரீகமானவர்களுடன், அறிஞர்களுடன் நாகரீகமான மொழியிலேயே உறவாட, உரையாட வேண்டும் என்பதும் எங்களுக்குத் தெரியும்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை நமது தலைவர், நமது மக்களின் அரசியல் அதிகாரத்தின் ஊடாகக் கட்டியெழுப்பி, நமது மக்களின் அரசியல் பலத்தின் மூலம் "உபவேந்தர் பீடம்" உருவாக்கப்பட்டதன் பின்; அதில் நீங்கள் சௌகரியமாக வந்து அமர்ந்த பின்னரே எம்.எல்.ஏ.காதர் என்ற உங்கள் பெயர், அனைவருக்கும் தெரிய வந்தது. அஷ்ரஃப் அவர்கள் செய்த தவறுகளில் உங்களை உபவேந்தராக்கியதும் ஒன்று; நமது சமூகத்திற்கு, நமது தேசிய அரசியல் இயக்கத்திற்கு உங்களது அரசியல் அறிவின், ஞானத்தினூடாக நீங்கள் ஒரு துளி பங்களிப்பாவது செய்திருப்பீர்களா? இல்லையே... முஸ்லிம் காங்கிரசுக்கு ஒரு வாக்கைத் தானும் எந்தவொரு தேர்தலிலாவது போட்டிருப்பீர்களா? நமது மறைந்த தலைவரை, முஸ்லிம் காங்கிரஸை பகிரங்கமாக நமது மக்கள் நலனில் நின்று ஆதரித்து இருப்பீர்களா?

முஸ்லிம் காங்கிரஸ் என்ற நமக்கொரு தனித்துவமான கட்சியின் வளர்ச்சிக்கு உங்கள் பங்களிப்பு என்ன? நீங்கள் ஒரு எம்.ஏ. பட்டதாரியாகவே இருந்தீர்கள். பல்கலைக்கழமொன்றின் உபவேந்தராவதற்குரிய தகுதி உங்களுக்கு இருக்கவில்லை. நமது முஸ்லிம் சமூகத்திற்குள் உங்களைவிட கல்வித் தகுதி கூடிய கலாநிதிகள் பலர் அன்று இருந்தும் மறைந்த தலைவர் உங்களையே விடாப்பிடியாய் நின்று "உபவேந்தர்" ஆக்கினார். எந்த நோக்கத்திற்காக நமக்கான தென் கிழக்கு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டதோ அதற்கு "மண்மூடி கத்தம் ஓதும்" ஒருவராகவே நீங்கள் உபவேந்தர் பீடத்திலிருந்து செயற்படத் தொடங்கினீர்கள். தலைவரின் மறைவுக்கு முன்பே; தலைவரின் அழகிய கனவினை சிதைப்பவராகவே உங்களை அவர் கண்டார். உங்களுக்கும் அவருக்குமிடையேயான முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கியது. அவர் நமது சமூக, பல்கலைக்கழகத்தின் நாகரீகம் கருதி உங்களை கண்காணித்து, மேற்பார்வை செய்து வரும் நிலையிலேயே இருந்தார்.

ஊழல்கள் தலைவிரித்தாடியது. அதிகார துஷ்பிரயோகம் தாராளமாக பிரயோகிக்கப்பட்டது. முஸ்லிம் சமூகத்தின் சொத்தான மாணவர்களின் கல்விக்கு உரித்தான செயற்பாடுகள் பல்கலைக்கழகத்தினுள் முன்னெடுக்கப்படவில்லை. உங்கள் குட்டி சாம்ராஜ்யமாகவே அப்பல்கலைக்கழகம் குறுக்கப்பட்டது. மாணவர்கள் இது ஒரு பல்கலைக்கழகம் என்று நினைக்கும் கல்விச் சூழலை இல்லாதொழித்து அதனை ஆரம்பப் பள்ளிக் கூடமாக மாற்றிய பெருமை உங்களைச் சாரும்.

தகுதியான விரிவுரையாளர்கள் பலர் இருந்தும், போதுமான தகைமை இல்லாதவர்களை விரிவுரையாளர்களாகவும் உத்தியோகத்தர்களாகவும் தத்துணிவைப் பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்து நியமித்தீர்கள். பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நிலையை சுயநலத்துக்காக பாழடித்த கைங்கரியம் தொடர்ந்தது. நியாயங்கள் பேசுபவர்களை தூக்கி எறிபவராகவும் உங்களுக்கு கூஜாத் தூக்குபவர்களை பீடங்களில் அமர்த்துபவராகவும் ஒரு குட்டி ராஜாவாகவே வீற்றிருந்தீர்கள்.

உங்கள் அதிகாரத்தின் மீதான விடாப்பிடியான பசியால் முஸ்லிம் சமூகமும் நமது பல்கலைக்கழகமும் தொடர்ச்சியாக பாதிக்கப்படுவதை கவனத்தில் எடுக்காமல், "உபவேந்தர் பதவி" தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தனக்கு மட்டுமே உரியது என வீறாப்பாக எண்ணிக் கொண்டு, அரசியல்வாதிகளின் கால்களைப் பிடித்து; அவர்களின் துரோகத் தனங்களுக்கு சேவகம் செய்து ராஜாங்கம் நடத்துகிறீர்கள்.

என்ன காதர் சேர் இது?

இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றிலேயே இதுவரை இல்லாத புதிய புதிய சாதனைகளை; அவமானங்களினால் மட்டுமே பொறிக்கப்பட வேண்டிய கோமாளித்தனங்களை தொடர்ந்தும் செய்வதற்கு உங்களால் எப்படி முடிகிறது.

நமது பல்கலைக்கழகத்திற்கு நீங்கள் என்ன ஆயுட்கால உபவேந்தரா? உங்களை விட்டால் ஆளில்லையா? எத்தனையோ சிறந்த சமூக அக்கறை உள்ளவர்கள் உபவேந்தராக வருவதற்கு நியாயமான முறையில் இதுவரை முயற்சித்தும், அவர்களின் முயற்சிகளை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் எதிர்த்து "மொட்ட கடதாசி" எழுதி, அரசியல்வாதிகளை, அதிகாரிகளை கெஞ்சி கூத்தாடி ஏன் அப்பதவியில் தொடர்ந்தும் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள்?

நீங்கள் நல்லவர், வல்லவர் என நமது சமூகம் கண்டால் உங்களை தொடர்ந்தும் பதவியில் இருக்கச் சொல்லி, மல்லுக்கு நின்றிருப்பார்கள் அல்லவா? யார் உங்களை தொடர்ந்தும் உபவேந்தராக இருக்கச் சொல்கிறார்கள். நமது மக்களா? பல்கலைக்கழக மாணவர்களா? விரிவுரையாளர்களா? அல்லது உங்களின் புண்ணியத்தின் மூலம் பல்கலைக்கழகத்தில் பதவி பெற்றவர்களா?

இக்கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் போது உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும் போல் இருக்கிறது, எப்படி தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கணனிப் பிரிவு தீப்பற்றி எரிந்து நாசமாகியது? அக்கணணிப் பிரிவுக்கு வழங்கப்பட்ட கணனி, மற்றும் உபகரணங்கள் தொடர்பான ஊழல்கள் பற்றிய மதிப்பீட்டு விசாரணை அறிக்கைக்கு என்ன நடந்தது? அதுவும் எரிந்து கருகி சாம்பலாகிவிட்டதா? இப்போது இக்கடிதம் எழுதத் தோன்றிய அவசரமான சங்கதி ஒன்று உள்ளது. அதுதான் நமது மாணவர்களின் சமூக எழுச்சியில் நீங்கள் ஆற்றிய துரோகத்தனம் பற்றியது.

உண்மையில் மனச்சாட்சியின் படி நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும். மாணவர்களின் போராட்டத்திற்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கி நின்றிருக்க வேண்டும். அல்லது உங்களின் பதவிச் சுகத்திற்கு அப்போராட்டம் தடையாக அமைந்து விடுமாக இருந்தால், மௌனமாக ஒதுங்கி நின்றிருக்க வேண்டும். அப்படிச் செய்யாது ஏன் சேர், தொடர்ந்தும் நமது மக்களின் அரசியல் உணர்வுகளுடன் மோதுகிறீர்கள்? விளையாடுகிறீர்கள்?

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பாலசுந்தரப் பிள்ளை, கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மூக்கையா போன்றவர்கள் தமிழ் மாணவர்களின் போராட்டத்தின் அரசியல் எழுச்சியினை துரோகத்தனத்தால் காட்டிக் கொடுக்கிறார்களா? பூரண ஒத்துழைப்பு வழங்கி மாணவர்களுடன் கைகோர்த்து நின்று தமிழ் மக்களின் அரசியல் குரலினை வெளிப்படுத்த அவர்கள் துணை நிற்கவில்லையா? நீங்கள் மட்டும் ஏன் குறுக்கே நிற்கிறீர்கள்? மாணவர்கள், குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் நமது மனச்சாட்சியின், நமது அரசியல் ஆன்மாவின் குரல்களல்லவா?

அந்த எழுச்சியின் முன்; உங்கள் போன்ற பச்சோந்திகளின் பம்மாத்து நின்று பிடிக்குமா? "மாணவர்கள் என்ன குஞ்சு ஊடு கட்டி விளையாடினார்களா?" அவர்கள் நமது அரசியல் வரலாற்றில் முஸ்லிம் தேசப் பிரகடனம் செய்திருக்கிறார்கள் அல்லவா? நமது இதுவரையான அரசியலில் இது மகத்தான பணியும் பங்களிப்பும் இல்லையா?

உங்கள் கல்விசார்துறை அரசியல்துறை அல்லவா? தேசப்பிரகடனம், மக்கள் எழுச்சி, சமத்துவத்தரப்பு, அரசியல் பேச்சுவார்த்தை போன்ற விடயங்கள் தொடர்பான உங்கள் அரசியல் அறிவு என்ன? நீங்கள் அரசியல் விஞ்ஞானத்தின் முதுமாணி (எம்.ஏ) அல்லவா? நமது மாணவர்களின், நமது மக்களின் அரசியல் விழிப்பும், தெளிவும் குறித்து நமது மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டிய நீங்களே இந்த விடயங்களில் சுத்த சூனியமாக இருப்பது ஏன்?

உங்களுக்குத் தெரிந்த அரசியல் தான் என்ன? அரசியல்வாதிகளை கூட்டி வந்து கலந்துரையாடல் நடத்துவதா? உங்களுக்கு நமது மக்களின் அரசியலில் அக்கறை இருக்குமென்றால் ஏன் இவ்வளவு காலமும் நமது மக்கள் அழித்துக் கொல்லப்பட்ட போதும், அடக்கி ஒடுக்கப்பட்ட போதும் நமது மக்களுக்காக ஏன் எழுதவில்லை, ஏன் பேசவில்ல, ஏன் நீங்கள் செயற்படவில்லை?

கடந்த 02.02.2003 வீரகேசரியில் உங்கள் பேட்டி ஒன்று வந்திருந்தது. பார்த்து படித்து மிக்க துயரம் கொண்டோம். (படிக்காதவர்கள், தயவு செய்து எடுத்து படித்துப் பார்க்கவும்) நமது இனத்வது அரசியலில் மட்டுமல்ல, சமகால அரசியலிலும் சுத்த சூனியம் நீங்கள். மக்கள் அரசியலைப் பொறுத்தவரை, நமது இனத்துவ அரசியலைப் பொறுத்தவரை நமது மாணவர்களுக்கு குறிப்பாக உங்கள் பல்கலைக்கழக, மாணவர்களுக்கு உள்ள அரசியல் அறிவு கூட உங்களுக்கு இல்லையென்பது அப்பேட்டியில் வெளிப்படையாகத் தெரிகிறது. ஊமையாக இருந்து அறிஞரான நீங்கள்; வாயைத் திறந்து நாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

இவ்விடத்தில் ஒரு விடயத்தை குறிப்பாக சொல்ல வேண்டி உள்ளது. இக்கடிதம் திறந்த மடலாக எழுதப்பட்டாலும் இது அநேமோதயமானதல்ல, மேற் குறிப்பிட்ட உங்கள் பேட்டி தொடர்பாக அரசியல் தெளிவுடன் உங்களுடன் பேச விரும்புகிறோம். உங்கள் கருத்துக்களை நீங்கள் எழுதலாம் சேர். உங்களை விவாதத்திற்கு அழைப்பதில் மன்னிக்க வேண்டும் என்று சொல்ல மனம் வருகுது இல்லை. நாங்களும் வீரகேசரிப் பேட்டி பற்றி, சமகாலத்தில் நமது அரசியலில் உங்கள் பாத்திரம் பற்றி, உங்களுடன் பேசுவதற்கு எவ்விடத்திலும் எங்கும் பகிரங்கமாகத் தயாராகவே இருக்கிறோம்.

"முஸ்லிம்களின் அந்தஸ்த்தை உறுதி செய்வதில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருக்கின்றனர்." என்கின்றீர்களே என்ன அந்தஸ்து அது? இனத்துவ அந்தஸ்த்தா? கலாசார அந்தஸ்த்தா? கும்பல், குழு அந்தஸ்தா? அரசியல் என்பது வெறும் "அந்தஸ்த்து" என்ற மொழிச் சொல் மட்டுமா? புலிகளுக்கு ஆயிரம் பேர் சொர்டிபிகேட் தந்து விட்டார்கள். இப்போது புதிய ஆளாய் நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

சமூகத்திற்குள் துரையப்பாக்கள் இருக்கிறார்கள், யார் அந்த முதல் துரையப்பா என்பதுதான் பிரச்சினை. நீங்கள் முஸ்லிம் சமூகத்தின் உன்னத புத்திஜீவியாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கிறீர்களே - இந்த சமத்துவத்தரப்பு என்றால் என்ன என்பது உங்களுக்குப் புரிந்திருந்தால் அந்த புரிதலையும் மீறி எப்படி அரசதரப்பில் கலந்து கொண்டிருப்பீர்கள்? நமது சமூகத்தை பேச்சுவார்த்தை மேசையில் அவமானப்படுத்துவது காணாமல், உங்களை நீங்களே அவமானப்படுத்தி வெறும் ஹோட்டல் அறைக்குள் படுத்துவிட்டு திரும்பி வருகிறீர்கள். அரசியல் காழ்ப்புணர்வுடன் எழுதுகிறோம் என்கிறீர்களா? உங்களுடன், உங்களுக்கு முன்பே பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொண்ட எம்.ஐ.எம். முஹிதீன் தான் அங்கு நடந்தது பற்றிச் சொல்லுகிறார். போதாதற்கு தமிழ், ஆங்கில பத்திரிகைகளும் எழுதுகின்றன.

நீங்கள் பேச்சுவார்த்தைக்கு செல்வது பற்றி எங்களுக்கு கிஞ்சித்தேனும் பொறாமை கிடையாது. ஆனால் உங்கள் மேல் நிறையவே இப்போது கோபம் உண்டு. சரியாக உங்கள் பணியைச் செய்யுங்கள் என்பதே அக்கோபத்தின் வெளிப்பாடாகும். எங்கள் தலைவர்களின் கோவணத்தையே பேச்சுவார்த்தை மேசையில் அன்ரன் பாலசிங்கம் உருவி எடுக்கும் போது, உங்கள் கோவணம் கழற்றப்படுவது பற்றி எங்களுக்கு என்ன அக்கறை என்கிறீர்களா? நீங்களும் எங்கள் சமூகத்தை சேர்ந்த புத்திஜீவிதானே?

அதுசரி, நமது மக்கள் முஸ்லிம் தேச எழுச்சி நடாத்தியதற்கு முன்னின்ற நமது மாணவர்களிடம் சட்டம், ஒழுங்கு தெரியுமா என்றீர்களாமே? பதிலாக ஒரு மாணவன், உங்களுக்குத் தெரியுமா சட்டம் ஒழுங்கு என ஒரு மறுகேள்வி கேட்டு, எப்படி நீங்கள் பல்கலைக்கழக சட்டத்தையும் மீறி தொடர்ந்தும் உபவேந்தர் பதவியில் இருக்கிறீர்கள் எனக் கேட்டாராமே ஒரு கேள்வி.

உபவேந்தர் கதிரையில் இருந்து நேரடியாக வெளிநாட்டுத் தூதுவர் பதவி அல்லது வெளிநாட்டு நிறுவனமொன்றில் உயர் பதவி ஒன்றுக்கு போவதுதான் உங்கள் இலக்கு என்கிறார்கள் விடயம் தெரிந்தவர்கள். உபவேந்தராக இருந்து ஓய்வு பெற்று மறுநாளே தூதுவராகப் போவது அவ்வளவு நல்லம் இல்லை சேர். அதிகமாக நமது சமூகத்திற்கு பணியாற்றி விட்டீர்கள். கொஞ்சம் ஓய்வெடுத்து வீட்டில் இருந்தே வெளிநாட்டுத் தூதுவராகப் போங்கள் சேர். நமது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை இலங்கையில் சிறந்த ஆளுமைமிக்க பல்கலைக்கழகமாக உருவாக்க இனியாவது வழிவிடுங்கள்.

நீங்கள் வெளிநாட்டுத் தூதுவராகப் போவது பற்றி எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஏனெனில் நாங்கள் தூதுவராகப் போவதற்கு ஆசைப்படாதவர்கள். அதனை எண்ணியே பார்க்காதவர்கள். ரோம் எரிந்து கொண்டிருக்கும் போது பிடில் வாசிப்பவர்களல்ல நாங்கள். நீங்கள் வெளிநாட்டுத் தூதுவராக போவதற்கு ஆட்சேபனையை யாராவது தெரிவிப்பார்களேயானால், அவர்கள் தூதுவர் பதவி மேல் கண் வைத்திருப்பவர்கள். அவர்கள் தொடர்பாக கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்கள். கொஞ்சம் அசந்தாலும் தட்டிப்பறித்து விடுவார்கள். எதற்கும் முன், கொஞ்சம் நமது அரசியல் தலைமைகளிடம் அப்பதவி தொடர்பாக உறுதிப்படுத்தல்களை வேண்டிக் கொள்ளுங்கள். ஏனெனில் இன்னும் உங்கள் போன்ற பலருக்கு அப்படியான வாக்குறுதிகள் ஏலவே அளிக்கப்பட்டிருக்கலாம். அப்படியெனில்", "அவலை நினைத்து உரலை இடித்த"வராகி விடுவீர்கள் நீங்கள். வெளிநாட்டுத் தூதுவர், உயர் பதவி நமது சமூகத்திற்கு உழைத்த கௌரவத்திற்காகவா இதுவரை வழங்கப்பட்டுள்ளது. இல்லேயோ. சமூகப் பணியின் கௌரவத்திற்கு அப்பதவி வழங்கப்படுவதாக இருந்திருந்தால் அது எப்படி பாயிஸ் முஸ்தபாவுக்கும், மன்சூருக்கும் வழங்கப்பட்டிருக்கும்?

இன்னும் நிறைய விடயங்கள் இருக்கிறது. தொடர்ந்தும் உங்களுடன் உரையாடுவதற்கு தயாராக இருக்கிறோம். நீங்கள் தயாரா?

இன்ஷா அல்லாஹ்

*இப்படிக்கு*
*உங்கள் பதில் கண்டு சந்திப்போம்!*
**அலி உதுமான்**
*3. பெப்ரவரி 2003.*

# தொலைக்காட்சியைத் தொலைத்துக் கட்டுங்கள்

உங்கள் குழந்தை கணிதம், மொழியில் கெட்டிக்காரனாக வளரவேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களா? பள்ளிக் கூடத்தில் சிறந்த புத்திசாலியாக திகழ வேண்டும் அல்லது நினைவாற்றல் மிக்க குழந்தையாக வரவேண்டும் என நீங்கள் விரும்பினால் தொலைக்காட்சி பக்கம் அவர்களை நெருங்க விடாதீர்கள்.

தொலைக்காட்சியைப் பார்ப்பது என்பது ஒரு குழந்தையின் புத்திசாலித்தனத்தைக் குறைத்துவிடும். இதற்கு காரணம் தொலைக்காட்சி என்பது அறிவு ஜீவியின் கொலையாளி, மூளையை உறைய வைக்கும் பொருள், கற்பனையைக் கொன்றுவிடும், சிந்தனாசக்தியை அடக்கிவிடும், நேரத்தைத் திருடிவிடும், தூக்கத்திற்கு இடைஞ்சலை ஏற்படுத்தும், விளையாட்டு நேரத்தை கொள்ளையடித்துவிடும். இதோடு முடியவில்லை. இன்னும் அதிகம் இருக்கின்றது.

தொலைக்காட்சியில் எதை ஒளிபரப்புகின்றார்கள் என்பதைவிட, அதனைப் பார்ப்பதினாலேயே வளரும் ஒரு குழந்தையின் மூளை அதிக அளவு மோசமாக பாதிக்கப்படுகின்றது என பல ஆய்விலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகள் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கு தடைவிதிக்க வேண்டுமென குழந்தை நல மருத்துவ சங்கம் அண்மையில் சிபாரிசு செய்துள்ளது.

இதற்குக் காரணம் ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சியை அக்குழந்தை முதல் இரண்டு வயதாக இருக்கும் போதே கண்காணிக்கப்பட வேண்டும். அச்சமயத்தில் அக்குழந்தையுடன் மனிதத் தொடர்பே இருக்க வேண்டும். தொலைக்காட்சியின் படங்கள் அல்ல.

மூளை வளர்ச்சி என்பது ஒரு குழந்தை குறிப்பிட்ட வயதாக இருக்கும் போதே வளர்ந்துவிடும். அப்படி அந்த வயதில் மூளை வளர்ச்சிக்கு நாம் உறுதுணையாக இல்லாவிட்டால் அதனால் பாதிப்புக்கள்தான் அதிகம். விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புப்படி ஒரு சிசு, தான் வளரும் போதே இசையை அடையாளம் கண்டு கொள்ளுமாம்.

சிறுவர்கள், பேசுவதற்கு முன்பதாகவே சிறு கணக்கைச் செய்துவிடுவார்கள். இடைநிலைப் பள்ளிகளுக்குச் செல்வதற்கு முன்பதாகவே பன்னாட்டு மொழிகளை ஆரம்பப் பள்ளியில் மிக எளிதாக கற்றுக் கொள்ள முடியும் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

**குழந்தைகள் அதிக நேரத்தை தொலைக்காட்சியில் செலவிடுவதால் விளையாடுவது, படிப்பது, எழுதுவது, கற்பது அல்லது பழகுவது போன்றவற்றைக் குறைத்துக் கொள்கின்றார்கள்.**

அமெரிக்காவின் டாக்டர் சேல்லி வார்ட் அவர்களின் 10 ஆண்டு ஆய்வுப்படி குழந்தைகளின் பேச்சு வளர்ச்சி பாதிக்கப்படுவதற்குத் தொலைக் காட்சியே முக்கிய காரணமாக இருப்பதாகக் கூறுகிறார்.

தொலைக்காட்சியின் பின் பகுதியிலிருந்து வரும் சத்தமே குழந்தைகள் பேசுவதற்குத் தடையாக இருப்பதாக அந்த ஆய்வு காட்டுகிறது. தொலைக்காட்சியை சதா பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் எட்டு மாதத்தில் தனது பெயரை தெரிந்து கொள்ளவில்லை. இரண்டு வயதில் அறிந்து கொள்ள வேண்டிய கல்வியை மூன்று வயதில்தான் தெரிந்து

## நீங்களும் படிக்கலாம் ஒரேயொரு குறிப்பு...

கொள்கின்றார்கள்.

தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு குழந்தை, பேச்சு தொடர்புக்கான நேரத்தை வீணாக்கி விடுகின்றது. இதனால் ஒரு வாக்கியத்தை முழுமையாக பேசுவதற்கும் எழுதுவதற்கும் சிரமத்தை எதிர்நோக்குகின்றது அக்குழந்தை.

### தூக்கம் போச்சு - படிப்பும் போச்சு

தொலைக்காட்சியை அதிகமாகப் பார்க்கும் குழந்தைகள் படுக்கைக்குச் செல்ல



அடம் பிடிப்பார்கள், தூக்கம் வராது அல்லது சீக்கிரமாகவே எழுந்துவிடுவார்கள். தூக்கமின்மை உங்கள் குழந்தையின் பள்ளிப் படிப்பை பாதித்துவிடும். வீட்டுக்கு வந்தால் வீட்டுப் பாடம் செய்வதிலும் சோம்பல் ஏற்படும். இதனால் அக்குழந்தையின் கல்வி வளர்ச்சியே பாதித்துவிடும்.

தொலைக்காட்சியில் அடிக்கடி ஒலி, ஒளி மாற்றங்கள் செய்யப்படுவதால் அது குழந்தையின் நரம்பு வளர்ச்சியைப் பாதித்து அது 3 விதமான நன்னடத்தைகளைப் பாதித்துவிடும் என்றும் கண்டுபிடித்துள்ளார்கள்.

திடீரென்று அதிக சத்தம், பல வர்ணங்கள், திடீர் அசைவு போன்ற காட்சிகள் குழந்தைகள் தன் சொந்த அறிவைப் பயன்படுத்துவதற்குத் தடையாக அமைகின்றது.

தமிழ்ப் படங்களைக் குறிப்பாக சண்டை வன்முறைக் காட்சிகள் கொண்ட தமிழ் சினிமாப் படங்களை நமது குழந்தைகள் அதிகமாகப் பார்ப்பதால் நமது குழந்தைகளிடையே பல தீய பழக்கங்கள் தென்படுவதற்கு தமிழ் சினிமாப் படம் ஒரு காரணமாக திகழலாம் என்பதை அமெரிக்க விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பை வைத்து ஆணித்தரமாகக் கூறலாம்.

குழந்தைகள் அதிகநேரத்தை தொலைக்காட்சியில் செலவிடுவதால் விளையாடுவது, படிப்பது, எழுதுவது, கற்பது அல்லது பழகுவது போன்ற கல்வி மேம்பாட்டில் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. வாரத்திற்கு 10 மணி நேரம் அல்லது தினமும் 2 மணி நேரங்களை தொலைக்காட்சிக்காக செலவிடும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி மோசமாக குறைந்திருப்பதாக அமெரிக்க கல்வி இலாகாவின் அறிக்கை கூறுகின்றது.

தொலைக்காட்சி உறவுமுறையைப் பாதித்துவிடும். அது அக்குழந்தையைச் சுற்றுப்புறத்திலிருந்து மட்டும் பிரித்து விடுகின்றது என்று நினைத்துவிடாதீர்கள். ஆனால், குடும்பத்திலிருந்தும் குறிப்பாக பெற்றோர்களிடமிருந்தும் பிரித்துவிடுகின்றது. பெற்றோர்கள் தான் குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு மிக முக்கியமானவர்களாக திகழ்கிறார்கள்.

### வீட்டினுள் கொலையாளிகள்

ஒவ்வொரு கார்ட்டூன்களில் 25 மற்றும் 100 வன்முறைக் காட்சிகள் இருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. குழந்தைகளுக்காக தயாரிக்கப்பட்ட 70 சதவீத நிகழ்ச்சிகளில் மனித சேதம் அல்லது கொலைகள் நிறம்பிய காட்சிகள் அடங்கி இருக்கின்றன. ஆக தொலைக்காட்சி உங்கள் குழந்தைக்கு நல்லதா? நீங்களே தீர்மானியுங்கள்..

## அரசியல்வாதிகளின் கவனத்திற்கு...

தயவு செய்து எமது பத்திரிகைக்கு உங்கள் வழக்கமான அறிக்கைகளை அனுப்பி வைக்க வேண்டாம்! இதற்கும் காரணம் உள்ளது. அறிக்கைகளில் மட்டும் நமது மக்களுக்காக போராடுவதிலும் பேசுவதிலும் நீங்கள் வல்லவர்கள் என்று நமது மக்களுக்கும் தெரியும்.

பொறுப்பில்லாமல் பேசக்கூடாது! சொன்னால் செய்ய வேண்டும்! பத்திரிகை அறிக்கை, மேடைப் பேச்சுக்களை வைத்து வாக்குப் போடும் காலம் மலை யேறி விட்டது.... உங்களின் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஆயிரமாயிரம் கேள்விகள நமது மக்களிடம் உள்ளன. நீங்கள் அண்மைக்காலமாக மக்களிடம் சொன்ன ஆயிரமாயிரம் கதைகளுக்கு மக்கள் உங்களிடமிருந்து பதில் தேடுகின்றனர். நமது மக்களின் பேச்சுக்களையும் கருத்துக்களையும் எழுத்துக்களையும் இனியாவது கொஞ்சம் கேட்போமா?

அண்ணன் அமிர்தலிங்கம் - மேடைக்கு மேடை, வார்த்தைக்கு வார்த்தை "தமிழீழம் எடுத்துத் தருவோம்" என்றார். ஆனால் அதற்கான எந்த முயற்சியையும் அவர் எடுக்கவில்லை. "வெறும் பதவிச் சுகத்திற்கே தமிழீழம்" என்ற உண்மை மக்களுக்கு தெரிய வந்த போது... ஒரு தகவலுக்காகவே இதனைச் சொல்கிறோம்...

உங்களால் செய்ய முடிந்ததையே மக்களுக்குச் சொல்லுங்கள்! மக்களுக்காக போராடுங்கள்! உங்களுக்கு பக்கம் பக்கமாக எழுதுவதற்கு நாமே தயாராக இருக்கிறோம்! உங்கள் வேலையையும் எங்கள் பணியையும் இலகுபடுத்துவதற்கே இக்குறிப்பு!

நன்றி

-பிரதம ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரீஸ் எம்பியின் பேட்டி

*முஸ்லிம்களுடைய அரசியலில் இளம் தலைவர்களில் ஒருவராக நீங்கள் இருக்கின்றீர்கள். ஆகவே, இன்றைய அரசியல் சூழலைப் பொறுத்தவரை உங்கள் மனநிலை என்ன?*

இன்றைய அரசியல் சூழ்நிலையில் முக்கியமாக நடைபெறும் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்குத் தனித் தரப்பு அவசியம் என்ற கோரிக்கை முன்னுரிமை பெற்றிருக்கின்றது. அதனைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பு என்ற விடயமும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாங்கள் இன்று இருந்து கொண்டிருக்கின்றோம். உண்மையில் எனது மனநிலையைப் பொறுத்தவரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சிக்கு கொண்டு வந்த பின்பு அரசுக்கும், புலிகளுக்குமிடையே நடைபெறுகின்ற பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஆரம்பத்தில் ஓரளவு இருந்தாலும் இன்று அறவே இல்லை எனும் சூழ்நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம். இது இரண்டு முக்கிய காரணங்களின் அடிப்படையில் இந்த தோற்றப்பாடு எனது மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

முகசியமாக ஒன்று முஸ்லிம் தலைமைக்கும், விடுதலைப் புலிகள் தலைமைக்கும் இணக்கம் காணப்பட்ட முஸ்லிம்களின் தனித்தரப்பு கோரிக்கை ஓரிரு மாதங்களுக்குள் மீறப்பட்டமை சமாதானப் பேச்சுவார்த்தையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லாமல் செய்தது.

அடுத்தது, ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் உள்ள அரசாங்கம் முஸ்லிம்களின் தனித்தரப்பு என்ற விடயத்திலான கடப்பாட்டினைச் செய்வதிலிருந்து குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கா தன்னை விடுவித்துக் கொண்டார் என்றே கூறவேண்டும்.

ஏனெனில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குள் ஏற்பட்ட பிளவு அவருக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையினை தோற்றுவித்து விட்டது. அந்தப் பிளவின் காரணமாக முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றுதல் வேண்டும் என்ற அந்தஸ்த்தை அவர் மாற்றி, இரண்டு குழுக்களுக்குள் இடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைஎடுப்பதில் கவனஞ் செலுத்தி, அந்த விடயத்திலிருந்து தங்களது அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொண்டார் என்றே கூறவேண்டும். ஏனென்றால், பிளவுபட்ட இரு அணியினர்களும் தங்களை ஏற்க வேண்டுமென முன்வைத்தனரே தவிர, முஸ்லிம்களுக்கான தனித் தரப்பு கோரிக்கை, சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கான தீர்வு, என்பதை அழுத்திக் கூறுவதிலிருந்து இவ்விரு அணியினர்களும் காட்டிய அசிரத்தை என்பன ரணிலுக்கு வாய்ப்புற்றது என்று கூறலாம்.

*சமகால அரசியல் சூழ்நிலையில் குறிப்பாக விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண முஸ்லிம்களுடனான உறவு மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகின்றது. எதிர்காலத்தில் தமிழ் தலைமைகளுடனும் தமிழ் மக்களுடனும் இணைந்து முஸ்லிம்களுக்கான தீர்வினை பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா?*

இன்று விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண தலைமை முஸ்லிம் மக்கள் மீது காட்டுகின்ற கடுமையான போக்கின் காரணமாக எதிர்காலத்தில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் இணைந்து ஒரு தீர்வை முன்வைக்கலாமா என்ற சந்தேகம் வலுப்பெற்றிருக்கிறது. ஏனென்றால், பேச்சுவார்த்தையின் ஆரம்ப கால கட்டத்தில் விடுதலைப் புலிகளும், முஸ்லிம்களும் சேர்ந்து ஒரு தீர்வினை முன்வைக்கலாம் என்ற பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் செயற்பட்டிருந்தாலும் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண தலைமைகள், ஏனைய உறுப்பினர்களும் சேர்ந்து முஸ்லிம் விரோதப் போக்குகளை கூடுதலாக எடுத்திருக்கும் தன்மைகள் காரணமாக விடுதலைப் புலிகள் மீதான நம்பிக்கை முஸ்லிம்களுக்கு இல்லாமல் செய்கின்ற நிலையையே இருக்கின்றது.

இந்நிலைகள் எதிர்காலத்தில் அவர்களின் நிர்வாகத்தில் இணைந்தும், அவர்களின் அதிகாரப் பகிர்வுக்குள் முஸ்லிம்களும் தமது அதிகாரத்தினைப் பகிர்ந்து கொள் ளலாமென்ற விடுதலைப் புலிகளின் வாதத்தினை முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்ற நிலைக்கு கொண்டு வந்துள்ளது. இதன் காரணமாகத் தான் இன்று முஸ்லிம் மக்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. சமத்துவமான தீர்வில் முஸ்லிம்களுக்கும் சமமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று நமது பிடியாக இருக்கின்றனர். இதில் எந்த விட்டுக் கொடுப்புகளுக்கும் இடம் இருக்கப் போவதில்லை. ஆகவே, எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளுடன் முஸ்லிம்கள் இணைந்து அரசியல் தீர்வினை முன்வைக்கலாம் என்ற கருத்து எதிர்காலத்தில் எந்தவொரு சமயத்திலும் முஸ்லிம் மக்களினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

*ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குள் நிலவி வரும் பிரச்சினையானது மக்களுடைய அரசியல் நிலைப்பாட்டினை பிரதிபலிக்கும் ஒரு போக்கினையே வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த நிலைமையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை முற்று முழுதாக நமது மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கின்ற ஒரு தேசிய அரசியல் இயக்கமாக நாங்கள் செம்மைப்படுத்தி முன் நடத்த முடியாதா?*




உண்மையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றப்பாடு முஸ்லிம்களுக்குள் ஒரு தேசிய இயக்கம் ஒன்றினை கட்டியெழுப்பப்படல் வேண்டும் என்கின்ற ஈர்ப்பில் ஆரம்பமானது தான். மறைந்த தலைவரின் காலகட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாடுகள் நூறு வீதம் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடியனவாக இருந்தது உண்மை. அவரின் மறைவின் பின்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவ பிரச்சினை இருந்தது. அதன் பின்பு, அதுவொரு பாரிய அதிகார வலுப் போராட்டமாக மாறி ஈற்றில் றவூஃப் ஹக்கீம் தலைவராக பிரகடனப்படுத்தப்பட்டார். அதன்பின்பு அதனுடைய செயற்பாடு அரசாங்கத்தில் அங்கம் பெற்று, மக்களுடைய பிரச்சினையை முன்னிலைப் படுத்தி தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று ஓர் அரசியலையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செய்து வந்தது.

இப்படியாக இருக்கின்ற போது துரதிர்ஷ்டவசமாக மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட போது அதில் முஸ்லிம்களுடைய அபிலாசைகள் அந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாததான் காரணமாக முஸ்லிம் மக்கள் சந்தேகங்கள் கொண்டு பார்க்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதற்கு முற்றிலும் நியாயமான காரணங்களுண்டு.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றம் முஸ்லிம்களுடைய இனப்பிரச்சினை விடயங்கள், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மக்களுடைய அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற இடத் திலிருந்துதான் ஆரம்பிக்கிறது. ஆரம்ப காலக் கட்டத்தில் சில தவறுகளின் காரணமாக சந்தேகங்கள் ஐயப்பாடுகள் மக்கள் மத்தியிலிருந்து உருவாகத் தொடங்குகின்றது. இது கட்சிக்குள்ளும் ஊடுருவி புதியதொரு பிரச்சினையை எழுப்புவதற்கு காரணமாக அமைந்து விட்டது. இந்த காலகட்டத்தில் தான் மக்களுடைய அபிலாசைகளை, உணர்வுகளை நாங்கள் தேசிய ரீதியாகவும், சாவதேசரீதியாகவும் வெளிக்காட்டும் முகமாகவே கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நாம் பாராளுமன்ற பகிஷ்கரிப்பை மேற்கொண்டிருந்தோம்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைமையில் உள்ளவர்கள் அமைச்சு பதவிகள், ஏனைய கட்சி உறுப்பினர்கள் கூட்டுத்தாபன பதவி போன்றவற்றினை உடனடியாக இராஜினாமாச் செய்துவிட்டு, மக்களுக்குரிய எழுச்சியினை மக்களுடைய அபிலாசைகளை இனப்பிரச்சினைத் தீர்வு திட்டத்தில் முன்னெடுப்பதற்காக மீண்டும் ஒற்றுமைப்பட்டவர்களாக, புதிய ஒழுங்கில் செயற்பட வேண்டும் என்பதே எங்களுடைய வாதமும் கருத்துமாகும். இந்த அடிப்படையில் மக்கள் இன்று எந்த மனநிலையில் இருக்கின்றார்கள் என்பதற்கு தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற் கொண்ட "முஸ்லிம் தேசப் பிரகடனம்" எனும் எழுச்சியினை உதாரணமாகக் கொள்ளலாம்.

*முஸ்லிம்களின் அரசியல் பாதையில் ஒரு மாறுபட்ட போக்கை பகிஷ்கரிப்பு ஊடாக ஜனநாயக நடைமுறை வழியில் வெளிப்படுத்தி இருந்தீர்கள். இந்த பகிஷ்கரிப்பு போராட்டத்தில் உங்களுக்கு ரணில் தரப்பால் தரப்பட்ட முடிவுகள்தான் என்ன? இந்த பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்பான இன்றைய உங்கள் மனநிலை என்ன?*

நிச்சயமாக பகிஷ்கரிப்பு போராட்டம் [illegible] நடையமன வேதனைகள் அவர்களுடைய அபிலாசைகளை வெளிக்கொணர்வதற்கு எங்களால் கொண்டுவரப்பட்ட ஓர் அடிப்படையான போராட்டமாகும். அப்போராட்டத்தின் காரணமாக முஸ்லிம்களுக்குள்ளும், இளைஞர்களுக்குள்ளும் மனத்தளவில் வெதும்பிப் போயிருந்த அரசியல் உணர்வுகளை நாங்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தின் மூலம் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் எடுத்துக் காட்டக் கூடியதாக இருந்தது.

இதன் பின்னர் இப்போராட்டத்தின் கருப் பொருளாக இருந்த அடிப்படை அம்சம் எதிர்காலத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் போது முஸ்லிம்களுக்கு சமாந்தரமான அதாவது தமிழ் மக்களுக்கு வடக்கு, கிழக்கில் எவ்வாறு தனி அலகு வழங்கப்படுகின்றதோ அதே போன்ற சமாந்தரமான தனி அலகு வழங்குவதில் பிரதம மந்திரியினதும் இன்றைய அரசாங்கத்தினதும் நிலைப்பாடு யாது? என்பதை அறிவதற்குமான ஓர் ஆரம்ப முயற்சியாகவே பகிஷ்கரிப்பை மேற்கொண்டோம்.

அந்த முயற்சியில் நாங்கள் ஒரு மாதத்திற்கு மேலாக ஏறத்தாழ ஏழு அல்லது ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த போது அரசுக்கும் எங்களுக்கும் இடையில் பரஸ்பர பேச்சுவார்த்தைகளும் கடிதப் பரிமாற்றங்களும் நடைபெற்று, இறுதியில் ஓர் உடன்பாட்டிற்கு வரக்கூடியதாக இருந்தது. அதாவது பிரதம மந்திரி எங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில், "இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகின்ற போது நிச்சயமாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கான தனியலகு உறுதிப்படுத்துவதற்கு நான் உறுதியாக இருப்பேன்" என்று அவரது நிலைப்பாட்டினை தெளிவாக வெளிப்படுத்தினார். இதில் ஓரளவு எங்களுக்கு திருப்தியான நிலை காணப்பட்ட நிலையில் எங்களுடைய போராட்டம் தேசிய ரீதியாகவும், சாவதேச ரீதியாகவும் எழுச்சி பெற்றதினால் அந்தப் போராட்டத்தால் நாங்கள் வெற்றியைக் கண்டிருந்தோம்.

அதுமட்டுமன்றி முஸ்லிம்களுக்கான "தனியலகு" கோரிக்கை என்பது ஓர் உயிரோட்டமுடைய கோரிக்கையாக முன்னெடுக்கப்படும் சூழல் உருவாக்கப்பட்டது. அதாவது தனியலகுக்கான அரசியல் போராட்டம் இப்படி என்றும் முன்னெடுக்கப்படவில்லை. இதனை முற்றிலும் மாற்றி அமைத்து, அன்றாடம் எல்லா அரசியல் சக்திகளாலும் சிங்கள அரசியல் சக்தியாலும் விடுதலைப் புலிகளாலும், மேற்குல நாட்டு அரசாங்க தூதர்களாலும் முஸ்லிம்களுடைய கோரிக்கையான தனி அலகை புரிந்து கொள்ள வைப்பதற்கு இப்போராட்டம் நிச்சயம் களம் அமைத்துத் தந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. எனது கருத்தாகும்.

*முஸ்லிம் மக்களுடைய அரசியல் தீர்வில் மக்களுடைய அரசியல் உணவுகளை வெளியுலகிற்கு எடுத்துக்காட்ட மக்கள் பிரதிநிதிகளாகிய நீங்கள் பாராளுமன்றத்தில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டீர்கள். இவ்விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க உங்களுக்கு தந்திருக்கும் வாக்குறுதி தொடர்பாக, நீங்கள் உண்மையான விசுவாசம் கொண்டிருக்கின்றீர்களா? பேச்சுவார்த்தையின் போது உரிய சந்தர்ப்பம் ஏற்படுகையில் முஸ்லிம்களுக்கு தீர்வு எட்டப்படும் என்னும் வாக்குறுதியை நம்பலாமா?*

இன்று முற்றும் முழுதான மாறுபட்ட நிலையே காணப்படுகின்றது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் போது முஸ்லிம்களுக்கும் தீர்வு எட்டப்படும் என்ற வாக்குறுதி ஒரு பக்கம் இருக்க, இப்பேச்சுவார்த்தையில் முஸ்ம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை இன்னும் அரசாங்கம் ஏற்று பகிரங்கமாக விடுதலைப் புலிகளிடம் அழுத்தம் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் இருந்து வருகின்றது. இதனை நாங்களும் ஏற்றுக் கொள்கின்றோம். இது பிரதமரில் உள்ள நமபகத தனமை மது சநம்தகததை ஏற்படுத்துகின்ற ஒரு விடயமாகும். ஏனென்றால் தீர்வு தருவதற்கு முன்பே பேச்சுவார்த்தை என்ற விடயத்தில் தனித் தரப்பு என்ற விடயத்திலே இன்னும் ஒரு முடிவு கிடைக்காமல் பலமாத காலமாக இழுத்தடிக்கப்படுகின்ற சூழல் தொடர்கிறது. பிரதமர் அவர்கள் இந்த விடயத்தில் ஒரு உறுதியான முடிவிற்கு வரவேண்டும் என்பதற்காக வேண்டி நாங்கள் வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து இது விடயமாக ஒரு தெரிளவான நிலைப்பாட்டினை பிரதமரிடமிருந்து அறிவதற்காக விரைவாக சந்தித்து கேட்கவிருக்கின்றோம். இதன் பிறகு அவர் தரும் முடிவைப் பொறுத்துத் தான் அவர் மீதான நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளலாமென்பது எங்களுடைய கருத்தாகும்.

*உதாரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பை நீங்கள் அமைத்து ரணில் விக்கிரமசிங்காவிடம் நீங்கள் கேட்க இருக்கின்றீர்கள். வழமையான ஒரு நலுவல் போக்கினை அல்லது காலத்தை இழுத்தடிக்கும் அரசியலைச் செய்தால் உங்களுடைய அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும்?*

வெளிப்படையான விஷயம் என்னவென்றால் முஸ்லிம்களின் தனித்தரப்பு அந்தஸ்து என்பதனை பிரதமா வழங்குவதில் எந்தத் தடையும் இல்லை. இதில் முக்கிய தடையாக இருப்பவர்கள் விடுதலைப் புலிகள். கடந்த ஏப்பிரல் மாதத்தில் விடுதலைப் புலிகள் தரப்பு இந்த விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு வாக்குறுதி அளித்திருந்தது. அதனை ஒரு மாதத்திலேயே மீறி விடுதலைப் புலிகளின் அன்டன் பாலசிங்கம், "முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள முடியாது" என்று தமது நிலைப்பாட்டினைக் கூறிவிட்டார். இதன் சில காலங்களின் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குள் ஏற்பட்ட பிளவை தனக்கிருக்கும் வாதத்திறமையை தங்களுக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு, பிளவுபட்டு விட்டீர்கள். நீங்கள் ஒற்றுமைப்பட்டால் தான் உங்களுடன் பேசலாம். தனித் தரப்பு பற்றி ஆராயலாம் என்றும் சொல்லி விட்டார்.

இது உண்மையிலேயே சிங்களத் தலைமைத்துவங்கள் எவ்வாறு தமிழ்த் தலைமைகளை கடந்த காலத்தில் ஏமாற்றினார்களோ அதேபோன்று விடுதலைப் புலிகள் அதேவிதமான இராஜதந்திரத்தைப் பின்பற்றி முஸ்லிம்களுடைய விடயத்தை இன்று கைக்கொள்ள முற்பட்டிருப்பது சரியான நடவடிக்கை அல்ல. இது மேலும் மேலும் விடுதலைப் புலிகள் மீதும் சமாதானத்தின் மீதும் முஸ்லிம்கள் நம்பிக்கையீனத்தை வைக்கும் நடவடிக்கையாகும். விடுதலைப் புலிகளும் இதுவிடயத்தில் முக்கிய தீர்மானம் எடுக்கின்ற சக்தியாக இருக்கின்றது. இது விடயத்தில் அவர்களின் இறுதியான நிலைப்பாட்டை அறிவதற்கு நாங்கள் சந்திப்பதென்றும் முடிவு எடுத்திருக்கின்றோம். அது மட்டுமன்றி இதில் அனுசரணையாளர்களாக செயற்படும் நோர்வே, அமெரிக்கா போன்றவற்றினதும் முடிவுகளை அறிய வேண்டியுள்ளது. இந்த நான்கு தரப்புகளும் சமத்துவத் தரப்பை தரமறுக்கின்ற சந்தர்ப்பத்திலே அடுத்தக்கட்ட நடவடிக்கை எவ்வாறு அமையுமென்று கூறமுடியும். ஏனெனில் இது எனது தனிப்பட்ட முடிவாக எடுக்கப்படுகின்ற தீர்வல்ல. எங்களது பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு கூடியே இது பற்றிய தீர்மானங்களை நாங்கள் எடுக்க முடியும். அடுத்தடுத்து நடைபெறும் கூட்டங்களிலேயே இது பற்றித் தீர்மானிக்கவிருக்கின்றோம்.

முஸ்லிம் குரலில்
செய்தியாளராக விரும்புகிறீர்களா?
முஸ்லிம் குரலின் வளர்ச்சியில்
பங்குதாரராக பங்களிக்கத் தயாரா?
நீங்கள் செய்ய வேண்டியது.....
உங்கள் எழுத்தாற்றலை நிரூபிக்கும்
வகையில் உங்கள் பிரதேச செய்திகளை,
அரசியல் அவதானங்களை, தெளிவுடன்
எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் முழு விபரத்துடன்!

ஆதாரத்துடன் செய்திகள் எழுதப்படுவதோடு
நீதிமன்ற, பொலிஸ், அடக்குமுறை செயற்பாடுகளை
எதிர் கொள்வதற்கும் நெஞ்சுரத்துடன்
இருப்பதே சிறந்த தகுதி!

நமது பத்திரிகையின் பங்குதாரராக
விரும்புவர்கள் நமது பத்திரிகையின்
பிரதிகளை மக்கள் மத்தியில் விநியோகம்
செய்து நமது மக்களுக்கும் பத்திரிகைக்குமான
உறவினை பலப்படுத்த வேண்டும்.
சமூகப் பங்களிப்புக்கு தயாரானவர்கள்
முன்வரலாம், முன் மாதிரியாகவும் செயற்படலாம்!
அதிக ஆவலுடன் உள்ளோம்!

## தொடர் கதை

# யுத்தமும் அதன் இரண்டாம் பாகமும்

மனிதம் முற்றும் முழுதாய் நாகரீகம்
அடைந்து விட்டதாக ஐயம் திரிபுற
நம்பப்பட்ட காலகட்டம்.
இக்காலகட்டத்தில்தான் தலைவன்
துரோகியானதும் - எதிரி
ஸ்நேகிக்கப்பட்டதும்
இக்காலகட்டத்தில்தான்.

அரசியல் காய் நகர்வுகளினால்
மனிதம் சில சமயம் காயம்பட்டாலும்
பாரதூரமாய் எதுவும் ஆகிவிடவில்லை.
மனித உரிமை அமைப்புகள் ஆங்காங்கே
தோன்றியதைத் தவிர. அசுரர்கள் மலிந்து
மனிதத்தை நசுக்க முற்படும்
பொழுதுகளில் மனித உரிமை
அமைப்புகள், நசியும் மனிதத்தைக்
காக்கத்தவறும் பட்சத்தில் கடவுள்கள்
ஆயுதங்களுடன் அவதரிப்பர். அங்கும் -
இங்கும் மூக்கிலும் மூலையிலும் -
சந்திலும் பொந்திலும் - தூணிலும்
துரும்பிலும் - குடிசையிலும் கூரையிலும் -
எங்கும் ஆயுதம் தரித்த கடவுள்கள்
ஏகமாய் அவதரித்தனர்.
இக்காலகட்டத்தில்தான் சித்தாந்திகளின்
ஆசீர்வாதம் பெற்ற நான் நசியும்
மனிதத்தை மீட்க ஆயுதம் அணிந்து
அவதரித்தேன். அண்டம் கிடுகிடுங்க
ஆகாசம் நடுநடுங்க ஆயுத தாண்டவம்
ஆர்ப்பரித்தது. ஒன்றாகி பலவாகி நூறாகி
ஆயிரமாயிரமாகி அழிந்தொழிந்தனர்.
அரக்கர்கள்.... ஆயினும் மானுடம்
நசிவதை தடுத்திட முடியவில்லை.

ஆயுதம் மானுடத்தின் விரோதி - அது
ஒருபோதும் மானுடத்துக்கு மீட்சி
கொடுப்பதன்று. ஆயுதமும் மானுடமும்
முரண்பாடானவை. தொடர்பு நிலையற்
றவை. ஆயிரம் தாண்டிய உயிர்கள்
அழிந்த பிற்பாடு தெளிவுநிலை அடைகி
றது புத்தி. ஆயுதம் மானிடத்தை மீட்கும்
என்பது முட்டாள்தனம்.

"துப்பாக்கி முனையில்தான் சுபீட்சம்
பிறக்கும்" என்னும் அர்த்தத்தில் சித்தாந்
திகள் சொன்னார்களே. சித்தாந்திகள்
புத்திசாலிகள் அல்லவா. மேதாவிகளிடம்
தானே சித்தாந்தமே பிறக்கிறது.
என்னவோ துப்பாக்கி முனையில் உயிர்
பறிக்கும் ரவைகள்தான் பிறக்கும்



உயிர்களை கொல்வதைத்
தவிர வேறு என்ன தெரியும்
துப்பாக்கிக்கு?
மானுடம் மீட்க
துப்பாக்கி என்பது
எத்தனை பெரிய
முட்டாள்தனம்.
அப்படியாயின்
சித்தாந்திகள்
புத்தியற்ற வர்க
ளா?
அவர்கள்
எப்படியோ
போகட்டும்.
மானுடம்
மீட்க
ஆயுதம்
அணிந்த நான்
முட்டாளா புத்திசாலியா?
சித்தாந்தி என உணர்கின்ற நேரத்தில்
முட்டாளாகவும் - முட்டாள் என
உணர்கின்ற நேரத்தில் மனிதனாகவும்
தெளிவுறும் தத்துவார்த்தமா?

எது எப்படியோ முட்டாளாக
இருப்பதில் நிறையவும் சௌகரியம்
இருக்கிறது. கேள்விகள் ஒரு போதும்
இல்லை.

காத்தான்குடியைக் கொளுத்து - சரி
எல்லா சோனகனையும் துரத்து -
சரி

மக்காவுக்கு போறவனை ஒரேயடியாய்
மக்காவுக்கு அனுப்பு - சரி

தொழும் நேரம் வெட்டிக் கொல் -
சரி

எல்லா பதில்களும் திருப்தி
கொடுக்கும்.

நம் மொழி தமிழ். நாம் தமிழர்கள் -
ஆமாம்!

அவன் மொழி தமிழ். ஆனால்
சோனகன் - ஆமாம்!

நம்சாமி பிள்ளையார், அவன் சாமி
அல்லாஹ் - ஆமாம்!

சோனகன் காட்டிக்கொடுக்கிறான் -
ஆமாம்!

உண்மைதான் முட்டாளாக
இருப்பதில் நிறைய சௌகரியம்
இருக்கத்தான் செய்கிறது.

கொல் என்றால் கொல்லலாம்.
கொளுத்தென்றால் கொளுத்தலாம்.

ரம்பாவின் தொடைகளையும் மந்தாரா
வின் முலைகளையும் மணிக் கணக்காய்
விவாதிக் கலாம். ஐஸ்வரியாராய் முலைகள்
சிலிக்கோன்
ஜெல்லால் நிரப்பி
செதுக்கப்பட்டதா, இல்லையா என்பதை
அறிய வாராந்திரிகளை வாரம் தவறாமல்
படிக்கலாம்.

டில்லிக்கு அந்தப் பக்கம் பஞ்சாப்பு
அங்கே நான் பறிச்சன் றோசாப்பூ
துருவி வச்ச தேங்காய்ப் பூ
நெஞ்சில முளைக்கிது வாழைப்பூ
அக்கா பொண்ணு குஸ்பு
இரண்டுபேருமா பண்ணினம் தப்பு -
அவ
திங்கிறா இப்போ மாங்காயோட
உப்பு
ஜலக்கு ஜக்கா ஜலக்கு ஜக்கா
அடங் கொக்க மக்கா கொக்க
மக்கா.

பாடல்களைக் காது குளிரக் கேட்டு
ரசிக்கலாம். கோபம் வராமல் குமுதம்
குட்டிக் கதைகளைப் படிக்கலாம். அதிகம்
ஏன் மூன்றெழுத்து பூ நடிகையுடன்
இத்தனை காலமாய் சரசம் புரிந்த
நான்கெழுத்து சுந்தர இயக்குனர் பூ
நடிகையை கைகழுவிவிட்டு
மூன்றெழுத்து தொடையழகியான ரம்ப
நடிகையுடன் உல்லாச விடுதிகளில் கதை
(!) டிஸ்கஸ் செய்கிறார்! என்கிற தின
முரசின் கிசுகிசுக்களில் சம்பந்தப்பட்ட
நடிகைகளை கண்டு பிடிப்பதற்காய்
மண்டையைப் போட்டு உடைத்துக்
கொள்ளலாம்.

முட்டாளாக இருப்பதில் நிறையவும்
சௌகரியம் இருக்கத்தான் செய்கிறது.
சே....இப்போதெல்லாம் அநாவசியமென
பிறர்க்கு படுகின்ற
கேள்விகள் என்னுள்
எழுவதும் - அதைக்
கேட்பதுவும் பிறர்க்கு
பிழையெனப்படுகின்றதோ
என்னவோ. நான்
தனித்துவிடப்படுவது
போன்றும் - தப்பித்து
ஓடுவது போன்றும் -
இருள்சூழ்ந்த நிலத்தடியில்
அடைக்கப்படுவது
போன்றும் - என்
மூளையை நாய் நக்குவது
போன்றும் உண்டாகும்
உணர்வலைகளை கட்டுப்படுத்திட
முடியாது போகிறது. கொலைகள் அற்ற
ஒரு வாரம் சுகமாய் இருந்தது.
"ஆயுதத்தோட ஆளக்காணல்லயே.."
என்று கவலைப்பட்டு
தேடிக்கொண்டிருப்பானுகள். தேடட்டும்.

"குடல வெள்ளாமைக்கு
இல்லாட்டிக்கூட பரவாயில்ல எண்டு
போட்டு சக்க கட்டுறத்துக்கு எண்டு
கேட்ட ஒடனே மூட்ட மூட்டயா யூரியாவ
தூக்கித்தரல்லயா தம்பி நாங்க?
காத்தான்குடியில ஊடு பிள்ளயல்
இருந்தாலும் வயல் வாய்க்கால் எல்லாம்
ஆத்துக்கு இஞ்சால தானே... நாங்க
ஆரு மெனேய்? காசு கேட்டு நாங்க
எப்ப இல்ல எண்டு செல்லிரிக்கம்
செல்லுபாப்பம். அறுத்துப் போட்ட
வெள்ளாமைய ஏரக்கமில்லாம
கொளுத்திப் போட்டயே... வகித்துப்
புள்ளத்தாச்சிய உயிரோட போட்டு
பத்தவக்கிர மாதிரி எலவா நீ இந்த
சூட்டக் கொளுத்தினது. நீ இப்படி
செய்யலாமா?"

பிசிறு தட்டிய குரலில் அழுகின்ற
கண்களுடன் பேசும் சின்னலெவ்வ
காக்காவின் வெண்ணிற ஆடைகளில்
எல்லாம் திட்டுத்திட்டாய் சாம்பல்
அப்பியிருந்தது.

"எனக்கு இந்த விஷயம் தெரியாது
காக்கா. நான் ஒரு கிழமையா..." மனது
உறுத்த தயங்கித் தயங்கிச்
சொன்னேன்.

"நீ யாழ்ப்பாணத்தில் இருந்து எங்கட
இனனத்த தொரத்தி உட்டுத்தாய் அப்ப
நான் அவ்வளவா கவலப்படல தம்பி.
எண்பத்திநாலாம் ஆண்டு எங்கட
ஆடுமாடு எல்லாத்தையும்
பத்தாயிரத்துக்கு மேல பழுகாமப் பக்கம்
சாச்சித்துப் போய் ஒரு கிலோ
ஆட்டுறைச்சி ஒரு ரூபாக்கும் மாட்டுறச்சி
அம்பது சதத்துக்கும் நீ விக்கெக்க நாங்க
என்னமும் கதைச்சமா தம்பி. ஏன் நீ
இப்பிடி செஞ்சி போட்டாய்? விளைஞ்ச
வெள்ளாமய சாம்பலாக்கிப் போட்டாயே"

காக்கா கேட்கக் கேட்க மனது
பாரமாய்ப் போகிறது எனக்கு. கண்கள்
சிவந்தும் வீங்கியும் இருந்தது.
நெடுநேரமாய் அழுதிருப்பார் போலும்.
எனக்கும் கூட மனது பாரமானதால்
வெளிக்காட்டிக் கொள்ளாது அழுது
கொள்கிறேன். கருகி சாம்பலாகிப் போன
சூடுகளில் இருந்து புகை புகைந்து
கொண்டு இருந்தது. காற்று சுழன்றடிக்க
சாம்பலுடன் சேர்ந்து நெருப்புத்
துகழ்களும் மேலெழுந்து பறந்து போயின.
இந்தக் கொடுங்காரியத்துக்கும்
எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத ஆயுதங்களை ஈராக்கில் இருப்பதாக கதை விடுவதற்கு உலகமே செவி கொடுக்க வேண்டும், என்று மிரட்டும் அமெரிக்காவைக் கண்டு உலக நாடுகளின் அரசாங்கங்கள் வேண்டுமானால் பயப்படலாம், மக்கள் பயப்படவில்லை. வெள்ளை மாளிகைக்கு வெளியே "எண்ணெய்க்காக ஈராக்கைத் தாக்காதே" என்று விண்ணதிர முழங்கிய அமெரிக்க மக்களைப் போல உலகெங்கிலும் போர் எதிர்ப்பு போராட்டங்கள் தீவிரமாகத்தான் முன்னேறி வருகின்றன. வறிய மக்கள் மற்றும் ஜனநாயக ஆர்வலர்களின் சர்வதேச உணர்வுக்கு உற்சாகமளிக்கும் காலமிது. அமெரிக்கா, இங்கிலாந்தைச் சேர்ந்த 200 போராளிகள் ஈராக்கில் தங்கி மனிதக் கேடயங்களாக அரணமைப்போம் என்று உறுதி கொண்டிருக்கின்றனர். இத்தகையப் போராட்டங்களில் ஒன்றாய் "இன்டி மிடியா" எனும் இணையத்தளத்தைச் சேர்ந்த நண்பர்கள், ஈரேழு பதினாலு உலகத்தையும் தகர்க்கும் வண்ணம் அமெரிக்கா குவித்து வைத்திருக்கும் நாசகார ஆயுதங்களைப் பற்றி ஒரு வரைபடம் வெளியிட்டிருக்கின்றனர். அதில் 130க்கும் மேற்பட்ட தகவல்கள் உள்ளன. அதன் சுருக்கப்பட்ட வடிவத்தை இங்கே நன்றியுடன் வெளியிடுகிறோம்.

# யார் பயங்கரவாதி?

## குற்றுயிரும் கொலையுயிருமாயிருக்கும் ஈராக்கா? ஆயுதமே சொத்தாக - கொலை செய்வதே தொழிலாக வாழும் அமெரிக்காவா?



**1. புக்டெல் நிறுவனம்** சான் ஃபிரான்சிஸ்கோ

உலகிலேயே மிகப் பெரிய கட்டுமான நிறுவனம். அதன் ரேகை பதியாத இடம் இல்லை. அமெரிக்க என்டர்பிரைஸ் கழகம், ஹெரிடேஜ் நிதி நிறுவனம் போன்ற வலதுசாரி நிறுவனங்களின் மூலம் பிற்போக்குச் சிந்தனைகளைப் பரப்ப கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டுகிறது. அதன் தலைமையக அறைக்கும் அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகைக்கும் இடையே சென்றுவர ரசியக் கதவே உள்ளது. ஜியார்ஜ் ஷுல்ட்ஸ், காஸ்பர் வெயின்பெர்கர், பிலிப் அபீப், ரிச்சார்டு ஹெல்ம்ஸ், வில்லியம் கேஸே போன்ற உயர் அதிகாரிகளுடன் இந்த வழியாகக் கள்ள உறவு நடக்கிறது. மத்தியக் கிழக்கில் உள்ள எண்ணெய் வயல்கள், சிஐஏ ஒப்பந்தங்கள், இராணுவத் தளங்கள், தென் ஆப்பிரிக்க நாடுகளின் மின் அணுசக்தித் திட்டங்கள், அணுமையில் ஒப்பந்தமான அலாஸ்காவின் கிரீலி துறைமுகத்தில் அமெரிக்காவின் இராணுவத் தளம் (தாக்கவரும் ஏவுகணைகளை வழி மறிக்கக் கூடிய, சிலாஸ் எனப்படும் ரகசிய நிலவறைகளில் வைக்கப்படும், திருப்பித்தாக்கும் ஏவுகணைகள் இங்கே கட்டப்படுகின்றன) ஆகியவை இந்தக் கட்டுமானக் கம்பெனியின் 'சின்ன' வேலைகள்.

**2. லிவர்மூர் தேசியச் சோதனைச்சாலை** லிவர்மூர், மத்திய அமெரிக்கா

அணு ஆயுதங்களை அதன் தயாரிப்பு, கூடுதல் வளர்ச்சி, சோதனை என்று எல்லா நிலைகளிலும் ஆய்வு செய்யும் கூடம். அதிபயங்கரமான வெடி பொருட்களை வெடிக்கச் செய்யும் வெட்டவெளிப் பகுதி கதிரியக்கக் கருவிகள் மூலம் தனிமங்களைக் கூறு பிரிக்கும் ஆலைபோன்ற எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்ற நிறுவனம்.

**3. ஹூவர் கழகம் - 'போர்', 'புரட்சி' 'உலகச் சமாதானம்'** பாலோ ஆல்டோ

ஸ்டேன்போர்டு வளாகத்தில் பாதுகாப்போடு அமைக்கப்பட்டுள்ளது. ரீகன் போர் வெறியாட்ட காலத்தில் அரசுச் செயலாளரான ஜார்ஜ் ஷுல்ட்ஸ் மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான காண்டோலீசா ரைஸ் போன்றோரின் 'தாயகம்', மரபணு மாற்றம் செய்து உருவாக்கப்படும் உயிரிகளை உற்பத்தி செய்யும் முக்கிய இடம் - இந்த நூற்றாண்டில் உலக உணவு உற்பத்தியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் அமெரிக்காவின் ஆதிக்கத் திட்டத்தின் கீழ் வருகிறது.

**4. டக்வே சோதனைக் களம்**

ரசியாவின் மீது தாக்குதல் கிருமிப் போர் நடத்துவதற்காக முன்பு ஆயிரம் வெட்ட வெளிச் சோதனைக் களங்கள் இங்கே அமைக்கப்பட்டிருந்தன. புதிய வகை நோய்கள் பரப்பவும், ஏற்கெனவே உள்ள நோய் வகைகளில் பல ரகங்களைக் கூட்டவும், மூளைச்சுரம், மலைப் பகுதிகளில் புள்ளிச் சுரம், கிளி போன்ற பறவை இனங்களின் மூலம் மனிதர்களுக்குப் பரவும் நிமோனியா போன்ற தொற்றுக் கிருமி நோய்கள், கியூ சுரம், கால்நடைகள் மூலம் தொற்றவைக்கும் ஆந்திராக்ஸ், புருசெல்லோசிஸ், பிளேக், தோல் புண், சுரம் எடைகுறைதல் போன்று நோய்க் கூறுடன் கால்நடைகளைத் தொற்றி அதன் மூலம் மனிதர்களுக்கு ஏற்பட வைக்கும் தொற்றுமுறை, கொக்கி நாடாப்புழுத் தொற்று - ஆகிய பலவித நோய்களைப் பரப்பவும் இங்கே ஆய்வு செய்யப்படுகின்றன. ஆந்திராக்சையே ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தும் அளவு அதன் பலப்பல ரகங்களை உற்பத்தி செய்யும் சோதனையைத் தற்போது நடத்துகிறது இந்தக் களம்.

**5. யுக்கா மலைத்திட்டம்** லாஸ்வேகாஸ்

உயர் வகையிலான பாளமாக மாற்றப்பட்ட கதிரியக்கக் கழிவையும், 2,500 டொன் எடையுள்ள அணு எரிபொருள் கழிவையும் "பாதுகாப்பாக" நிலவறைகளில் சேமித்து வைக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. யுக்கா மலை உள்ள பகுதியில் எந்நேரமும் நிலநடுக்கம் ஏற்படும் அபாயம் உண்டு. அப்படி ஏற்பட்டால் கதிரியக்கம் (புளூட்டோனியம்) கசிந்து வளி மண்டலம் மாசுபடும்; அடிநில நீர்மட்டம் நஞ்சாகி விடும்.

**6. ரேதியான் ஏவுகணைத் தொகுப்பு ஆய்வுக் கூடம்** டஸ்கான்

வளிமண்டலத்துக்கு வெளியே மணிக்கு 16,000 மைல்கள் தாவிச் சென்று பின் எதிரியின் ஏவுகணையைக் குறிவைத்துத் தாக்கி அழித்துவிடும் வல்லமை கொண்ட கொலை ஊர்தி இங்கே வடிவமைக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஊர்திக்கும் 25 மில்லியன் பவுண்டு செலவாகும். உலகிலேயே மிகமிக விலையுயர்ந்த ஆயுதத் தளவாடம் இதுவே. "நட்சத்திர மண்டலப் போருக்காக உருவாக்கப்பட்ட இந்தக் கொலைக் கருவியை அமெரிக்க இராணுவ வலிமையின் மகுடத்தில் பதித்த ரத்தினம் என்று பீற்றிக் கொள்கிறார்கள்.

**7. ஏ.ஜி.பையோ** போசோமான்

கொலம்பியாவின் காடுகளில் ஏழை விவசாயிகள் மற்றும் இடதுசாரி கொரில்லாக்கள் வாழ்கின்ற பகுதி களில் புல், பூண்டு, பச்சைகளை முற்றிலும் அழித்துப் பாலைவனமாக்கக் கூடிய தெளிப்பு ரசாயனக் கலவை ஒன்றை வீசுவதற்காக இங்கே தயாரிக்கிறார்கள். பயிர்களின், புல் வகைகளின் பாரம்பரியக் குணங்களை மாற்றிவிடக் கூடிய ரசாயனத்தை அடிப்படையாக வைத்து அக்கலவை உண்டாக்கப் படுகிறது.

**8. கூர்ஸ் குடும்பம்** கோல்டர் சி.ஓ

1973 இல் ஹெரிடேஜ் நிறுவனம் தொடங்குவதற்குத் தேவையான மூலதனம் 2,50,000 டாலர்களை இக்குடும்பம் அளித்தது. நிகராகுவாவில் ரீகன் நிர்வாகத்தால் மறைமுகமாக நடத்தப்பட்ட போருக்குத் தேவையான நிதித் தேவைகளையும் கூர்ஸ் குடும்பம் கவனித்துக் கொண்டது. அப் போரில் 30,000 நிகராகுவா மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

**9. அல்லயன்ட் டெக்சிஸ்டம்ஸ்** அல்லயன்ட் டெக்சிஸ்டம்ஸ் (ஹாப்கின்ஸ்)

1991 இல் வளைகுடாப் போரின் போது ஏராளமான யுரேனியம் வீசப்பட்டதால் பாதிக்கப்பட்டு தெற்கு ஈராக்கில் பிறந்த குழந்தைகள் அரைகுறை முண்டங்களாகப் பிறந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு கண் உள்ள, வாயில்லாமல், முண்டமாக, பிண்டமாக, கைகள் இல்லாமல், பிறப்புறுப்புகள் சிதைந்ததாக இப்படிக் கொடூரமான பாதிப்புக்களோடு ரத்தக் களறிகளாகப் பிறந்த குழந்தைகளின் நிழற்படங்களைப் பார்த்துப் பதறியிருப்பீர்கள். ஏன் இப்படி நடந்தது? போரில் பயன்படுத்தப்பட்ட குண்டுகள் மற்றும் அவற்றை வீசிய படைக் கலங்களில் செறிவு தளர்த்தப்பட்ட யுரேனியம் பயன்படுத்தப்பட்டது. அல்லயன்ட் கம்பெனி அந்தப் போருக்காக அமெரிக்க விமானப் படைக்குத் தயாரித்துக் கொடுத்த அப்படிப் பட்ட 30 மி.மீ அளவு கொண்ட ஒன்றரைக் கோடி பி.ஜி.யூ 14 வகைக் குண்டுகளும், எம் - 829 வகை வேட்டுகள் 10 இலட்சம் சுற்றுக்களும் தான் பிறப்பிலேயே குழந்தைகள் சாவதற்குக் காரணம்; அடுத்த தலைமுறைகளும் அழியட்டும் என்று தெரிந்தே செய்கின்ற அமெரிக்கப் போர்வெறிதான் காரணம்.

**10. உயிர்மரபு மருத்துவ ஆய்வுக்கான தென்மேற்கு நிதியம்** சாம் அன்டோனியோ

அமெரிக்காவில் இப்படிப்பட்ட 7 சோதனைச் சாலைகள் உள்ளன. இங்கு தயாரிக்கப்படும் அதிபயங்கரமான 'இயக்கி' - மனிதர்கள் மீது தாக்கினால் உண்டாகும் கொடூரமான நோய்களுக்கு நிவாரணமும் இல்லை, மருத்துவமும் இல்லை. இதற்கு "உயிர்மரபியல் தற்காப்புப் போர்" என்று பெயர் சூட்டியுள்ளார்கள். அமெரிக்காவுக்குப் பாதுகாப்பு; உலகநாடுகளின் மக்களுக்கோ உயிர்க் கொல்லி. 2002 அமெரிக்க 'பட்ஜெட்' இதற்காகவே 600 கோடி டொலர் நிதியை ஒதுக்கியுள்ளது.

**11. கேட்டர்பில்லர்** பெயோரியா

இஸ்ரேலில் பயன்படுத் தும் டி-9 ரக பலத்த கவசம் பூண்ட கேட்டர் பில்லர் நிலச் சமன் கருவி. பாலஸ்தீனத்தில் அத்துமீறிக் கையகப்படுத்திய இடங்களில் வீடுகளை இடித்துத் தரை மட்டமாக்கவும், உயிரோடு மக்களைப் புதைக்கவும், நகர்ப்புற கட்டுமானங்களை உருத்தெரியாமல் அடித்து நொறுக்கவும் இஸ்ரேல் பயன்படுத்தி வருகிறது. 2002 ஏப்ரல் மாதம் ஜெனின் என்ற பிராந்தியத்தில் இந்த அமெரிக்கக் கருவிகளை ஏவி நகரத்தை அடித்துத் தரைமட்டமாக்கியது. 4000 பாலஸ்தீனியர்கள் வீடிழந்தனர். மற்றவர்கள் நிலத்தின் கீழே உயிரோடு புதைக்கப்பட்டார்கள். சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்புக் குழு இதனை "போர்க்காலக் கிரிமினல் குற்றம்" என்று கூறி இஸ்ரேலைக் குற்றம் சாட்டியது.

**12. மான்சாண்டோ**

மான்சாண்டோ கம்பெனிக்கு ஒரு பெரிய கிரிமினல் வரலாறே உண்டு. பயிர்ப் பச்சைகளை அழித்து விடும் ஏஜெண்ட் ஓரஞ்சை உற்பத்தி செய்த கம்பெனியே மான்சாண்டோ. வியட்நாம் போரின் போது மக்களை அழிக்க அந்த விஷப் பொடியைத் தூவி பல லட்சம் பேரை அமெரிக்கப் படைகொன்றது. இப்போது சொலம்பியப் போராளிகளை விஷப் போதை கொடுத்து அழிக்க 'மருந்து' தயாரித்து வருகிறது. இதன் பெயர் ரவுண்ட் அப் அல்ட்ரா. இது பயிர்களை அழிக்கக் கூடிய விஷப்பொருள். கோக்கோ பயிரை மட்டுமல்லாமல், எல்லாப் பயிர் பச்சைகளையும் விலங்குகளையும் ஒரே அடியில் அழிக்கக் கூடியது.

**13. ஜெனரல் வெஸ்லி கிளார்க்**, லிட்டில் ராக்

யுகோஸ்லாவியப் போரில் செய்த குற்றங்களுக்காக, (ஆற்றல் குறைந்த யுரேனியத்தைப் பயன்படுத்தியது, கொத்துக் கொத்தான குண்டுகளை மக்கள் மீது வீசியது. ராணுவமல்லாத வீடுகள் - கட்டிடங்களைத் தகர்த்து அழித்தது. பல ஆயிரக்கணக்கான மக்களைத் தாக்கிக் காயப்படுத்தியது, கொன்றது) தேடப்படும் இவன் அமெரிக்காவில் பாதுகாக்கப்படுகின்றான்.

வெஸ்லி கிளார்க் போல உலகெங்கிலும் அமெரிக்கா நடத்திய போர்களுக்குத் திட்டம் தீட்டிக் கொடுத்த மற்றும் போர்களில் ஈடுபட்ட, ஹார்வார்டு பேராசிரியர் சாமுவேல் ஹன்டிங்டன், ஜெனரல ஹெக்டார், ஜெனரல் சின்டாங் பஞ்சைதான் போன்ற பல இராணுவ அதிகாரிகளின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட பிறகும், அமெரிக்கா அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து உயர் பதவிகள் கொடுத்துக் கவுரவித்திருக்கிறது. கிரிமினல்கள் பாதுகாவலனே அமெரிக்க அரசு.

**14. ஜனாதிபதி ஜார்ஜ் எச்.டபிள்யூ. புஷ்** கென்னிபங்க் துறைமுகம்

கிரிமினல் ஜனாதிபதி வாழும் பகுதி. பனிரெண்டு ஆண்டுகளுக்கு மேல் தொடரும் ஈராக் போரைத் தொடங்கி வைத்தவன் - அப்போரில் 10 இலட்சம் ஈராக்கியர்கள் கொல்லப்பட்டார்கள்; 1989 பனாமா மக்கள் பல ஆயிரம் கொல்லப் பட்டதற்கும் இவனே காரணம்; 1970 ஆம் ஆண்டுகளில் சி.ஐ.ஏ. தலைவனாகவும் இருந்து சதி, நாசவேலைகளில் ஈடுபட்டவனும் இந்த முதல் குடிமகன் தான்.

**15. வெள்ளை மாளிகையின் போர்க் கிரிமினல்கள்** எலியட் அப்ராம்ஸ்

மத்திய அமெரிக்காவின் என்பதாம் ஆண்டுகளில் எதிர்புரட்சி கான்ட்ராஸ்களுக்கு நிதி உதவி செய்தவன்; ஈரான் - கான்ட்ராஸ் விவகாரத்தில் அவனது கிரிமினல் நடவடிக்கைகளுக்காகச் சிறைப்பட்டவன். ஆனால் பிறகு தேசியப் பாதுகாப்புக் கழகத்தின் மூத்த ஆலோசகனாக் கப்பட்டான்.

காலின் பாவல் : பனாமா, ஈராக் மீதான தாக்குதலில் பிரதான பாத்திரம் வகித்தவன். வியட்நாம் போரில் மைலாய் என்ற இடத்தில் பெண்கள், குழந்தைகள்..... முதியவர்கள், நோயாளிகள் என்று அப்பாவி களான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். ஈவிரக்கமற்ற இப்படுகொலையை மூடி மறைத்தவன் இவன். இதற்குப் பரிசாக ஜனாதிபதிக்குச் சமமான செல்வாக்கை, அரசுச் செயலராக இருந்து இன்று அனுபவிக்கிறான்.

டொனால்டு ரம்ஸ்பீல்டு : 1983 இல் ஈரானுக்கு எதிராக ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்த ஈராக்கைத் தூண்டியவன்; நவம்பர் 2001 இல் ஆப்கானிஸ்தானில் நிராயுதபாணிகளான தலிபான் கைதிகள் மீது குண்டுமழை பொழிந்து பல நூற்றுக் கணக்கானவரைக் கொலை செய்தவன்.

**16. இரசாயன ஆயுதங்களைக் குப்பையாய்க் கொட்டுவது**

நியூயோர்க்

கடற்கரை ஓரமாக 150 மைல் தொலைவில் அட்லாண்டிக் கடலில் மொத்தம் 51,180 (நரம்புகளை இழுக்க வைக்கும்) விஷவாயு ராக்கெட்டுக்கள் கொட்டப்பட்டு வருகின்றன. அமெரிக்க தளவாடங்கள் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் ஆய்வின்படி, மொத்தம் ஒரு லட்சம் டன் ரசாயன ஆயுதங்கள் உலகெங்கும் உள்ள கடல் பகுதிகளுக்குள் 60 இலட்சங்களில் கொட்டப்பட்டு வருகின்றன. மெக்சிகோ வளைகுடா, நியூஜெர்ஸி கடற்கரை, கலிபோர்னியா, தெற்கு கரோலினா, இந்தியா அருகே இத்தாலி, நார்வே, டென்மார்க், ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் உள்ள கடல் பகுதிகளே அவை. தரைவழி மட்டுமல்ல, கடல் வழிக்குள்ளேயும் நஞ்சினை நிரப்பி விட்டது அமெரிக்கா.

**17. சர்வதேச பொலிஸ் அகாதமி** வாஷிங்டன் :

"சித்திரவதைக்காரர்களின் பள்ளி" என்று அழைப்பார்கள்; சிஐஏ நடத்துகிறது; வேவு, ஊடுருவி அழிப்பு - கலகம் செய்வது, வஞ்சகக் கொலைகளை நடத்துவது, சித்திரவதைகள் - ஆகிய 'பல கலைகளை' அயல்நாட்டுப் பொலிசுக்குச் சொல்லித் தரும் பள்ளி. பலத்த எதிர்ப்பு கிளம்பியதால் 1975 இல் அதிகார பூர்வமாக மூடப்பட்டாலும், வேறு பெயர் களில் செயல்பட்டு வருகிறது. ஆண்டுக்கு 50 கோடி டொலர் பணம் இதற்காகவே ஒதுக்கப்படுகிறது.

---

**சமாதான பேச்சுவார்த்தையில் ...**

வலியுறுத்தி, அதற்கான அரசியல் உத்தரவாதத்தைப் பெறுவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினையை மையப்படுத்தி வடக்கு, கிழக்குக்கு வெளியேயான அமைச்சர் ரவூஃப் ஹக்கீமையும், பாராளுமன்ற உறுப்பினர் ஹப்ரத்தையும் உள்ளடக்கியே பிரதமரைச் சந்திப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டமைப்பு உருவாக்கத்தில் வடக்கு, கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் அவர்களின் தனிப்பட்ட நலன்களைக் கருத்திற் கொண்டு இணைந்து கொள்ளவில்லை. உடன்பட்ட பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டே இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூஃப் ஹக்கீம் அவர்களே பிரதம மந்திரியுடனான வடக்கு, கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பின் சந்திப்புக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பிரதம மந்திரியிடம் நேரம் எடுத்திருந்தார். இதனை ரவூஃப் ஹக்கீம், நூர்தீன் மஷூர் ஆகியோரின் பத்திரிகை அறிக்கைகளும் ஊர்ஜிதப்படுத்தியிருந்தன.

திடீரென இச்சந்திப்பு ஒத்திப்போடப்பட்டதுடன் தனித்தரப்பு கோரிக்கையை வலியுறுத்தும் வடக்கு, கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு, சமாதான பேச்சுவார்த்தையில் "முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வதற்கு இதுவரை அரசாங்கம் எந்தவிதமான தீர்மானத்தையும் எடுக்கவில்லை" என டெய்லி நியூஸ் பத்திரிகைக்கு பிரதம மந்திரியின் அரசியல் வட்டாரம் மறுப்புச் செய்தியொன்றையும் அனுப்பி வைத்துள்ளது. இச்செய்தியை அதிமுக்கியத்துவத்துடன் மறுத்தும், திடீரென சந்திப்பு எதுவித முன்னறிவித்தலுமின்றி ரத்துச் செய்யப்பட்டதும் நமது அரசியல் அரங்கில் பலத்த சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது.

---

உங்கள் கருத்துகள், படைப்புகள் அனைத்தையும் உடனுக்குடன் எமக்கு அனுப்பி வையுங்கள்; நமது மக்களின் அவலங்கள், தீர்க்கப்படாத பிரச்சினைகள், அரசியல்வாதிகளின் பொடுபோக்குத்தனம், அதிகாரிகளின் அசமந்தம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆதாரங்களுடன் எழுதப்படல் வேண்டும் - நியாயம் கிடைப்பதற்காக வேண்டி தொடர்ந்தும் உரியவர்களுடன் நமது பத்திரிகை ஊடாக பேசிக் கொண்டிருப்போம்.

முஸ்லிம் குரலில் வெளிவரும் கருத்துக்களுக்கு மாற்றுக் குரல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. நமக்காக எழுதுவோம்! நமக்குள் உரையாடுவோம். விவாதிப்போம்! என்பதே நமது பத்திரிகையின் இலக்கு.

---

# மாணவ குரல்

## கிருமிகள் என்றால் என்ன?

மிக நுண்ணிய உயிர்களையே கிருமி என்று அழைக்கிறோம். உதாரணத்திற்கு பெக்டீரியா அல்லது வைரஸ் போன்றவையாகும். இது நம்மைச் சுற்றி இருக்கின்றது. காற்றில் இருக்கின்றது. உங்களுடைய தோலில் இருக்கின்றது.

நீங்கள் சாப்பிடும் உணவிலும் இருக்கின்றது. பெரும்பாலான இந்தக் கிருமிகள் நம்மை ஒன்றும் செய்யாது. ஆனால், சிலவகையான கிருமிகள் மட்டுமே நமக்கு நோயை ஏற் படுத்தும். தடுமல், சளி, காய்ச்சல், வயிற்றுக் கோளாறு போன்றவற்றை ஏற்படுத்தும் கிருமிகள் உங்கள் மூக்கின் வழியும் அல்லது வாயின் வழி யும் அல்லது உங்கள் உட லில் ஏற்பட்டிருக் கும் காயத் தின் வழியும் உங்கள் உடலி னுள் புகும்.

## ஏதனால் வயிற்றுக் கோளாறு ஏற்படுகிறது?

சில நேரங்களில் கிருமிகள் உங்கள் வயி ற்றினுள் சென்று விடுகின்றது. இதனால் உங்கள் வயிறு அதன் கடமையைச் செய்ய மறுக்கின்றது. இந்த கிருமிகள் கெட்டுப் போன உணவின் வழி அல்லது உங்கள் கைகளில் உள்ள அசுத்தத்தின் வழி உங் கள் வயிற்றினுள் சென்றிருக்கலாம். இந்நி லையில் உங்கள் வயிறு, உணவு வந்த வழி யின் மூலமாக உணவை மீண்டும் அனுப்பு கிறது. இதுதான் வாந்தியாக வெளியாகும். உடலினுள் சென்ற இந்த கிருமிகள் உங் கள் உடலை விட்டு வெளியேறிவிட்டால், உங்களுக்கு உடல் குணமாகி விடும்.

## வர்ணம் தீட்டுங்கள்

போட்டி இல 02

மாணவ, மாணவிகளே! கீழே உள்ள படத்திற்கு பொருத்தமான வர்ணங்களால் அழகுபடுத்தி எங்களுக்கு அனுப்பி வையுங்கள். 12 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களே இந்த வர்ணம் தீட்டும் போட்டியில் கலந்து கொள்ள முடியும். கீழ் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 05.03.2003ம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரின் உறுதியுடன் பாடசாலை இலச்சினையும் பொறிக்கப்படல் வேண்டும். சிறப்பாக வர்ணம் தீட்டியவருக்கு சிறுவர் நூல்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.



பெயர்: ----------------------------------

வயது:. ----------------------------------

வகுப்பு: ----------------------------------

பாடசாலை முகவரி: ----------------------

----------------------------------

அதிபர் / ஆசிரியர் கையொப்பம்:

----------------------------------

பாடசாலை முத்திரை:

----------------------------------

## முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத்தின் ஏறாவூர் கிளை அங்கத்தவர்கள் ஒன்றுகூடல்

சென்ற 16-02-2003 அன்று முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத்தின் ஏறாவூர் அங்கத்தவர்களுக்கான ஒன்றுகூடல் ஏறாவூர்கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. இதனை அல் ஹாபிழ் எம்.ஐ.எம்.நியாஸ் அவர்கள் கிராஅத் ஓதி ஆரம்பித்து வைத்தார். ஹாபிஸ் எம்.ஐ.எம்.முர்ஸலீன் அஸ்ஹரி (BA) அவர்களின் தலைமையின் கீழ் இந்நிகழ்வு நடைபெற்றது.




கலந்து கொண்டவர்களை வரவேற்கும் முகமாக இலங்கை இஸ்லாமிய எழுச்சி முன்னணியின் தலைவர் அல்ஹாபிழ் ஏ.ஆர்.எம். றிஸ்வான் (ஷர்கி) அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத்தின் ஆரம்ப கால அங்கத்தவரும் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளருமான யு.எல்.எம்.முஹைதீன் பாவா அவர்களும், ஓய்வு பெற்ற ஆசிரியர் என்.எல்.எம். அஜ்வத் BA அவர்களும், மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளரும், முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத்தின் ஊடகவியலாளரும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதியுமான ஏ.எச்.ஏ.ஹுஸைன் அவர்களும், தலைமையகத்தில் இருந்து விசேடமாக வருகை தந்த முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத்தின் மகளிர் குழு தலைவியுமான பாத்திமா மஹ்தியா அவர்களும், எம்.எஸ்.ஹலீம் அவர்களும், இலங்கை இஸ்லாமிய எழுச்சி முன்னணியின் உறுப்பினர் எஸ்.எல்.ஏ.ஜுனைட் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் ஆய்வு நிலைய அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், உலமாக்கள் உட்பட இன்னும் பல அமைப்புக்கள், சங்கங்கள், கழகங்களின் தலைவர்களும் பிரதிநிதிகளும் மற்றும் பலரும் கலந்து கொண்டு இந்நிகழ்வைச் சிறப்பித்தனர்.

இவ்வொன்று கூடல் நிகழ்வை முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத்தின் ஏறாவூர் கிளை உதவிப் பணிப்பாளர் ஜே.இஸ்ஹாக் தொகுத்து வழங்கினார். ஏற்றில் துறைமுக அதிகார சபை முஸ்லிம் மஜ்லிஸின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.எச்.ஏ. மஜீத் அவர்கள் நன்றியுரையாற்றினார். அதனைத் தொடர்ந்து இவ்வொன்று கூடல் சலவாத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

ஹாபிஸ்.எம்.ஐ.எம். முர்ஸலீன் - முஸ்லிம் சமூக ஆய்வு நிலையம், ஏறாவூர்கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## அரசுக்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்த முஸ்லிம் எம்.பி. க்கள் பதில் சொல்ல வேண்டும்!

வாழைச்சேனையில் கடந்த ஜுன் 26,27,28ம் திகதிகளில் முஸ்லிம்களின் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட இன வன்முறையை அடுத்து, அரசாங்கம் முஸ்லிம்களை பாதுகாக்க தவறிவிட்டது என்ற உண்மையை மெய்ப்படுத்தும் வகையில் அப்பிரதேச மக்களுடன் நமது பத்திரிகையின் விசேட செய்தியாளர் உரையாடிய மக்கள் கருத்துக்களின் தொகுப்பு.

மௌலவி. எஸ்.எச். அறபாத். ஓட்டமாவடி

முஸ்லிம் எம்.பி.க்களைப் பொறுத்தவரை திலக்மாரப்பன மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது அவர்கள் காட்டிய நழுவல் தன்மை மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய



தாகும். அதுவும் வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக்கள், வாழைச்சேனை முஸ்லிம்களின் விடயத்தில் இப்படி நடந்தது துரோகத்தனமாகும்.

குறிப்பாக வாழைச்சேனையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அநீயாயத்தை நேரடியாக வந்து பார்த்த முஸ்லிம் எம்.பி.க்கள் பலர் இருக்கிறார்கள்.

வாழைச்சேனை முஸ்லிம்களை ஜுன் 26,27,28, இல் அரசாங்கமும் அதன் பாதுகாப்பு அமைச்சரும் பாதுகாக்கத் தவறி விட்டார்கள் என்ற எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நமது முஸ்லிம் எம்.பிக்கள் நிச்சயமாக ஆதரித்தே இருக்க வேண்டும். அந்த விடயத்தில் அரசாங்கம் முஸ்லிம்களை பாதுகாக்கத் தவறிவிட்டது. இந்த விடயத்தில் நமது முஸ்லிம் எம்.பி.க்கள் ஏன் இதனை எதிர்த்தார்கள் என்பது ஒரு கேள்விக்குரிய விடயமாக உள்ளது. முஸ்லிம்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆங்காங்கு நடைபெற்ற அநீதிகளை, உலகுக்கு எடுத்துக்காட்ட இதுவொரு நல்ல சந்தர்ப்பமாக இருந்தது. இரண்டு முஸ்லிம்களின் ஜனாசாக்களை புலிகள் பறித்தெடுத்து கண் முன்னே சுட்டெரித்த போதும் பாதுகாப்பு படையினர் கண் மூடி, வாய்பொத்தி இருந்தனர் என்பது நமது முஸ்லிம் எம்.பி.க்களுக்கு தெரியாத விடயமல்ல.

அரசுக்கு வாக்களித்த மக்கள் என்ற வகையிலும், அரசாங்கத்திற்கு வரிகொடுத்து வாழ்பவர்கள் என்ற வகையிலும் இலங்கை பிரஜைகள் என்ற வகையிலும் இலங்கையின் பாதுகாப்புப் படையினர் நமது முஸ்லிம்களை பாதுகாக்க வேண்டியது அவர்களின் பொறுப்பாகும். அதனைக் கூட இலங்கை பாதுகாப்புப் படையினர் செய்யவில்லை. ஆகவே, இப்படியான சந்தர்ப்பத்தில், இப்படியானவொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் போது கண்டிப்பாக முஸ்லிம் எம்.பி.க்கள் எல்லோருமே முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக அணி திரண்டு இருக்க வேண்டும். இவர்கள் அணி திரளாமல் விட்டது அவர்களின் கோழைத்தனத்தையும் தொடர்ந்து அரசுக்கு கண்மூடித்தனமாக - ஆதரவாக முண்டு கொடுத்துக் கொண்டு முஸ்லிம் சமூகத்தை விலைபேசி அவர்களின் வாழ்வுடன் விளையாடும் சூழல்தான் இன்னும் இருக்கிறது என்பதை இச்சம்பவம் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

கலீல் ரஹ்மான் (அதிபர்)
ஹிதாயா மகாவித்தியாலயம், மீராவோடை.

முஸ்லிம்களின் நலனில் எவ்வித அக்கறையையும் கொள்ளாது தமது கட்சி நலன், தமது பதவி நலன் என்ற அடிப்படையில் இருந்துதான் இப்பிரேரணையை எதிர்த்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர் எனக் குறிப்பிட வேண்டும். ஏனெனில் மிக மோசமாக முஸ்லிம்களைப் பாதித்த விடயத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்தது அவர்களின் பதவி இருப்பை பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கையன்றி வேறில்லை என்றே நான் கருதுகின்றேன்.

வாழைச்சேனையில் நடைபெற்ற முஸ்லிம்கள் மீதான மூர்க்கத்தனமான தாக்குதல்களை பொலிஸ் நினைத்திருந்தால், தடுத்திருக்க முடியும். அதனை அவர்கள் வேண்டுமென்றே தவறவிட்டனர் என்பது பகிரங்கமானது. இந்த வன்செயலில் 13 முஸ்லிம்களின் உயிர்களை போக்கும் நிலையினை அரசும், பொலிஸும் நினைத்திருந்தால் தடுத்திருக்க முடியும். இதில் அதிகமான தவறுகளை விட்டது அரசும் பாதுகாப்புப் படையும் தான் என்பது உண்மையானது. பதவியின் முன்னால் சமூகம் ஒரு பொருட்டல்ல என்பதையும் இது சுட்டிக் காட்டுகின்றது.

எம்.எம்.சமிம், அரசியல் விஞ்ஞான விசேடதுறை, பேராதனைய பல்கலைக்கழகம்

இரண்டு தசாப்தங்களாக நடைபெற்று வரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக நோர்வையின், மத்தியஸ்தத்துடன் புலிகளும், அரசும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் (M.O.U) கைச்சாத்திட்டிருக்கின்ற நிலையிலும், பிரபா - ஹக்கீம் கூட்டறிக்கை நடைமுறையில் இருந்த போதிலும் வட-கிழக்கு முஸ்லிம்கள் மீதான அடக்குமுறை கப்பம் கோரல், கொலை, அச்சுறுத்தல் என்பன குறைந்தபாடாக தெரியவில்லை. இது வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும், அரசு மீதான அதிருப்தியையும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் மீதான நம்பிக்கையையும் இழக்கச் செய்துள்ளது.

இவ்வாறான நிலையில்தான் ஜுன் மாத இறுதிப் பகுதியில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளியுலகுக்கு தெரிவிக்கும் முகமாக ஹர்த்தாலை அனுஷ்டித்தனர். இதனை பொறுக்க முடியாத தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுக்கு உள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிராகவும், ஜனநாயக பாரம்பரியங்களுக்கு விரோதமாகவும் தங்களது நாசக் கரங்களைக் கொண்டு அதனை அடக்க முற்பட்டதன் விளைவாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை முஸ்லிம்கள் 13 பேர் கொல்லப்பட்டு சிலர் எரியும் நெருப்பில் அரச படைகளுக்கு முன்னாலேயே வீசப்பட்டும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கோடிக்கணக்கான சொத்துக்களும் சேதமாக்கப்பட்டு சூறையாடப்பட்டன.



மேற்படி பிரச்சினையில் முஸ்லிம்களின் பாதுகாப்பையும், இருப்பையும் உறுதிப்படுத்த அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதற்காக பொ.ஐ.மு., தே.ஐ.மு., மக்கள் விடுதலை முன்னணி என்பன இணைந்து பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தன. பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் முஸ்லிம்களின் பாதுகாப்பு, இருப்பு சம்பந்தப்பட்டது என்பதால் கட்சி அரசியலுக்கு அப்பால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 26 பேரும் ஆதரித்தே வாக்களிக்க வேண்டும் என்ற திடமான விருப்பம் வடகிழக்கு முஸ்லிம்களின் மத்தியில் இருந்தது. ஆனால், இலங்கையில் வழமையாக எவ்வாறு ஒரு அமைச்சுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகின்ற போது அரசும், அரசு சார்பானவர்களும் அரசிற்கு ஆதரவாகவும் எதிர்தரப்பினர் அவற்றை எதிர்த்தும் வாக்களிப்பார்களோ அதே நிலையையும் இந்த விடயத்தில் நாம் கண்டோம். முஸ்லிம் அரசியல் தலைமைகள் மீதான தீவிர மறுபரிசீலனையை இது எடுத்துக் காட்டியிருக்கின்றது. மேலும் முஸ்லிம் காங்கிரஸின் இரு அணிகளும் தமக்குண்டான பெறுப்பிலிருந்தும் விலகி தமது சுயரூபத்தை மீண்டுமொரு முறை இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு காட்டியிருக்கின்றது.

யு.அஹமட் (I.A.S) வாழைச்சேனை

பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை நமது பாராளுமன்றத்திலிருக்கின்ற



அனைத்து முஸ்லிம் உறுப்பினர்களும் ஒருமித்து நின்று ஆதரித்து இருக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும். ஏனெனில், சமாதான ஒப்பந்தம் என்பது அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் காணப்பட்ட ஒன்றாகும். யுத்த நிறுத்த உடன்படிக்கை எனச் சொல்லி முஸ்லிம்களின் சகல உரிமைகளையும் மறுக்கப்படுகின்ற ஒரு ஒப்பந்தமாகவே இதனைக் கருத வேண்டியதாகவும், பார்க்க வேண்டியதாகவும் இருக்கின்றது.

அண்மையில் வாழைச்சேனையில் நடாத்தப்பட்ட இச்சம்பவத்தின் போது அரச பாதுகாப்புப் படையினர் கைகட்டி புதினம் பார்த்துக் கொண்டிருந்ததனை நாம் பார்க்கக் கூடியதாகவே இருந்தன. முஸ்லிம் மக்களின் சாத்வீகமான, ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை இல்லாதொழித்து விடுகின்ற ஒரு நடவடிக்கையாகவே புலிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தளத்தில் நின்று முஸ்லிம்களுடைய ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை தடுக்கின்ற முறையில் நடந்து கொண்டதால்தான் அங்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்துகின்ற நிகழ்வுகள் அமைந்தன.

உண்மையில் அரச பாதுகாப்பு பிரிவினர் இத்தகைய பாரிய அழிவுகளைத் தடுத்திருக்கலாம். ஒப்பந்தத்தின் பெயரைச் சொல்லி, கைகட்டி புதினம் பார்த்துக் கொண்டிருந்ததினால்தான் அங்கே அனைத்து நிகழ்வுகளும் நடந்தேறின. 13 உயிர்கள் அங்கே பலியிடப்பட்டிருக்கின்றன. பல கோடிக்கணக்கான சொத்துக்கள் இழக்கப்பட்டுமுள்ளன. இந்த விடயத்தில் காத்திரமாகவே பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற தன்மானமுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி நலன்களுக்கும் தமது இருப்பு நலன்களுக்கும் அப்பால் நின்று இந்தப் பிரேரணையை ஆதரித்து இருக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் இருக்கின்ற முஸ்லிம் உறுப்பினர்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கின்றது. முஸ்லிம் சமூக நலனுக்காக தமது பிரதிநிதித்துவத்தை உபயோகிக்கும் கடமையோடு பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் என்ற வகையில், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் சத்தியமாக சமூகத்தின் விசுவாசிகள் நாமென்பதை காட்டி இருக்கலாம். இதனைத் தவிர்த்து அரசாங்கத்தின் விசுவாசிகளாகத் தம்மை காட்டுவதில் செலுத்தப்பட்ட அக்கறை ஆரோக்கியமானதல்ல. உண்மையில் இந்த பிரேரணையில் நமது காத்திரமான குரலினை வெளிப்படுத்தாது அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்கும் போக்கில் நடந்து கொண்டமை சமூகத்திற்கு இழைத்த துரோகமாகவும், நமது வரலாற்றுக்கு இழைத்த துரோகமாகவும்தான் நான் இதனைப் பார்க்கின்றேன்.

எம்.முஹம்மது தலிபா நூலகர், மீராவோடை

பாதுகாப்பு அமைச்சர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நமது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும் பகுதியினர் எதிர்த்து வாக்களித்துள்ளனர். இது ஒரு தவறான அணுகுமுறைமை என்றுதான் கருதுகின்றேன்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னர் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும். முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஒன்றுபட வேண்டுமென்று கூறியவர்கள் இப்படியொரு முக்கிய தீர்மானம் வரும் போது அவர்கள் அதற்கெதிராக வாக்களித்திருப்பதானது சிந்திக்க வேண்டிய ஒரு விஷயமாகும்.

ஏனெனில் கட்சி பேதங்களுக்கு அப்பால் எல்லா முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று கூறிய இவர்கள் ஆதரிக்க வேண்டிய பகுதியை நிராகரித்து நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து இருப்பதானது மிகவும் பாதிப்பான ஒரு விடயமாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வாழைச்சேனையில் நடைபெற்ற வன்செயலில் முஸ்லிம்களை பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து அரச படைகள் தவறிவிட்டது. முஸ்லிம்களைப் பாதுகாப்பதில் தடையாக இருப்பது இந்தப், புரிந்துணர்வு ஒப்பந்தமென்றால், அவ்வாறான ஒரு உடன்படிக்கை மூலம் எதைச் சாதிக்கலாம்? முஸ்லிம்களின் நிலை என்ன? அப்படியாயின் யாருக்காக இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம்? உண்மையில் முஸ்லிம்கள் பாதுகாப்புடன்தானே இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் கூட பாதுகாப்புப் படையினர் தவறிவிட்டார்கள். எங்களைப் பாதிக்க வைத்துவிட்டனர்.

சட்டத்திற்காக மனிதனா? மனிதனுக்காக சட்டமா? என்று பார்க்கின்ற போது ஒரு சமூகத்தினை நசுக்கும் போது பாதுகாக்க வேண்டிய துப்பாக்கிகள் மௌனம் சாதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றால் அது என்ன ஒப்பந்தம்? அது ஒரு



மனிதனைப் பாதுகாக்கும் ஒப்பந்தம் போல் எனக்கென்றால் படவில்லை. அதுமட்டுமன்றி கொலை செய்யப்பட்ட எமது சகோதரர் இருவரின் மையத்தைக் கூட தமிழர்கள் தரப்பிலிருந்து தரப்படவில்லை. அதனை மீட்டெடுத்து வருவதற்கு அங்கு போனவர்கள் அரசாங்க நிர்வாகத்தில் இருந்தவர்கள் தானே. அப்படி இருந்தும் எங்களது மையத்துக்களை திருப்பித் தராது இருப்பதில் பிடிவாதமாக ஆயுதபாணிகள் இருந்தனர்.

அல்ஹாஜ் சுபையிர்

நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தது என்பது அவர்களின் பதவிகளையும், அந்தஸ்துக்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் தவிர முஸ்லிம் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு அல்ல. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட அவர்களின் தலைமைத்து



வப் போட்டிகளைப் பற்றியும் தேர்தல் ஒன்று வந்தால் தமது வெற்றியை எப்படியாக உயர்த்திக் கொள்வதென்று சிந்திக்கின்றனரே தவிர சமூகத்தைப் பற்றியல்ல.

வாழைச்சேனை சம்பவத்தின் போது பொலிஸார் சரியான நடவடிக்கையில் இறங்கவில்லை. எம்மைப் பாதுகாக்கும் விடயத்திலும் ஈடுபடவில்லை. அவர்கள் அவ்வாறு நடந்திருந்தால் அந்த அனர்த்தமே நடந்திருக் காது. எம்மை பாதுகாக்காத அமைச்சருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை வரவேற்காது அரசை பாதுகாத்து இருப்பது மக்கள் நலன் நின்ற நிலைப்பாட்டிலிருந்தல்ல என்பது வெளிப்படையானது. அதுமட்டுமன்றி நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூகத்தைப் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையை நாம் இழந்து விட்டோம்.

ஆதம்லெப்பை,

நீதவான், பொலிஸ் பொறுப் பாளர், அரச அதிகாரிகள் போன்றவர்கள் இருந்தும் எமது ஜனாஸாக்களை கொண்டு வரமுடியாது போனதும், அதனைப் பெற்றுத் தருவதற்கு வக்கற்ற அரசாங்கம் தான் இன்றைய அரசாங்கமாகும்.

எனது வீட்டில் வைத்து நான் தமிழர் ஒருவரைப் பாதுகாத்து வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பாளர், பாதிரி யார் முன்னிலையில் கையளித்தேன். ஆனால் இதற்கு அடுத்த நாள் எனது வீட்டடியில் வந்து ஒரு முஸ்லிமை கொலை செய்து விட்டு போனார்கள்.

எஸ்.எல்.எம்.ஹனிபா, ஓட்டமாவடி

ஒருபோதும் வாழைச்சேனை முஸ்லிம் மக்களைப் பாதுகாப்பதில் அரச படையினர் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக தமிழ் மக்களுக்கு எந்தவிதமான கேடும் வந்துவிடக் கூடாது என்பதில்தான் தமது அக்கறையினைச் செலுத்தினர். வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை பகுதிகளில் தான் இராணுவம் குவிக்கப்பட்டு இருந்தது. அப்ப நான் ஒரு இராணுவத்திடம் கேட்டேன், "புலிவந்து என்னச் சுட்டால்



உனது துவக்கால் புலிகயைச் சுடுவாயா? என்று அதற்கு அவன் "இல்லை" என்று சொன்னான். சத்தியமாக நாம் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்ய மாட்டோம். புலிகளின் ஒரு ரோமத்தைக் கூட எங்கள் மக்கள ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில் அவ்வளவு பயந்து போயிருக்கின்றோம். எங்களுக்குபட்டது போதும். எங்கட கண்களுக்கெதிராகவே இரண்டு மையத்துக்களை டயர் போட்டு எரித்தார்கள் இதைவிடவும் எங்களுக்கு என்ன? இதை இராணுவமும் பொலிஸும் பார்த்துக் கொண்டு தான் இருந்தனர். முஸ்லிம்களை உயிருடன் தான் பாதுகாக்கவில்லை மரணித்த மையத்தைக் கூட இந்த பொலிஸும், இராணுவமும் பாதுகாத்துத் தரவில்லையே. இந்த இரண்டு அம்சங்களும் மக்களின் மனங்களில் என்றைக்கும் காலதி காலமாக இருந்தே வரும்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை நமது உறுப்பினர்கள் என்று சொன்னால் நமது வாயில் அல்லாஹ் "கவரை" போட்டு விடுவான். ஆனால் அவர்களைப் பற்றிச் சொல்வதற்கு எதுவுமில்லை. பாராளுமன்ற கதிரைகளால் அவர்கள் இன்றைக்கு அலங்கரிக்கப்படுகின்றனர். அரசாங்கம் எங்களைப் பாதுகாப்பதில் எந்தவிதமான அக்கறையும் எடுக்கவில்லை. நீங்கள் "முஸ்லிம் குரல்" சொல்வது போல் அரசாங்கத்திற்கு திறைசேரி நிரம்பினால் சரி. அதற்கு முஸ்லிம் சமூகத்தை பலி கொடுக்கவும் தயாராகாவே இருக்கின்றது. இதற்கு கூட்டிக் கொடுக்கின்ற டப்பா மாமாவாகவே நமது அரசியல் தலைமைத்துவம் இருக்கின்றது. அவ்வளவுதான்.

---

கவடு - 02.

# முஸ்லிம் குரல்

Muslim Kural

26 - துல்ஹஜ் - 1423

28 பெப்ரவரி 2003 - வெள்ளிக்கிழமை

Chief Editor, 143, Muhandhiram Road, Colombo-3.
Tel : 0777-389127, Fax : 01-667963 E.mail : mm-s@eol.lk

## டோக்கியோவில் நடைபெறவுள்ள 6ம் சுற்று பேச்சில், முஸ்லிம்கள் தனித் தரப்பாகவே கலந்து கொள்ளல் வேண்டும்!

நமது அரசியல் அரங்கில், நமது மக்களின் குரலாக தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வரும் பேச்சுவார்த்தை மேசையில் "சமத்துவத்துடன் கூடிய தனித்துவத் தரப்பு" என்ற முஸ்லிம் தேசத்தின் அரசியல் நிலைப்பாட்டை, இனியாவது கவனத்தில் எடுக்குமாறு நமது மக்களுக்கு தலைமை தாங்கும் அரசியல் தலைமைகளைக் கோருகிறோம்! நமது மக்களுக்கு உரித்தான நியாயமான அரசியல் உரிமைகளையும் அரசியல் சுதந்திரத்தையும் மறுத்து, வெறும் மேம்போக்கான கையாளல்கள் ஊடாக, முஸ்லிம்களின் நியாயமான தேசிய இனப்பிரச்சினையை மூடி மறைக்க முனையும் அரசியல் சக்திகளுக்கு தொடர்ந்தும் துணை போக வேண்டாம் என்பதே எமது வேண்டுதலாகும்.

இலங்கையின் இன்றைய பிரதான அரசியல் பிரச்சினையானது, தேசிய இனங்களுக்கிடையிலான இனப்பிரச்சினை என்பதை நாமனைவரும் அறிவோம்! சிங்கள, தமிழ், முஸ்லிம் தேசிய இனங்களுக்கிடையிலான தேசியப் பிரச்சினையை, சிங்களவர், தமிழர்களுக்கு இடையிலான தேசியப் பிரச்சினையாக மட்டுமே சமகாலத்தில் காட்ட முயற்சிப்பதன் உள்ளார்ந்த அரசியல் அர்த்தத்தை, நமது அரசியல் தலைமைகள் இன்னும் சரியாக விளங்கிக் கொள்ளவில்லையா? அல்லது விளங்காதது போல் தொடர்ந்தும் நடித்துக் கொண்டிருக்கிறார்களா?

கடந்து போன 5 கட்ட பேச்சுவார்த்தைகளிலும் அரசாங்கத் தரப்பாக நமது அரசியல் தலைமை கலந்து கொண்டதன் ஊடாக நாம் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டு, அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்பட்டோம் என்பதை நமது மக்கள் தெளிவாக உணர்ந்து வருகின்றனர்.

விட்டுக்கொடுக்கமுடியாத நமது மக்களின் அரசியல் நிலைப்பாடுகளான தாயகம், சுயநிர்ணய உரிமை, தேசிய இன அந்தஸ்த்து போன்ற அடிப்படை அரசியல் நிலைப்பாடுகளை பேச்சுவார்த்தை அரங்கில்- அரசு, விடுதலைப் புலிகள், சாவதேச சமூகத்தின் முன்னும் ஆணித்தரமாக வலியுறுத்தும் உரமும் தீரமுமிக்க அரசியல் தலைமைகள் நமக்கு இன்றைய சூழலில் இல்லாத நிலையை நாம் அனைவரும் எதிர்கொள்கிறோம்!

சொந்த மக்களின் அரசியல் உணர்வுகளையும் அரசியல் நிலைப்பாடுகளையும் ஒன்றுதிரட்டி அந்நிலைப்பாடுகளின் அடிப்படையிலிருந்து சொந்த மக்களுக்காக பேச முன்வராத பலவீனமான அரசியல் தலைமைகளின் போக்குக் காரணமாக, ஒரு தேசத்தின் நியாயமான அரசியல் உரிமைகளை யாராவது மறுக்க முடியுமா?

தலைமைகளின் பலவீனத்தை காரணம் காட்டி, முஸ்லிம் தேசத்தின் அடிப்படை அரசியல் நிலைப்பாடுகளை மறுத்துரைக்க முன்வரும் சூழலில் - மக்களாகிய நாமே நமது அரசியலை கையேற்று வழிநடத்த வேண்டிய வரலாற்றுப்பாத்திரத்தை வகிக்க வேண்டியவர்களாகவுள்ளோம். இந்நிலையில் அரசியல் உணர்வுள்ள மக்களாகிய நமக்கு மிகப்பெரும் பணிகள் உள்ளன. இக்கடமையினை நாம் அனைவரும் ஒன்றுதிரண்டு செயற்படுத்த வேண்டியுள்ளோம்.

- அன்புடன்
பிரதம ஆசிரியர்

---

ஒரு முட்டாள் சாவாதிகாரியின் அதிகாரமிடுக்கு, கோடீஸ்வரனின் மமதை, கேள்வி கேட்க ஆளில்லாத ராசாவின் ஆணவம், இவையனைத்தும் ஒருங்கே வெளிப்பட்ட ஒரு ஆணவ அதிகாரக் குரலை அண்மையில் நமது அரசியல் அரங்கில் கேட்டோம்.

"கட்சியின் சர்வாதிகாரமிக்க தலைவராகவே நான் இருக்க விரும்புகிறேன்" என்ற குரல்தான் அது. அதனை அனைத்துப் பத்திரிகைகளும் முன்பக்கச் செய்தியாகப் போட்டு மகிழ்ந்தன. நாம் அனைவரும் வாசித்திருப்போம். சரி, பிழை பற்றி யோசித்திருப்போமா? இன்று நமக்கு உடனடியாகத் தேவை ஒரு சர்வாதிகாரமிக்க தலைவரா? என்பதுதான் எமது உடனடிக் கேள்வியாக உள்ளது.

### சொல்லைத் தவிர வேறுவழியில்லை!

அபூநிதால்

மறைந்த தலைவர் தன்னிடம் கட்சியின் அதிகாரம் அனைத்தும் குவிக்கப்பட்டிருந்தும் முக்கிய விடயங்களில் மசூராவின் அடிப்படையில் செயற்பட்டவர். மிகக் குறிப்பாக சமூக அரசியல் விடயங்களில் அனைவரதும் கருத்தினையும் அறிந்து முடிவெடுத்து வந்தவர். கட்சிக்குள் தனது சர்வாதிகாரத்தை வெளிப்படையாக வெளிப்படுத்தியவரல்ல. அவர் மறைந்து விட்டார், இப்போது....

ஆலையில்லா ஊருக்கு இலுப்பம் பூ சக்கரை. இச்சர்வாதிகாரம் வேண்டுமென்ற குரலை நான் கேட்டதும் உண்மையில் அதிர்ந்துவிட்டேன். காரணம் இன்றைய நமது சமூக நிலையில் தனித்த ஒருவர் மட்டுமே சமூகப் போக்கை தீர்மானிப்பதில் உள்ள பிரச்சினைகள் நாமறிந்ததே.

ஊர் கூடித் தூக்கினாலும் ஒழுங்காய், ஊர் போய்ச் சேருமா? என்ற சந்தேகம், சிக்கல் நிறைந்தது நமது பிரச்சினை.

"தனியே தூக்க முடியாது மகனே" என கவிஞர் மருதூர்க்கனி எழுதிய "முறிவு வைத்தியம்" கவிதையும் கடந்த கால நமது அரசியல் நிகழ்வுகளும் நமக்கு உணர்த்தி வருவதும் இதைத்தான். ஹரீசும், அன்வர் இஸ்மாயிலும், நூர்தீன் மஷூரும் "மஸூறா" சபை அமைக்கப்படல் வேண்டும் என்பதும் இதைத்தான்.

எந்தத் தனிக் கொம்பனாலும் தனியே நின்று முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பிரச்சினைகளை கையாள முடியாது. காரணம் இருக்கிறது. ஒரு பக்கம் நம்மை மிக மோசமாக நீண்ட திட்டத்துடன் கருவறுக்க காத்திருக்கும் புலிகளின் சூழ்ச்சிகள், புன்னகைகள், மரணங்கள்... மற்றது அரசாங்கத்தின் இரும்புப்பிடி.

இந்நேரத்தில் நமக்கு வேண்டியது "ஆளுமை மிக்கவர்களின் கூட்டுத் தலைமையே" ஒரு கட்சியின் சாவாதிகாரமிக்க தலைவருக்கான அதிகாரம் ஒரு சமூகத்தின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வல்ல. இந்நேரத்தில் தீர்வு - ஒரே வழி, கூட்டுத் தலைமைகளின் மிக உறுதியான அரசியல் நிலைப்பாடுதான்.

உறுதியும் மிடுக்கும் சொந்தக் கட்சிக்குள் அதிகாரம் வேண்டிய பேசும் போது மட்டுமல்ல, பிற தலைமைகளுடன் (அரசாங்கத்துடன், புலிகளுடன்) முஸ்லிம்கள் பற்றிப் பேசும் போதும் வரவேண்டும். அதுவே ஆளுமைமிக்க தலைவருக்குரிய பண்பும், அவரைத் தலைவரென ஏற்க வைப்பதுமாகும்.

இச்சர்வாதிகாரத்திற்கான குரல் வெளிப்பட்டவுடன் அது தொடர்பான எதிர்ப்புக் குரல் அவரது தலைமையே கட்சிக்குள் நிராகரித்தவர்களிடையே இருந்து மட்டும் தான் வெளிப்பட்டது. இது கட்சிப் பிரச்சினை மட்டும்தானா? அல்லது நமது சமூகம் தொடர்பானதும்தானா? என்பது பற்றி சிந்தித்திருக்கிறோமா?

இக்கருத்துத் தொடர்பாக நமது அறிஞர்கள், புத்திஜீவிகள், கல்வியாளர்கள், பத்திரிகையாளர்களிடமிருந்து எவ்விதமான மாற்றுக் குரலையும் காணவில்லை. மிகவும் ஆச்சரியப்படவைத்தது இப்போக்கு. மீண்டும் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியில் நடைபெற்ற புத்திஜீவிகளுடனான சந்திப்பிலும், புத்திஜீவிகளின் கேள்விக்குப் பதிலளிக்கையிலும் இப்படித்தான் வெளிப்பட்டுள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் இக்குரல் கண்டிக்கப்பட வேண்டியது. சமூகத்தின் பன்முகத் தன்மையையும் ஜனநாயகத்தையும் கருவறுப்பதை நோக்கமாகக் கொண்டது இக்குரல். அத்துடன் மோசமான அரசியல் பின்னடைவுக்கும் தனிப்பட்ட நயவஞ்சகர்களின் காட்டிக் கொடுப்புக்கும் இக்குரல் காரணமாக இருக்கக் கூடியதுமாகும். இக்குரலை அவர்தான் வெளிப்படுத்தினார் என்பதற்காக அல்ல இக்கண்டிப்பு. இக்குரலை யார் வெளிப்படுத்தினாலும் கண்டிக்கப்பட வேண்டியதே.

இப்பத்திரிகை 14[illegible] Muhandhiram Road, Colombo-3 இல் [illegible] இனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org